முரசு

-1993 ரூ.1




பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்
அனைத்து
காதிகிராப்ட்
அங்காடிகளில் கிடைக்கும்
DIPR/2687/MS/92/CHARI
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


பெருகூர் ஆகிறது பருகூர் ... 2
தமிழர் திருநாள்
—பேரறிஞர் அண்ணா ... 7
பொங்கல் விழா
—டாக்டர் எம்.ஜி.ஆர். ... 9
திருக்குறள் உயர்நெறி காட்டவந்த
ஒரு பொது அறநூல்
—மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர் ... 11
தைத்திங்களே தாய்த் திங்கள்!
—டாக்டர் ஔவை நடராசன் ... 12
தருமபுரி மாவட்டம் - மகளிர் மேம்பாடு ... 13
காலம் வரும் - காத்திருப்போம்!
—கவியரசு. நா. காமராசன் ... 16
தகடூர் ... 17
மாணவர்கள் தென்னை வளர்ப்பு ... 23
தமிழ் நலங்காத்த தகடூர்
—க. தியாகசீலன் ... 25
தருமபுரி மாவட்ட காவல்துறை ... 27
பருகூர் பயனாளிகள் ... 29
தொட்டில் (சிறுகதை)
—தகடூரான் ... 32
தளி ஒன்றியத்தில் ஒரு
முன்னோடித் திட்டம் ... 37
தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக் கழகம் ... 43
கிராமப்புறத் தொழில்களுக்குக்
கைகொடுக்கும் வங்கி! ... 45
தொகுதி மக்களுக்கு முதல்வர் உதவிகள் ... 49
பையூரில் பசுமைப் புரட்சிக்கு
ஓர் ஆராய்ச்சி நிலையம் ... 51
காலத்தை வென்ற காவிய நாயகன்
—கவிஞர் இளந்தேவன் ... 57
பொங்கல் பொங்குக! (கவிதை)
—பி.வி. கிரி ... 64





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

தைத் திங்கள் - 3

மலர்: 23 இதழ்: 14

16-1-1993


**தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்**




அனைவருக்கும்
'தமிழரசு' இனிய
பொங்கல் வாழ்த்துக்களைத்
தெரிவித்து
மகிழ்கிறது!
வாசகர்களுக்கு...
முகவர்களுக்கு...
விளம்பரதாரர்களுக்கு...
எழுத்தோவியங்களை
அளித்திடும்
அறிஞர் பெருமக்களுக்கு...
எங்களுக்கு என்றும்
துணையிருக்கும்
நண்பர்களுக்கு...
மீண்டும்
வாழ்த்துக்களையும்
வணக்கங்களையும்
தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

# நலத்திட்டங்கள் பல

# பெருகூர் ஆகிறது பருகூர்

மாவட்டச் சிறப்பிதழ் என்கிற போது, அம் மாவட்டத்தில் பரவலாக அரசு மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள - நிறைவேற்றப் படவிருக்கிற ஆக்கப் பணிகள் பற்றி விவரிப்பதுதான் முறை. ஆனால், அப்படிச் செய்ய இந்த ஓரிதழ்ப் பக்கங்கள் மட்டும் போதாது என்பதால், குறிப்பிட்ட மாவட்டத்தின் ஏதாவதொரு முக்கிய சட்டமன்றத் தொகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு, அந்த வகையில் விவரிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. அம் முறையில் - பருகூர் சட்டமன்றத் தொகுதியில் அரசு ஆற்றியுள்ள, ஆற்றவிருக்கிற, முக்கியப் பணிகள் இந்தப் பக்கத்தில் சுருக்கித் தரப்படுகின்றன.

பருகூருக்குச் சென்ற நம்மை ஊராட்சி ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர்களான திரு. கே. ரங்கசாமி, திரு. எம். நஞ்சுண்டன் ஆகியோரும், எரிசக்தி உதவித் திட்ட அலுவலர் திரு. எம். வேணுகோபால் முதலானவர்களும் மகிழ்ந்து வரவேற்றார்கள். நமது வருகையின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட அவர்கள் அலுவலக நேரத்திற்கு மேலாகிவிட்ட போதிலும், மற்றவர்களையும் அழைத்து வரச் செய்து அத்தொகுதி பற்றி நமக்குத் தேவையான விவரங்களை மகிழ்வுடன் மாறிமாறித் தெரிவித்தார்கள்.

''பருகூர் தொகுதி என்பது பெயராகிவிட்டது; இதில், பருகூர் ஊராட்சி ஒன்றியம் மட்டுமல்ல; மத்தூர் ஊராட்சி ஒன்றியமும் அடங்கியிருக்கிறது சார்...'' என்ற பீடிகையோடு அவர்களில் ஒருவர் பேசத் தொடங்கினார்.

தொடர்ந்து அவர்கள் அளித்த முக்கிய விவரங்கள் வருமாறு:

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி வட்டத்தில்தான் பருகூர் ஊராட்சி ஒன்றியம் அமைந்துள்ளது. இவ்வொன்றியம் மூன்று வருவாய் பிர்காக்களையும், 36 ஊராட்சிகளையும் ஒரு பேரூராட்சியை யும் உள்ளடங்கியது ஆகும்.

பருகூர் ஒன்றியத்தின் மொத்தப் பரப்பளவு 435.12 ச.கி.மீட்டர். 1981-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி இவ்வொன்றியத்தின் மக்கள் தொகை 1,31,725 ஆகும். இதில் 16,562 ஆதிதிராவிடர் மக்களும் 2,036 பழங்குடியினரும் அடங்குவார்கள்.








**நீரில்லா நிலையிருந்தும்...**

இவ்வொன்றியம் மலைப்பாங்கான பகுதி; இவ்வட்டாரத்தில் பாசன வசதியுடன் கூடிய நிலப் பரப்பு மிகவும் குறைவு; இங்கு மா, தென்னை போன்ற தோட்டப் பயிர்கள் மிகுதியாக விளைகின்றன. பெரும்பாலான மக்கள் மானாவாரிச் சாகுபடியை நம்பியே வாழ்கின்றனர். இந்த ஒன்றியத்தில், பருகூர் ஆறு என்ற காட்டாறு ஓடுகின்றது. இந்த ஆற்றின் மூலம் நிரந்தரப் பாசன வசதி ஏதும் இல்லை. இருப்பினும் இதுவரை இங்கே குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டதில்லை.

இவ்வொன்றியத்தில் அமைந்துள்ள போச்சம்பள்ளி வாரச்சந்தை தர்மபுரி மாவட்டத்திலேயே குறிப்பிடத்தக்க அளவிற்கு மிகப்பெரிய சந்தையாகும். இச்சந்தை ஓர் ஊராட்சி ஒன்றியச் சந்தையாகும். இவ்வொன்றியத்திலுள்ள சந்தூர் கிராமம் மாங்காய் ஒட்டுச் செடிகளுக்குப் பெயர் பெற்றது.

இவ்வொன்றியத்தில் உள்ள போச்சம்பள்ளியில்தான் முதன் முதலாகத் தமிழ்நாடு அரசு நிறுவனமான 'சனோலா' சூரிய காந்தி எண்ணெய் ஆலை அமைக்கப்பட்டது. மேலும், தற்போது 20 கோடி முதலீட்டில் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் கல்மெருகிடும் தொழிற்சாலையும், ரூ.28 கோடி மூலதனத்தில் கூட்டுறவு நூற்பாலை ஒன்றும் உருவாகி வருகின்றன.

**சிறுசிறு தொழிற்சாலைகள்**

தேங்காய்ப்பட்டையிலிருந்து நார் எடுக்கும் தொழில் இவ்வொன்றிய மக்களின் முக்கியத் தொழிலாக நடந்து வருகின்றது. மொத்தம் 7 நார் தொழிற்சாலைகள் இங்கே உள்ளன. 'சேம்பர் பிரிக்ஸ்' தயார் செய்யும் தொழிற்சாலைகள் மூன்று உள்ளன. கந்திருப்பம் கிராமத்தில், 'கோக்காக்' என்னும் நிறுவனம் 40 இலட்சம் முதலீட்டில் காலணிகள் தயாரிக்கும் தொழிற்சாலை நடத்தி வருகிறது.

போச்சம்பள்ளியில் 'பாக்கியம் ரேக்ஸ்' என்ற தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ரூ.10 இலட்சம் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சூலாமலை கிராமத்தில ரூ.20 இலட்சம் முதலீட்டில் கம்பளி ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை நடைபெற்று வருகின்றது.

**நன்றிக் காணிக்கை!**

**"தமிழகத்தில் உள்ள அனைத்துத் தொகுதிகளிலும்- மிகப்பெரிய இமாலய வெற்றியை வாக்காளப் பெருமக்கள் எங்கள்மீது நம்பிக்கை வைத்து, எங்கள் அரசுக்கு வழங்கியுள்ள நிலையில், அனைத்துத் தொகுதிகளையுமே எனது சொந்தத் தொகுதிகளாகக் கருதி நான் பணியாற்றுவதுதான், இன்றைய காலகட்டத்தில் என்மீது அளவு கடந்த நம்பிக்கை வைத்துள்ள தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அனைத்துத் தொகுதி மக்களுக்கும் நான் செலுத்தும் நன்றிக் காணிக்கையாகும்"**

**—மாண்புமிகு முதல்வர்**
**(பருகூர் 21.8.1991-இல் ஆற்றிய உரையிலிருந்து)**

இவ்வொன்றியத்திலுள்ள ஒரே பேரூராட்சி பருகூர் தான். பருகூர் ஜவுளி விற்பனைக்குத் தர்மபுரி மாவட்டத்திலேயே மிகவும் புகழ் பெற்ற மையமாகும். பருகூர் டெக்ஸ்டைல்ஸ் மூலம் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் மட்டுமல்ல; வெளி மாநிலங்களுக்கும் - வெளி நாடுகளுக்குங்கூட, துணிகளும் உடைகளும் அனுப்பப்படுகின்றன.

இவ்வொன்றியத்திலுள்ள அஞ்சூர், ஐகொந்தம்கொத்தப்பள்ளி மஜித்கொல்லஹள்ளி, குள்ளம்பட்டி ஆகிய ஊராட்சிகளில் தமிழ்நாடு கனிம நிறுவனம் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன; இதில் சிவப்புக் கிரானைட் கற்கள் நல்ல கிராக்கியோடு விலை போகின்றன.

பருகூர் ஒன்றியத்திலுள்ள சிறு காடுகள் சீதா மகசூலுக்கு மிகவும் புகழ் பெற்றதாக இருக்கிறது; இங்கிருந்து சீதாப்பழங்கள் பம்பாய் முதலான வடமாநில நகரங்களுக்குக் கூட மிகுதியாக அனுப்பப்படுவதுண்டு!

இரண்டாம் நிலை ஊராட்சி ஒன்றியமான பருகூர் 37 வருவாய்க் கிராமங்களும், 274 குக்கிராமங்களும் இருக்கின்றன. 185 கிராமங்களில் நகரப் பேருந்து போக்குவரத்து உள்ளது.

3 ஊரக மருந்தகங்களும், ஆரம்பச் சுகாதார நிலையங்களும், 30 பல நோக்குச் சுகாதாரப்

பணியாளர் மையங்களும், 5 கால் நடை மருந்தகங்களும், 4 கால்நடைத் துணை நிலையங்களும் இத்தொகுதியில் அமைந்திருப்பதால் 'நோயற்ற வாழ்வே தொகுதி மக்களின் குறைவற்ற செல்வமாக இருக்கிறது.

நீரின்றி உலகு அமையாதல்லவா, இப்பகுதியில் -மட்டும் 118 மேனிலை நீர்த் தேக்கத் தொட்டிகளும், 731 கைப்பம்புகளும், 5 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளும் 365 இறைவைக் கிணறுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மண் சாலைகள், கப்பிச் சாலைகள், தார்ச் சாலைகள் என - இந்த ஒன்றியத்தில் மொத்தம் 188 கி.மீ. நீளத்திற்கு ஊராட்சி ஒன்றியச் சாலைகள் நீண்டு நெளிந்து நெடும் பயணம் செல்கின்றன.

**படிப்பும் எழுத்தும்**

'கல்வியில்லாத பெண்கள் களர்நிலம் என்பதை உணர்ந்து கொண்ட பெண்கள் அதிகமிருப்பதால் - இந்த ஒன்றியத்திலே மட்டும் 30 மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேனிலைப் பள்ளிகள் என 150 பள்ளிகளும் - சமூகக் கல்வி நிலையங்கள் 36-ம் இருந்தபோதிலும் இத் தொகுதி மக்களில் 40 சதவிகித மக்களே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கின்றனர்.

பருகூர் ஊராட்சிஊராட்சி ஒன்றியத்தைப் பொருத்தவரை அளவில் சிறியதே எனினும் - அத்தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் ஆகிவிட்ட காரணத்தால் அதுபெற்ற கீர்த்தி பெரியதாகி விட்டது.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், அஞ்சல் நிலையங்கள், தொலைபேசி நிலையங்கள், வங்கிகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், காவல் நிலையங்கள், நூலகங்கள், அரிசி ஆலைகள், திரைப்பட அரங்குகள், மதிய உணவு மையங்கள், சத்துணவு மையங்கள், ஆதிதிராவிடர் குடியிருப்புகள் என எல்லாம் உள்ள தன்னிறைவுத் தொகுதியாக இத் தொகுதி விளங்குகிறது.

இங்கு மட்டும் 43 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன; குடும்ப அட்டைதாரர்களோ 26,721 பேர்.

மாங்கனி, திராட்சை உற்பத்தி இங்கே அதிகம். விவசாய விதை மையம், விவசாய எண்ணெய் வித்துக்கள் மையம், வேளாண்மைச் செய்தி நிலையம், வேளாண்மைக் கிடங்குகள் ஆகிய எல்லாம் இங்குண்டு. இங்கே, வேர்க்கடலை விளைச்சலும் அதிகம்.

இத் தொகுதியிலே இருக்கின்ற 230 மொத்த மதிய உணவு மையங்களின் மூலம் - 5,675 சிறுவர் சிறுமியர் பயனடைந்து வருகிறார்கள்.

**அலுவலகம்**

தம்முடைய தொகுதியே ஆயினும், வேலைமிகுதி காரணமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கடி சென்றுவருவதென்பது இயலாதல்லவா? இதனாலேயே ஆங்கோர் அலுவலகம் கட்டியிருக்கிறார். அந்த அலுவலகப் பொறுப்பாளராக உள்ள திரு. ஏ. கோவிந்தராசன் மூலம் பருகூர் தொகுதியின் அவ்வப்போதைய நிலைமையை - மக்களின் குறைபாடுகளை அவ்வப்போது அறிந்துகொள்கிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் மட்டுமன்றித் தன் சொந்தப் பணத்திலிருந்தும் தொகுதி மக்களுக்கான நலத்திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்ற





அலுவலகம்

இந்த அலுவலகமே பெரிதும் உறுதுணை புரிந்து வருகிறது.

### மேலும் பல திட்டங்கள்

''மேலும் பல திட்டங்கள் பருகூர் தொகுதியிலே நிறைவேற்றப்பட விருக்கின்றன'' என்று கூறிய பருகூர் ஊராட்சி ஒன்றியத்தின் திட்ட வளர்ச்சி அலுவலர் ''எல்லா வகையிலும் இந்த ஒன்றியம் தன்னிறைவு பெற்ற ஒன்றாகவே ஆகிக்கொண்டு வருகிறது'' எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

''இன்னும் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் என்றால் 1992- 93-லா ? அவற்றையும்தான் சொல்லுங்களேன்?'' என்று நாம் கேட்டோம். போட்டி போட்டுக் கொண்டு பதில் சொல்ல ஆரம்பித் தார்கள் அவர்கள்.

அந்தப் பதில்களின் தொகுப்பு இதுதான்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், பருகூர் சிறப்புக் கோட்டத்தில் 500 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டமொன்று நிறைவேற்றப்படவிருக் கிறது.

மின்வார்ரியத்தின் சார்பில் இங்கே உதவி செயற் பொறியாளர் அலுவலகக் கட்டடம் ஒன்று - 3.31 இலட்சம் ரூபாய் செலவில் உருவாகப்போகிறது.

600 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அன்னை சத்தியா சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பல்தொழில் பயிலகம் ஒன்று துளிர்க்கிறது.

தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தால் 40 இலட்சம் ரூபாய் செலவில் பாடநூல் கிடங்குகள் இரண்டும், 15 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு ஊழியர் குடியிருப்பும் உருவாகவிருக்கிறது.



துவளாத தொழில்வளர்ச்சி காணும் திட்டத்தின் கீழ் 900 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில்- பர்கூர் தொகுதியில் உள்ள செலப் பட்டி, பாரண்டபள்ளி ஆகிய கிராமங்களில் தொழில் வளாகம் ஒன்று தலைதூக்கி வருகிறது. தொழிற்பேட்டை ஒன்றும் ஏற்பட விருக்கிறது.

75 இலட்சம் ரூபாயில் அரசினர் மகளிர் தொழிற்கல்வி நிலையமொன்று கூட்டுறவுத் துறை மூலம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

அரசு பொறியியல் கல்லூரி, ரூபாய் 900 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படுகிறது.

22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகளிர் மேம்பாடு கருதி தையல், உடை தயாரிப்பு போன்றவையும் உள்ளடக்கியதாக அன்னை சந்தியா கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைக் கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்



• ஒரு மனிதனுடைய சொந்தத்துக்காக என்று ஒன்று இருக்குமானால், அது, அவன் இறந்தபின் அவனை மற்றவர்கள் மறக்காமல் புகழ்ந்து பேசுவதுதான்.

—தந்தை பெரியார்



பட்டுள்ளன. இதற்காக 13 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. 22 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

நகர வளர்ச்சித் துறையினரால் மாதிரி கிராமம் ஒன்றும் - திறமை மிக்க கிராமப்புற மாணவ மாணவிகளுக்காக, கல்வித்துறையால் உறைவிட மாதிரிப் பள்ளியொன்றும் கவின்பெறவிருக்கிறது. கிருஷ்ணகிரியில், மகளிர் கல்லூரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் மூலம் கல் மெருகூட்டும் தொழிற்சாலையொன்று 20 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பருகூர் தொகுதியில் செயல்படவிருக்கிறது; இதற்கான கட்டுமானப் பணிகள் இம்மாத இறுதிக்குள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. கவர்ச்சி மிக்க கறுப்பு, கிரே கிரனைட் கற்கள் இங்கே கண்ணாடி போல் ஆக்கப்படும்; இத் தொழிற்சாலை மூலம் ஆயிரக்கணக்கானோர் இப்பகுதியில் வேலைவாய்ப்புப் பெறுவார்கள்.

39 எக்டேர் நிலத்தில், சமூக நலக் காடுகள் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது; இதற்காகக் கருவேல், புங்கை, முருங்கை, தேக்கு, கத்திவேல், சூபாபுல் கன்றுகள் ஏராளமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

உலோக அடுப்புகள் 400 பேருக்கும், சூரிய அடுப்புகள் 10 பேருக்கும் வழங்கப்படவிருக்கின்றன. 1992-93-இல், சாண எரி வாயு அடுப்புகள் ஆயிரம் பேருக்குத் தருவது குறியீடு எனினும், இதற்குள்ளாகவே 300 பேருக்கு மேல் அளிக்கப்பட்டுவிட்டது.

ஜகதேவி காலனி என்ற கிராமத்தில் காற்றாலை அமைக்க ரூ.52,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**எளியோர்க்கு நிதியுதவிகள்**

முதியோர் உதவித் தொகை, கடந்த ஆண்டில், 844 பேருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தின் மூலம் திருமணக் கடனுதவி 9 பேருக்கு 45 ஆயிரம் ரூபாயும் - முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு திட்டத்தின் மூலம் 400



பேருக்கு 1.2 இலட்சம் ரூபாயும் சென்ற ஆண்டில் மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறெல்லாம் - திட்டங்கள் பல பெருகி, மெருகேறும் தொகுதி ஆகி வருகிறது பருகூர் சட்டமன்றத் தொகுதி. குறையேதுமின்றி, மன நிறைவோடு வாழ்ந்து வருகிறார்கள் இப்பகுதி மக்கள்.

[பருகூர் தொகுதியின் மற்றொரு ஊராட்சி ஒன்றியமான மத்தூர் பற்றிய வளர்ச்சிப் பணிகளின் தொகுப்புக் கட்டுரை, அடுத்த இதழில்.]

- ராஜூ.

## உங்கள் பிரதிநிதி!

**''இந்தியத் துணைக்கண்டத்தில் - திறமைக்கும், நேர்மைக்கும், வளர்ச்சிக்கும், உயர்வுக்கும், லஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் எடுத்துக்காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே எனும் பெயரெடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும். தமிழகம் தலைநிமிர்ந்து, தன் தனித்தன்மையோடும், தனிச் சிறப்போடும் திகழ உங்கள் பிரதிநிதியாக என்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறேன்''.**

**-மாண்புமிகு முதல்வர்**
**(பர்கூரில் 21.8.1991-இல் ஆற்றிய உரையிலிருந்து)**



# தமிழர் திருநாள்!

## பேரறிஞர் அண்ணா

இஃது பொங்கற் புதுநாள்! தமிழர் திருநாள்; அறுவடை விழா! உழைப்பின் பெருமையை உணர்ந்து நடத்தப்படும் நன்றி அறிவிப்பு விழா! என்ற இந்த எண்ணமே மேலோங்கி நிற்கிறது; பெருமிதம் தருகிறது; மகிழ்ச்சி வழிகிறது; அகமும் முகமும் மலருகிறது; வாழ்வின் பொலிவு துலங்கித் தெரிகிறது.

இந்த உலகத்தின் எழில் யாவும் பொய்யல்ல, மெய்! மெய்! எனும் உணர்வும், அந்த எழிலினை





யும் பயன்தனையும் நுகர்ந்திடவும், வளர்த்திடவும் முனைதல் மாந்தர் கடன் என்ற மெய்யறிவும், அந்தக் கடமையினைச் செம்மையாய்ச் செய்து முடிக்க ஆற்றல் மிகவேண்டும்-அவ்வாற்றல், கூட்டு முயற்சியினால் மிகுந்த சிறப்பெய்தும் என்றதோர் நல்லறிவும் இருள் நீங்கி ஒளி காண்போர் இதயம் மலராகி இன்புற்றிருப்பதுபோல், நல்வாழ்வு தனைக் குலைக்கும் நச்சரவு போன்ற நினைப்பு களும், நிலைமைகளும், நிகண்டுகளும், அமைப்பு களும், நீடித்திருக்கவிடல் நன்றல்ல, நலம் மாய்க் கும் என்பதறிந்து, அறிவுக் கதிரினையே எங் கெங்கும் பரவச் செய்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடவே இயற்கை நீதி எனக்கொண்டு பணிபுரியும் ஆர்வமும் பெற்றிடப் பயன்படும் இந்தப் பொங்கற் புதுநாள்.

இயற்கைச் செல்வங்கள் என்னென்ன இங் குண்டு; அவை தம்மைப் புத்துலக நுண்ணறிவால் மேலும் பலன் அளிக்கும் விதமாக, திருத்தி அமைத்திட என்னென்ன முறை உண்டு என்ப தெல்லாம் எண்ணி எண்ணி மகிழ்ந்திடலாம். இந்நாள் நமக்களிக்கும் நற்கருத்தைப் புரிந்து கொண்டால், புனலாடிப் பொன்னார் இழை அணிந்து பொட்டிட்டுப் பூமுடித்து, பாற்பொங்கல் சமைத்து அதில் பாகுகலந்து, பாளைச் சிரிப் புடனே பரிவுமிக்காள் தந்திட, சுவைத்திட இதழி ருக்க வேறு தரும் விந்தைதான் எதுக்கோ என்று கேட்டிட இயலாமல், குறும்புப் பார்வையினால் அவன் கூற, பெற்றோர் அதுகண்டு பேருவகை தான் கொள்ள, இல்லமுள்ளார் எல்லோரும் இன் புற்று இருந்திடுதல் பொங்கற் புதுநாளின் பாங்கு; மறுக்கவில்லை; ஆனால் முழுப் பாங்கு என்ற தனை மொழிந்திட மாட்டேன் நான்; தித்திக்கும் சுவையுடனே, சிந்திக்கவும் வைக்கும் எண்ணங்கள் பற்பலவும் பொங்கி வருவதுதான் இந்நாளின் தனிச்சிறப்பு. முழுப்பாங்கு. மலரின் எழில் கண்டு மகிழ்வது மட்டும் போதாது, மணம் பெறவேண்டு மன்றோ!

அதுபோன்றே பொங்கற் புதுநாளன்று மனை தொறும் மனைதொறும் காணப்படும் கவர்ச்சிமிகு கோலம்-புறத்தோற்றம்-கண்ணுக்கு விருந்தாகிறது. ஆனால் அதுமட்டும் போதாது; கருத்துக்கும் விருந்து வேண்டுமன்றோ! உளது; உணர்பவர் களுக்கு உணர்பவர்களே பொங்கற் புதுநாளின் முழுப்பயனையும் பெற்றவராவர். உடன் பிறந் தோரே; நீவிர், அந்நன்னோக்கத்துடன் இத்திரு நாளின் தன்மையினை உணர்ந்து பயன்பெற வேண்டுமெனப் பெரிதும் விழை கின்றேன்.

(1968 உலகத் தமிழ் மாநாடு விழா மலரிலிருந்து...)





# பொங்கல் விழா

## டாக்டர் எம்.ஜி.ஆர்



தமிழக மக்கள் கொண்டாடும் விழாக்களில் பொங்கல் திருநாள் தனிச் சிறப்புமிக்கதாகும். உழைப்பே உயர்வு தரும்என்பதையும், உழைப்பின் பயனை அனைவரும் பகிர்ந்துண்ணுவதே தமிழகத்தின் பண்பாடு என்பதையும் உலகறியக் கூறிடும் விழாவே பொங்கல் விழா.

உழவரும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளும் தாங்கள் விளைவித்த செல்வங்களைச் சமுதாயத்துக்கு உரிமையாக்கிடும் சமத்துவ விழா இது. இயற்கை அளிக்கும் வளம் அனைவருக்கும் பொது என்பதை மையக் கருத்தாகக் கொண்டுள்ள திருநாள், பொங்கல் திருநாள்.

பொங்கல் திருநாள் போதிக்கும் நற்கருத்துக்கள் நமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் தத்துவங்கள் ஆகும்.

பல்வேறு ஆற்றல் பெற்றவர்கள் தங்களுடைய திறமைகளையும் உழைப்பையும் பொது நன்மைக்காக ஒப்படைக்கின்ற ஒரு கூட்டு முயற்சியே இன்றைய தேவை என்பதே பொங்கல் திருவிழாவின் அடிப்படை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நாட்டு முன்னேற்றத்துக்கான பணிகளிலும், நம்மை விட நலிந்துள்ள மக்களின் துயர்களைப் போக்குவதிலும் கூட்டு முயற்சியோடு நாம் இன்னும் நம்மை முழு மூச்சுடன் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ்வகையில் அரசின் திட்டங்களை நிறைவேற்றுகிற பொறுப்புக்களை ஏற்றுள்ளவர்களின் கடமை மகத்தானதாகும்.

''உழைப்பே உயர்வுதரும்''
''உழைப்போம், உயர்வோம்''
''உழைப்போரே உயர்ந்தவர்''
''உழைப்பவராலே உலகம் உயர்ந்திடும்''

என்கின்ற சீரிய இலட்சிய முழக்கங்களை நெஞ்சில் பதிய வைத்திடும் தமிழர் திருநாள் பொங்கல்!

# தருமபுரி விற்பனைக்குழு, தருமபுரி-636 702.

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் பயன்கள்:**

**விவசாயிகட்கு:**

1. சரியான எடை
2. உடனடிப் பணம்
3. போட்டி விலை
4. எவ்விதப் பிடித்தமும் இல்லை
5. மறைமுக ஏலம்
6. இலவசச் சேவை
7. இலவசத் தரம் பிரிப்பு

**வியாபாரிகட்கு:**

1. ஒரே இடக்கொள்முதல்
2. தரமான தேர்ந்தெடுப்பு
3. குறைந்த மேற்செலவு
4. மறைமுக ஏலம்
5. இலவசத்தரம் பிரிப்பு
6. இலவசச் சேவை
7. சரியான எடை

**பொருளீட்டுக் கடன்:**

விவசாயிகளின் விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்காத பட்சத்தில் ஓசூர், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, ஊரகக் கிட்டங்கிகளில் விளைபொருட்களை இருப்பு வைத்து 75 சதவிகிதம் கடன்பெற வசதி.

1. கடனுக்கு முதல் மாதம் வட்டி கிடையாது.
2. 2-ஆம் மாதம் முதல் 6-ஆம் மாதம் வரை 12 சதவிகிதம் தனி வட்டி வசூலிக்கப்படுகிறது.
3. வேறு எவ்விதக் கட்டணமும் கிடையாது.
4. அதிகபட்சம் ரூ.10,000/- வரை கடன் வழங்கப்படுகிறது.

**இயங்கும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்:**

1. தருமபுரி
2. காவேரிப்பட்டினம்
3. கிருஷ்ணகிரி
4. ஓசூர்
5. கெலமங்கலம்
6. தேன்கனிக்கோட்டை
7. இராயக்கோட்டை
8. பர்கூர்
9. பாலக்கோடு
10. பாப்பாரப்பட்டி
11. பென்னாகரம்
12. கம்பைநல்லூர்
13. அரூர்
14. பாப்பிரெட்டிப்பட்டி
15. ஊத்தங்கரை
16. போச்சம்பள்ளி

**ந. நடராஜன், பி.எஸ்சி.,(வே)**
இணை வேளாண்மை இயக்குநர்/
தனி அலுவலர்

**கா. கணேசன்,எம்.எஸ்சி.,(வே)**
உதவி வேளாண்மை இயக்குநர்/
செயலாளர்

# திருக்குறள், உயர்நெறி காட்ட வந்த ஒரு பொது அறநூல்





**மாண்புமிகு நிதியமைச்சர்**
**டாக்டர் நாவலர்**

**தி**ருக்குறள், தண்டமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கிய, நன்னெறிச் சான்றோர்களில், அறிவிலும், ஆற்றலிலும் தகுதியிலும், திறமையிலும் நனிசிறந்து விளங்கிய சீரியோரான திருவள்ளுவப் பெருந்தகையாரால், இயற்றப்பட்டது. அது உலகம் உய்யும் பொருட்டு, உயர்நெறி காட்ட வந்த ஒரு பெரும் பொது அற நூலாகும்.

திருக்குறள், ஒரு குறிப்பிட்ட நாட்டினர்க்கோ, சமயத்தினர்க்கோ, இனத்தினர்க்கோ, வகுப்பினர்க்கோ, குழுவினர்க்கோ, நிறத்தினர்க்கோ, மொழியினர்க்கோ, இயக்கத்தினர்க்கோ உரிமையுடைய ஒரு நூல் அல்ல. அது, உலகம் தழுவிய மக்கள் எல்லோராலும் பொதுவாக ஏற்றுக் கொள்ளத்தக்கதாய், போற்றுவதற்குரியதாய், பின்பற்றத் தக்கதாய் அமைந்த பெற்றியினை யுடையதாகும்.

திருக்குறள் உலக மக்கள் அனைவர்க்கும் பொதுப்படையாக அமைந்த 'பொதுநூல்' என்று பெயர் பெற்றது. உலகோர் போற்றிப் புகழுவதற்குரிய 'பொதுமறை நூல்' என்னும் பெருமையுடையது. மக்களின் வாழ்வியலைப் பற்றிக் கூறவந்த 'வாழ்வியல் நூல்' என்னும் சிறப்புடையது. எல்லா மக்களுக்கும் வாழ்க்கை வழிகாட்டியாகத் திகழக் கூடிய 'வாழ்க்கை வழிகாட்டி நூல்' என்னும் பெருமை பெற்றது. மக்கள் அனைவர்க்கும் அறநெறி கூற வந்த 'அறநெறிநூல்' என்னும் புகழ் பெற்றது. எல்லார்க்கும் அன்பு நெறியை அறிவுறுத்த வந்த 'அன்பு நெறிநூல்' என்னும் சிறப்புப் பெற்றது. மக்கள் பலர்க்கும் நீதி நெறிமுறைகளைத் தெளிவுபடுத்த வந்த 'நீதிநூல்' என்னும் பெருமைக் குரியது. உலகோர்க்குப் பண்பாடுகளைப் புகட்டவந்த 'பண்பாட்டு நூல்' என்னும் பெயர்பெற்றது. அனைவர்க்கும் பொருளியல் விளக்கம் தரவந்த 'பொருளியல் நெறி நூல்' என்னும் சிறப்புக்குரியது. நாட்டு மக்கள் அனைவர்க்கும் அரசியல் நெறிமுறைகளை அறிவுறுத்தவந்த 'அரசியல் நெறிநூல்' என்னும் பெருமை வாய்ந்தது. உலகோர்க்கு ஒழுக்க மேம்பாடுகளைக் கற்பிக்க வந்த 'ஒழுக்க நூல்' என்னும் புகழ் வாய்ந்தது. மக்களுக்கு இன்பவியலைப் பற்றிக் கூறவந்த 'இன்பவியல் நெறிநூல்' என்னும் சிறப்புப் பெற்றது. அறிஞர் பெருமக்களால், என்றும் அழியாச் சிறந்த இலக்கிய மாகப் புகழுவதற்குரிய 'பேரிலக்கிய நூல்' என்னும் பெருமை வாய்ந்தது.

தமிழகம் வள்ளுவப் பெருந்தகையாரைப் பெற்றெடுத்து, உலகத்திற்கே தந்தது என்றும், அந்தச் செயலுக்குக் கைமாறாக, வான் புகழைத் தமிழகம் உலகத்திடமிருந்து பெற்றுக் கொண்டது என்றும், புதுமைக் கவிஞர் பாரதியார் பெரிதும் வியந்து, 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடியுள்ளார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், 'தெள்ளுதமிழ் நடை சின்னஞ்சிறிய இரண்டடிகள், அள்ளு தொறுஞ்சுவை உள்ளுந் தொறும் உணர்வாகும் வண்ணம், கொள்ளும் அறம்- பொருள்- இன்பம் அனைத்தும் கொடுத்த திருவள்ளுவனைப் பெற்ற தாய்பெற்ற தேபுகழ் வையகமே!' என்று புகழ்ந்துரைத்துள்ளார்.

சங்ககாலத் தமிழ் இலக்கிய நூல்கள் எல்லாம், ஆசிரியப் பாக்களாலும், வஞ்சிப் பாக்களாலும், கலிப்பாக்களாலும், பரிபாடலாலும், நேரிசை இன்னிசை பஃறொடை வெண்பாக்களாலும் விரிந்தும், பரந்தும், நெடியனவாகவும் நீண்டும் திகழ்வனவாகும். ஆனால், திருக்குறளோ மிகச் சுருங்கிய அளவில், ஏழு சீர்களைக் கொண்டதாக, ஒன்றேமுக்கால் அடியில் விளங்கும் குறட்பாக் களையே கொண்டதாகும். படிப்போர் உள்ளத்தில் ஒவ்வொரு குறளின் சொல்லும், பொருளும், அவற்றின் சுவையும், பயனும் எளிதாக, என்றென்றும் படிய வேண்டும் என்ற சீரிய குறிக்கோளுடன்தான், வள்ளுவப் பெருந்தகையார், திருக்குறளை இயற்றித் தந்துள்ளார்.

'திரு' என்ற சொல் தமிழில் பத்தொன்பது வகையான பொருள்களை உணர்த்தும் சிறந்த ஒரு சொல்லாகும் என்பர். பத்தொன்பது வகையான சிறந்த பண்புகளையும் உள்ளடக்கிய அடைமொழியைப், பிற்காலத்தவர் குறளுக்கு இட்டிருப்பதற்குக் காரணமே, அதன் தன்னேரில்லாத் தனிச் சிறப்புக் கருதியேயாகும். திருக்குறளுக்கு முதலில் 'முப்பால்' என்ற பெயரும், பின்னரே 'அறம்', 'திருக்குறள்', 'பொதுமறை', 'பொய்யாமொழி' போன்ற பெயர்களும் ஏற்படலாயின என்று, ஆராய்ச்சி அறிஞர்கள் கூறியுள்ளனர்.

**திருவள்ளுவர் ஆண்டு 2024 தொடக்கத்தையொட்டி வெளியிடப்படுகிறது...**

# தைத்திங்களே தாய்த்திங்கள்!

டாக்டர் ஔவை நடராசன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்



தவழ்ந்தாடும் பனியோடு தமிழர் நெஞ்சில்
தவழவந்த தைத்திங்கள்! தமிழர் வாழும்
புவியெல்லாம் இன்றைக்குப் புதுமைப் பொங்கல்!
பொங்கிவரும் காவிரியின் கரையோரத்துக்
குவிகின்ற நெற்கதிர்கள்; இஞ்சி மஞ்சள்
கணுவில்லாக் கதலிகளும், கணுக்கரும்பும்
இவையெல்லாம் தரும்திங்கள் ஆத லாலே
இத்திங்கள் தாய்த்திங்கள் என்று ரைப்போம்!

நெல்விளைத்து உயிர்வளர்த்து இந்த மண்ணின்
நெடும்புகழை வரலாற்றைக் காத்த கைகள்;
கல்லுடைத்தும்; கட்டடங்கள் பலஅ மைத்தும்
கவினார்ந்த கணவாய்கள் சிற்றூர்ச் சாலை
நல்வகையால் வழங்கியவர் ஏழை யென்னும்
நலிவுநிலை மாற்றுதற்குச் சூளு ரைப்போம்!
எல்லோரும் எல்லாமும் பெறுவ தற்கே
ஏறுபோல் நடையிடுவோம்! ஏற்றம் காண்போம்!

கதலிகளும் செங்கரும்பும் கறந்த பாலும்
கற்கண்டும் தெளிதேனும் கலந்து வைத்தே
இதயத்தால் புத்தரிசிப் பொங்க லிட்டே
இனிய தமிழ் நாட்டினர்கள் மகிழும்வேளை
பொதியமலைத் தீந்தமிழை; தமிழர்வாழ்வை
பண்பாட்டை, கலைமொழியைக் காத்துநாளும்
புதிய ஒளி, புதிய வழி, பொதுமை வாழ்வு
பெற்றிடவே சூளுரைப்போம்! வெற்றி காண்போம்!



# தருமபுரி மாவட்டம்

# மகளிர் மேம்பாடு



**த**மிழக அரசின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்று, பெண்களின் முன்னேற்றமாகும். பெண்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகத் தமிழக அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்களில் ஒன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.

இத்திட்டத்தின் மூலம் பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதுடன் அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் பொது அறிவினையும் மேம்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் என்னும் அரசு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப் படுகிறது.

**தருமபுரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுக்காக ஒரு தன்னிகரற்ற திட்டம், ரோம் நாட்டிலுள்ள 'பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின்' (International Fund for Agricultural Development) - IFAD) உதவியுடன் *1989*-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றம் குறித்து திட்ட அலுவலர் திரு. ஏ. இராமதாஸ் அவர்களை நேரில் சந்தித்தபோது கூறினார் -

''இந்தத் திட்டம் ஆசியாவிலேயே - அதிலும் குறிப்பாக இந்தியாவில் தருமபுரி மாவட்டத்தில்தான் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமே, பொருளாதாரத்தில் பின்தங்கிய மகளிரை முன்னேற்றுவதாகும். கிராம அளவில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் மகளிர் அனைவரும் குழுக்களாக அமைந்து, தங்களது முன்னேற்றத்திற்காக ஒத்துழைத்து, முன்னேறுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இந்தத் திட்டத்தில் *15* முதல் *20* பெண்கள் இணைந்து குழுக்களாகச் செயல்படுகின்றனர். இவ்வாறு பெண்கள் குழுக்களாக இணைந்து செயல்படுவதால் அவர்களது பொதுப் பிரச்சினைகளையும் தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளையும் தங்களுக்குள் விவாதித்து தீர்த்துக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

''மேலும் குழுவில் உள்ள பெண்கள் எந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்று தாங்களாகவே முடிவு செய்ய இயலுகிறது. அரசு சாரா அமைப்புகளின் மூலம் (Non Governmental Organisation) இந்தக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, இவற்றின் சமூக பொருளாதார முன்னேற்றம் மெதுவாகவும் படிப்படியாகவும் உயர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

'மகளிர் குழுக்கள் அமைப்பதோடு மட்டுமன்றி சமூக நலத் திட்டங்கள் குறித்து பெண்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதும், சுற்றுப்புறச் சுகாதாரம் பற்றி எடுத்துக்கூறுவதும் இந்தத் திட்டத்தின் மற்றொரு குறிக்கோளாகும்.'

குழுவின் சேமிப்பு நிதிக்காக, முறையாகச் சேமிப்பு செய்யும் பழக்கம் குழு உறுப்பினர்களிடையே வலியுறுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மகளிர் குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் ரூ.*10* அல்லது *15* சேமிப்புக்கு ஒதுக்க வேண்டும். இவ்வாறு சேமிக்கப்பட்ட பணம் குழுவின் பெயரில் வங்கிகளில் போடப்படுகிறது.






ஒவ்வொரு சேமிப்புக் குழுவிலும் 25 முதல் 30 உறுப்பினர்கள் இருப்பர். 18 முதல் 55 வயதுக்குள் இருக்கும் மகளிரே, அதிலும் குறிப்பாக, திருமணமான பெண்களே இந்தத் திட்டத்தில் சேர அனுமதிக்கப்படுவார்கள்.

குழு உறுப்பினர்களது சொந்த அவசரத் தேவைகளுக்காகச் சிறு கடன்களைக் குழு சேமிப்பு நிதியிலிருந்து கொடுத்து உதவுவது இத்திட்டத்தின் மற்றொரு சிறப்பு அம்சமாகும். வட்டி விகிதத்தையும் கடனை அடைக்கும் காலக் கெடுவையும் குழுவே தீர்மானிப்பதால் கிராமப் பெண்கள் தங்களது அவசரத் தேவைகளுக்காகத் தனி நபர்களிடம் மிக அதிக வட்டியில் கடன் பெறுவது தவிர்க்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் இது வரை 795 மகளிர் குழுக்கள் உருவாக்கப்பட்டு இதன்மூலம் 19,431 பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் குழுக்கள் ரூ.33.88 இலட்சம் தொகையைச் சேமிப்பாக வங்கிகளில் போட்டிருக்கிறது.

**ஒவ்வொரு குழுவிலும் ஒரு ஊக்குநர்**

ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு ஊக்குநர் நியமிக்கப்படுவார். இவர் அந்தக் குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பதோடு, குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும். இந்த ஊக்குநருக்கு IFAD திட்டத்தின் மூலம் மாதம் ரூ.180 நன்கொடையாக அளிக்கப்படுகிறது. அரசு சாரா அமைப்புகளின் மூலம் இந்த ஊக்குநர்களுக்குச் சிறந்த முழுமையான பயிற்சி அளிக்கப்படும். ஊக்குநர்களின் பணியைக் கண்காணிக்க 12 முதல் 15 ஊக்குநர்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் நியமிக்கப்படுவார். இந்த மேற்பார்வையாளர்கள் பெண்கள் குழுக்களை நல்ல முறையில் இயங்கச் செய்வதுடன் கிராமங்களிலுள்ள எல்லாக் குழுக்களும் முன்னேற்றம் அடைய வழிவகை செய்கிறார்கள்.

பட்டப்படிப்பு படித்த பெண்களே மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு மாதம் 1,300 ரூபாய் நிலையான ஊதியமாக வழங்கப்படும். மகளிர் குழுக்களுக்கும் திட்டத்துக்கும் இடையே ஒரு தொடர்பாளராக இருந்து செயல்படுவதும் மேற்பார்வையாளர்களின் ஒரு முக்கியப் பணியாகும்.

## மலைவளமும் வனவளமும்

தமிழ்நாட்டின் வடஎல்லையில் அமைந்திருக்கின்ற தருமபுரி மாவட்டத்தில்தான் கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்குத் தொடர்ச்சி மலையும் கூடுகின்றன.

இம்மாவட்டம் முழுவதுமே உயரமான அல்லது தாழ்வான குன்றுகள் தலைதூக்கி நிற்கின்றன; குன்றுகள்தோறும் கோயில்கள் காணப்படுகின்றன.

தருமபுரி மாவட்டம் வனவளம் மிக்கதும் ஆகும்; மாவட்டத்தின் மொத்தப் பரப்பான 9,645 ச.கி.மீட்டரில், 1,700 ச.கி.மீட்டர் நிலப்பரப்பில் காடுகள்தான்!

**கடன் உதவி**

குழு உறுப்பினர்களின் வருகை சேமிப்பு அளவு ஆகியவற்றைக் கண்காணித்து, குழுக்கள் நிலையான வளர்ச்சியை அடைந்த பிறகு (சுமார் 6 மாதங்களுக்குப் பிறகு, பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் மானியத்துடன் தருமபுரி மாவட்டத்திலுள்ள இந்தியன் வங்கியின் மூலம் இக்குழுக்களுக்குக் கடன் உதவி அளிக்கப்படுவதாகத் திட்ட அலுவலர் கூறினார். இத்திட்டத்தின் கீழ் விவசாயம், வேளாண் காடு வளர்ப்பு, தோட்டக்கலை, பட்டுப் பூச்சி வளர்ப்பு, பூச்செடி வளர்த்தல், கால்நடை மற்றும் கிராமக் கைத்தொழில்கள் போன்ற நிலம் சார்ந்த தொழில்களுக்கு மகளிர்க்குக் கடன் உதவி வழங்கப்படுகிறது. மேற்கண்ட தொழில்கள் சம்பந்தப்பட்ட துறையின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மானியமாக வழங்கப்படும் தொகை, பயன்பெறுபவரின் பெயரில் கடன் வழங்கப்படும் வங்கியிலேயே வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டு, கடன்தொகை முழுமையாகச் செலுத்தப்பட்டபின் மானியத்தொகை பயனாளிக்கு வழங்கப்படும். இந்த மானியத் தொகையின் மூலம் பெறும் கூடுதல்

வட்டி, பயனாளிகளின் கடன் தொகையிலிருந்து கழிக்கப்படுகிறது.

குழு உறுப்பினர்களுக்குச் சம்பந்தப்பட்ட துறையின் மூலம் 2 அல்லது 3 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும். மேற்கொள்ளப்படும் தொழிலுக்கு ஏற்பப் பயிற்சியின் கால அளவும் மாறுபடும்.

**திட்ட ஒருங்கிணைப்புக் குழு**

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகவும், மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் திட்ட அலுவலரைச் செயலாளராகவும் கொண்டு ஒரு திட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருவதாகக் கூறினார் திட்ட அலுவலர் திரு. இராமதாஸ். இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் ஒருவரும், சம்பந்தப்பட்ட துறையின் ஆறு அலுவலர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்தக் குழு மாதத்தில் ஒரு முறை கூடி மகளிர் குழுக்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும்.

இதுதவிர, விவசாய நிலம் உள்ள உறுப்பினர்களுக்கு, பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துதல், சுவர் கட்டுதல், குழாய் அமைத்தல் போன்ற வேளாண் பொறியியல் சம்பந்தமான தொழில்களுக்கும் கடனுதவி வழங்கப்படும். மேற்கண்ட வேளாண் பொறியியல் சம்பந்தமான பணிகளுக்குத் தேவையான மொத்தத் தொகையும் IFAD திட்டத்தின் மூலமே கடனாக வழங்கப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் தளி, கெலமங்களம், சூளகிரி, தருமபுரி, நல்லம்பள்ளி, பெண்ணாகரம், பாப்பிரெட்டி பட்டி, மொரப்பூர், அரூர், ஊத்தங்கரை, மத்தூர் மற்றும் பர்கூர் ஆகிய 12 வட்டாரங்களில் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கால அளவு 7 ஆண்டுகள் 1996-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 6,200 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களுக்குக் கடன் மற்றும் மானியமாக ரூ.334 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் (1992-93) 3,600 நபர்களுக்கு ரூபாய் ஒரு கோடி மானியத்துடன் ரூபாய் 3 கோடி அளவுக்கு வங்கிக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் வேளாண் காடுவளர்ப்புப் பணிகளுக்கு 500 நபர்களுக்கு ரூ.41.645 இலட்சமும், பட்டு வளர்ப்புக்கு 750 நபர்களுக்கு 97.125 இலட்சமும், கால்நடை வளர்ப்புக்கு 900 நபர்களுக்கு 63.550 இலட்சமும் வழங்கப்படும். இதுதவிர, வேளாண் பொறியியல் துறையின் மூலம் 500 நபர்களுக்கு நேரடியாகவும் கடனுதவி வழங்கப்படும்.

**மேலும், நடப்பு ஆண்டில் சுமார் 100 பெண்களுக்குச் செயற்கை வைரப் பட்டை தீட்டும் தொழில் (Gem cutting) அறிமுகப் படுத்தப்பட விருக்கிறது. இதற்கான பயிற்சி அரூர் மற்றும் பர்கூர் வட்டாரங்களில் விரைவில் ஆரம்பிக்கப்பட விருக்கிறது.**

## கனவு மாளிகை

மொகலாயர்களிடமிருந்து காரன்வாலிஸ் பிரபு ஓசூர் பகுதிகளைக் கைப்பற்றினான். அப்போது, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவராக 'பிரட்' என்பார் நியமிக்கப்பட்டார். அவர், தன்னுடைய காதலிக்காக ஓசூர் பகுதியில் ஒரு கனவு மாளிகையைக் கட்டலானார். அந்த இலண்டன் மாநகரக் காதலிக்கு அவ்வப்போது மகிழ்வோடு இதுபற்றித் தெரிவித்தும் வந்தார் அவர்.

அந்தக் காதல் மாளிகை, அரசுப் பணத்தில் முறைகேடாகக் கட்டப்பட்ட காரணத்தால், ஆங்கிலேய அரசு, மாவட்ட ஆட்சித் தலைவரை ஓசூரை விட்டு மாற்றிவிட்டது. இதையறிந்த அவரது அன்புக் காதலியும் இலண்டனிலிருந்து இங்கு வர அடியோடு மறுத்து விட்டாள்.

இதனால் மனம் உடைந்து போன காதல் மன்னன் பிரட், தனக்குத்தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொண்டான், அதே அழகு மாளிகையில்!

அதன்பின், அம்மாளிகை 'சப்கலெக்டர் அலுவலகம்' ஆக்கப்பட்டது.

நாளடைவில்- அந்தக் காதலைப் போலவே சிதைந்து சின்னா பின்னமாகி அதுவும் உருக்குலைந்து போய்விட்டது!

—ஆர். மலர்மங்கை



# காலம் வரும் காத்திருப்போம்!

நான்

சரஞ்சரமாய்ப் பாட்டுகளை
அள்ளிவிடப் போறேன்
சுதந்திரமாய் மனம்திறந்து உண்மைகளைச்
சொல்லிவிடப் போறேன்.

கோழி கொத்துன எழுத்துக் கூட்டிக்
கோமாளிப் பேச்சுப்பேசி-நம்மை
ஏமாளியாக்க இங்கே
இந்தித்திணிப்பு நடக்குதுங்க.

பட்டப்பகல் நேரத்திலும்
வெட்டுப்பழி-குத்துப்பழி
செத்துப்போன ராமருக்கும், பாபருக்கும்
ரத்தம் சிந்தும் யுத்தவெறி!

தைக்கரும்பை எடுக்கும்போது
கன்னத்துல கண்ணீரு
கண்ணுக்குள் ஓடுதம்மா
காவேரித் தண்ணீரு!

திண்ணைப்பேச்சு வார்த்தைகளில்
திக்விஜயம் நடக்குது
உண்மைகளை எடுத்துச் சொன்னா
உலகமெல்லாம் சிரிக்குது.

மேடு பள்ளம் இல்லாத
நாடுகளைப் படைக்கணும்
காடு கரை எல்லாமே
கரும்பு நட்டு வளர்க்கணும்.

அதுவரைக்கும்-
கனவுப்பட்டு கட்டிகிட்டு
பொங்கல் வைப்போம்
காலம் வரும் - காத்திருப்போம்.



## கவியரசு நா. காமராசன்

# தருமபுரி

**த**ருமபுரி மாவட்டமானது, சேலம் மாவட்டத்திலிருந்து 2.10.1965- இல் பிரிந்தது; அதற்காக நடைபெற்ற துவக்க விழா, அன்றைய உணவு அமைச்சர், திரு. வெ. ராமையா அவர்கள் தலைமையில் நடைபெற்றிருக்கிறது. அந்த விழாவில் கலந்துகொண்ட தமிழகத்தின் அந்நாள் முதல்வர் திரு. மீ. பக்தவத்சலம் அவர்கள்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கே கடைகால் நாட்டியிருக்கிறார்.

அதற்கடுத்த இரண்டாண்டுக் காலத்தில் - அதாவது 26.8.1967-இல் தான், இப்போதுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் கட்டி முடித்துத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அவ்விழாவில், அந்நாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு, இக் கட்டடத்தைத் திறந்து வைத்திருக்கிறார்; விழாவுக்கு, உணவு அமைச்சராக இருந்த திரு. கே.ஏ. மதியழகன் அவர்கள் தலைமை தாங்கியிருக்கிறார்.



பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தில் முதல் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர் திரு. ஜி. திருமால், இ.ஆ.ப., அவர்கள் இப்போதைய மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர் திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப., அவர்களாவார்.

இவற்றையெல்லாம் அறிந்து கொண்டு, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் படிக்கட்டுக்களில் கால் வைத்தோம் நாங்கள். கீழ்த்தள வராண்டாவிலேயே ஏராளமான ஆண்களும் பெண்களுமாகக் கூடியிருந்தனர்; ஒவ்வொருவர் கையிலும் நீண்ட கவர் அல்லது வெள்ளைத்தாள் மடிப்புகள் காணப்பட்டன. என்ன விஷயம் என்று விசாரித்த போதுதான் அன்று திங்கட்கிழமை என்பதும், மாவட்ட ஆட்சித் தலைவர், மக்களின் குறைகளைக் கேட்கும் நாள் அது என்பதும் தெரிந்தது.

அலுவலக இளநிலை உதவியாளரான திரு. எஸ். ஆறுமுகம் என்பவர், ஒவ்வொரு கோரிக்கை மனுவாக வாங்கி 'மக்கள் குறை கேட்கும் நாள் மனு... மனுவைப்பெற்ற நாள்... அறிக்கை அனுப்ப வேண்டிய நாள்...' என்று ரப்பர் ஸ்டாம்ப் குத்தி அடுக்கிக் கொண்டிருந்தார்.

எதிரே மாட்டப்பட்டிருந்த, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அறிவிப்புப் பலகையில் - அரசின் அண்மைக்கால நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள், அடிக்குறிப்புகளோடு காட்சியளித்தன. முதியவர் ஒருவர் பொறுமையுடன் அவற்றை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நம்முடைய பார்வை-நான்கு பக்கச் சுவர்களிலும் துண்டு துண்டாக மாட்டப்பட்டிருந்த அறிவிப்புப் பலகைகளில் படர்ந்தது.

வீட்டு மனைப்பட்டா கோரும் மனுதாரர் கவனத்திற்கு உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெற விரும்புவோர் கவனத்திற்கு... வங்கிக் கடன் பெறவிரும்பும் மனுதாரர் கவனத்திற்கு... விவசாயக் கூலி உதவித் தொகை பெற விரும்புவோர் கவனத்திற்கு... நலிவுற்றோருக்கு வீடுகட்டுதல் கோரி மனுச் செய்வோர் கவனத்

3



மாவட்ட ஆட்சித் தலைவர்

திற்கு... கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை பெற விரும்புவோர் கவனத்திற்கு... மொத்த வணிக உரிமம் புதிதாய்க் கோரும் வணிகர்கள் கவனத்திற்கு... நலிவுற்ற கலைஞர்கள் நல்வாழ்விற்கு... வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் பட்டியலில் உள்ளோர் கவனத்திற்கு...

- என்கிற அப் பலகைகளின் தலைப்புகளை மட்டும் படித்தபடி மேல் தளத்திற்குப் போனால், அங்கேயும் ஒரு அறிவிப்புப் பலகை துணையின்றித் தொங்கியது - 'தேசிய சேமிப்புப் பத்திர முதலீடு களுக்குப் பரிசுக் கூப்பனும் ஒரு சதவிகித கழிவும் வழங்கப்படும்'.

'ஒரு நிமிஷம் சார்' என்று கூறி எங்களை முந்திக் கொண்டு, வேகமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக அறைக்குள் நுழைந்த மக்கள் தொடர்பு அதிகாரி திரு. மு. கிருட்டிண்ன், அதே வேகத்தில் திரும்பிவந்தார்.

'உங்களுடைய வருகை பற்றிச் சொன்னேன்; இன்று மக்கள் குறைகேட்கும் நாளானதால் பிறகு பார்ப்போமே என்கிறார் கலெக்டர்' என்றார் தயக்கத்தோடு.

காரணம் சரியாக இருக்கவே, அதற்குச் சம் மதித்த நாங்கள் விடாப்பிடியாக அன்று மாலையே மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தசரதன் அவர் களை அவர் வீட்டிலேயே (பங்களா) போய்ப் பார்த்தோம். மகிழ்வோடு வரவேற்றார்.

'தமிழரசு' தருமபுரி மாவட்டச் சிறப்பு மலர் வெளியிட, விருப்பத்தை தெரிவித்த நாங்கள். 'அதற்கான, விவரங்கள் பற்றிப் பேசக் கொஞ்சம் நேரம் ஒதுக்க வேண்டுமே?' என்றோம்.

'மிக்க மகிழ்ச்சி. ஒரு மணி நேரம் போதுமே?' என்று சிரிப்போடு கேட்டுவிட்டு 'இப்போதே நான் தயார்; பேசலாம்!' என்றார்.

'இந்த மாவட்டத்தில் தருமபுரி, அரூர், பெண்ணாகரம், கிருஷ்ணகிரி, பாலக்கோடு, ஊத்தங்கரை, ஓசூர், தென்கனிக்கோட்டை ஆகிய எட்டு வட்டங்கள் அதாவது தாலுக்காக்கள் இருக் கின்றன. சென்ற ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 23,95,606 பேர் தருமபுரி மாவட்டத்தில் இருக்கிறார்கள்; இதில் ஆண்கள் மட்டும் 12,32,292 பேர்; பெண்கள் 11,63,314 பேர்களாவர். இவர்களில் கல்வியறிவு பெற்ற வர்கள் எண்ணிக்கை 9,54,156 ஆகும். அதாவது மொத்த மக்கள் தொகையில் நாற்பது சதவிகிதம் பேர். எங்களுடைய தருமபுரி மாவட்டத்தில் 1,106 வருவாய்க் கிராமங்கள் இருக்கின்றன. பதினெட்டு ஊராட்சி ஒன்றியங்களும், மூன்று நகராட்சிகளும், பதினேழு நகரப் பஞ்சாயத்துக் களும் ஐநூற்று எண்பத்தெட்டு கிராமப் பஞ்சாயத் துகளும் உடையது எங்கள் தருமபுரி மாவட்டம்...'

- மனிதர் எப்படித்தான் இந்தப் பள்ளி விவரங்களையெல்லாம் மனதில் வைத்திருப் பாரோ! மளமளவென்று சொல்லிக் கொண்டே போன மாவட்ட ஆட்சித் தலைவர் பேச்சில் நாம் குறுக்கிட்டோம்.

''தருமபுரி என்றாலே தளி, களி, புளி, கம்பளி என்று ஒரு மாதிரியாகச் சொல்கிறார்களே, அதென்ன சார்?''

சிரித்துக்கொண்டே பேசலானார் மாவட்ட ஆட்சித் தலைவர் - ''எங்கள் மாவட்டத்தில் உள்ள தளி என்கிற ஊர் எப்போதும் குளிர்ந்த சீதோஷ்ண நிலையோடிருக்கும்; இதனால் அதை சர் தாமஸ் மன்றோவே 'லிட்டில் இங்கிலண்ட்' என்று குறிப் பிட்டுருக்கிறார். இந்த மாவட்டத்தில் நெல் விளையும் பகுதி குறைவு; ஆகையால் பெரும் பாலான மக்கள் கேழ்வரகுக் களியையே உண வாகக் கொண்டு பழகியிருக்கிறார்கள்; இப்பகுதி யில் 'உரிகம் புளி' என்றொரு வகைப் புளி அதிகம் காய்க்கிறது; இந்தவகைப் புளியங்காய் நல்ல சதைப் பிடிப்போடும் மிக நீளமாகவும் காணப்படும்; வேறெங்கும் இப்படி இருக்காது. குளிருக்கேற்ற கம்பளி உடை தயாரிக்கத் தகுந்தபடி அடர்த்தியான உரோமம் கொண்ட மேச்சேரி வகைச் செம்மறியாடுகள் இங்கு அதிகம் இதுதான் நீங்கள் கேட்ட தளி, களி, புளி, கம்பளிக்கான விளக்கம்...'

'வேறு மாதிரியாக அல்லவா இதைப்பற்றிச் சொல்லுகிறார்கள்?' இது நாம்.

மறுபடியும் சிரிப்பு. 'நீங்கள் நேராகக் கேட்பது தானே சார்?'... புளியைத் துவையலாத் தொட்டுக் கொண்டு, களியைச் சாப்பிட்டுவிட்டு, கம்பளி யைப் போர்த்திக் கொண்டு சோம்பலோடு தூங்கி வழிவதே பெரும்பான்மையான மக்கள் பழக்கம் என்று யாராவது சொல்லியிருப்பார்கள் அதானே?... அதெல்லாம் தவறு. எங்கள் மாவட்டத்தில் உள்ள ஓசூர், கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,900 அடி உயரத்தில் இருக்கிறது. அதன் உஷ்ணநிலையானது வேனிற்காலத்தில் 30 டிகிரி செல்சியஸ், குளிர்

# ஏலக்கி

ஏலக்கி வாழைப்பழம்: பார்ப்பதற்குப் பூவன் பழம் போல- சற்று மெலிவோடு இருக்கும் இந்தப் பழம் மிகுந்த ருசியாகவும் சத்து நிறைந்ததாகவும் இருப்பதால் அனைவரும் இதை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். இந்தப் பழத்தை உண்பதால் உடலுக்கு எவ்விதக் கெடுதலும் ஏற்படுவதில்லை. மேலும் இதில் நீர்ச்சத்தும் குறைவு. இதன் சிறப்பு என்னவென்றால், ஏலக்கி வாழைப்பழம் பார்வைக்குப் பூவன் பழம் போலிருந்தாலும், கற்பூர வாழை ருசியோடிருக்கும்; அதிக நாட்களுக்குக் கெடுவதில்லை.

தருமபுரி மாவட்டத்தில் கிடைக்கும் வாழைப்பழங்களில் இது சிறந்த வகை என்று கருதப்படுகிறது. இம்மாவட்டத்தில் ஒசூர், டென்கனிக் கோட்டை, தளி ஆகிய இடங்களில் மட்டுமே இந்தப் பழம் அதிக அளவில் விளைகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் 1976-இல் ஒரே சமயத்தில் ஒரு டஜன் ஏலக்கி பழங்களை விரும்பிச் சாப்பிட்டதாகக் கூறிய மாவட்ட ஆட்சித் தலைவர்- இன்னொரு வாழைப்பழம் பற்றியும் வியப்போடு குறிப்பிட்டார்.

''உதிரும் பழம் என்றோர் ரக வாழைப் பழமும் எங்கள் மாவட்ட ஸ்பெஷல் ஆகும். கீழே ஒரு சீப்பு வாழைப்பழம் இருக்கிறதென்றால், மற்றவர்களுக்குத் தர அந்தச் சீப்பை எடுத்தோமென்றால் எல்லாப் பழமும் கீழே உதிர்ந்து விடும்; அவ்வளவு மென்மையும் கனிவும் உடையது இந்தப் பழம்; இதை 'உதிரம்பழம்' என்றும் கிராமப் பகுதி மக்கள் குறிப்பிடுவார்கள்.



காலத்தில் 15 டிகிரி செல்சியஸ். அதாவது கோடை காலத்திலும் அப்பகுதி மக்களுக்குக் கம்பளி தேவைப்படும். அவ்வளவு குளிர். அதை வைத்து யாரேனும் அவ்வாறு சொல்லியிருக்கலாம். ஆனால் இப்போது அப்படியல்ல; தொழில் மயமாகிவிட்ட அப்பகுதி மக்கள் இப்போது குளிர்காரணமாக அதிகாலையில் எழுவது வேண்டுமானால் தாமதப்படலாமே தவிர... சோம்பல் என்கிற பேச்சுக்கே இடமில்லை!'... இது மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணித்தரமான பதில்.

மலைசூழ்ந்த மாவட்டம்தான் தருமபுரி; ஆனாலும் மண்வளம் இருக்கிறது; மழை வளம் இல்லாத 'Rain shade area'வாக இது இருக்கிறது; என்ன செய்வது? கடுமையாக உழைத்தால்தான் இப்பகுதி மக்களால் ஓரளவுக்காவது சம்பாதிக்க முடிகிறது! இதுதான் உண்மை நிலை' என்று கூறி, தன் பதிலுக்கு மேலும் ஒரு முத்தாய்ப்பு வைத்தார் மாவட்ட ஆட்சித் தலைவர்.

'அரசுத் தரப்பில் நீங்கள் புரிந்துவரும் சாதனைகளைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல முடியுமா?' என்றோம் நாம்.

''நிறையவே சொல்ல முடியும். இந்த மாவட்டத்தில் சிறந்த சுற்றுலாத் தலமான ஒகேனக் கல்லுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக அங்கே ஒரு தொங்கும் பாலம், மலைகளுக்கிடையே அமையவிருக்கிறது. ஊட்ட மலையையும் சுற்றுலாத் தலமாக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். உலகிலேயே

## தீர்த்தகிரியார்



தருமபுரி மாவட்டச் சுதந்திரப் போராட்ட வீரர்களில் மூதறிஞர் இராஜாஜியுடன் தோளோடு தோள் நின்று போராடிய சிறப்புடைய தேசியவாதி திரு. தீர்த்தகிரி முதலியார் (1882-1953).

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த அன்னசாகரத்தில் பிறந்து வளர்ந்த இவருடைய நூற்றாண்டு விழா 1985-இல் கொண்டாடப்பட்டது. பல்வேறு சமூக சேவைகளுக்காகவும், ஆதிதிராவிடர் முன்னேற்றத்திற்காகவும் தமது பெருஞ்செல்வத்தையும் செலவிடத் தயங்காத பெருமை கொண்ட இவர்- இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு ஒன்பதாண்டுக்காலச் சிறைத்தண்டனை பெற்றவர்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., பாலகங்காதர திலகர், தமிழ்த் தென்றல் திரு.வி.க. போன்றோருடன் தியாக சீலர் தீர்த்தகிரியார் மிக நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருந்தார். இவரே காந்தியடிகளையும், சுவாமி விவேகானந்தரையும் முதன்முதல் தருமபுரிக்கு வரவழைத்தவரும் ஆவார்.

தியாகி சுப்பிரமணியசிவா, இவரை 'எம்டன்' என்று பெயரிட்டழைப்பார்.

தருமபுரி நகரமன்றத்திடல், 'தியாகி தீர்த்தகிரியார் சதுக்கம்' என்று பெயரிட்டுச் சிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

'நம்பர் ஒன்' என்று கூறப்படும் 'ஜெம் ரெட் கிரானைட்' தருமபுரி மாவட்டத்தில்தான் எடுக்கப் படுகிறது. தங்கமும், வேறு சில தாதுப் பொருட் களும்கூட இந்த மாவட்ட மண்ணில் இருந்துஎடுக்க முடியும் என்று கண்டறியப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில், எங்கள் மாவட்டத்தில் பதினாறாயிரம் பேருக்குக் குடும்பக் கட்டுப்பாடு செய்தாக வேண் டும் என்ற குறியீட்டையே நாங்கள் தாண்டியிருக் கிறோம்; புரட்சித் தலைவி இலவச மருத்துவ முகாம்கள் இதுவரை 750 நடத்தி இதன்மூலம் சுமார் 2¼ இலட்சம் நலிந்த மக்களுக்கு நலம் சேர்த்திருக்கிறோம். ஃபோலியோ கவரேஜ், ஊட்டச்சத்துத் திட்டம் (TINP) சாமல்பட்டி வாட்டர் ஷெட் ஸ்கீம், கசிவுநீர்க்குட்டைத் திட்டம் எல்லாம் ஏராளமாக நிறைவேற்றி வருகிறோம். தமிழகத்தில், இந்த மாவட்டத்திலேதான் கசிவுநீர்க் குட்டை மூலமான விவசாயமே அதிகம். சிப்காட், சிட்கோ, டிட்கோ, டிக் போன்ற பல்வேறு திட்டங்களையும் குறைவின்றி நிறைவேற்றி வருகிறோம். இந்த மாவட்டத்தில் பொது விநியோகம் வேறெந்த மாவட்டத்தையும் விட நல்லபடி நடக்கிறது.'

'சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி, மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை முதன் முதலில் இந்த மாவட்டத்தில்தான் துவக்கப்பட்டன. கொடி நாள் வசூல் குறியீடு ரூ.5.50 இலட்சம் என்றா லும், 7.25 இலட்சம் ரூபாய் இதுவரை வசூலித் திருக்கிறோம். சிறுசேமிப்பில் மட்டும் ஏழு கோடி ரூபாய் சேர்த்திருக்கிறோம்... இதன் குறியீடு (Target) ரூ.11 கோடியாகும்.

அகில இந்திய மாம்பழக் கண்காட்சி எங்கள் தருமபுரி மாவட்டத்திலேதான் முதன்முதலாக எந்த ஆண்டும் இல்லாதபடி சென்ற (1992) ஆண்டு ஜூன் மாதத்தில் ஐந்து நாட்கள் நடைபெற்றது; அதில் அதிக அளவில் விளைகிறது என்பதால் மட்டுமல்ல; அதிக ருசியுடைய மாம்பழம் விளை விப்பதற்கான முதல் பரிசு எங்கள் மாவட்டத் திற்குத்தான் கிடைத்தது. கிளிமூக்கு மாங்கனி எங்கள் மாவட்ட ஸ்பெஷல். இந்த மாவட்டத்தில் 22 ஆயிரம் எக்டேரில் மாமரம் பயிரிடப் பட்டுள்ளது.

'சந்தன மரங்களில் அதிக மணம் பொருந்தியது எங்கள் சித்தேரி மலைச் சந்தன மரங்களே என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. காய்கறி உற்பத்தி யில் எங்கள் ஒசூர் இணையற்றுத் திகழ்கிறது; பட்டுத் தொழில் மூலம் தருமபுரி மாவட்டம் தன்னி கரற்று விளங்குகிறது...'

தொலைபேசி ஒலிக்கவே, மாவட்ட ஆட்சித் தலைவர் சிறிது பேச்சை நிறுத்தினார்; அவருடைய தொலைபேசிப் பேச்சு முடிந்த அடியோடு நாம் வினா தொடுத்தோம்'.

'தருமபுரி மாவட்டத்தைப் பொருத்தவரை வேறு என்னவெல்லாம் குறிப்பிடத்தக்க முக்கிய செய்திகள் இருக்கின்றன என்று சொல்லுங் களேன்?'



**ஔவையாரும் தருமபுரியும்**

தமிழ் மூதாட்டி ஔவைப் பாட்டியின் பாடல்கள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகியவற்றிலே காணப்படுகின்றன.

புறநானூற்றில்தான் ஔவையாரின் பாடல்கள் அதிக அளவில் காணப்படுகின்றன; அதாவது 33 பாடல்கள். அவைகளில் 23 பாடல்கள் அதியமான், நெடுமான் அஞ்சியைப் பற்றியன; 3 பாடல்கள் அவனுடைய மகன் பொருட்டெழினி பற்றியவை.

இந்த இருவருமே தகடூரைத் (தருமபுரி) தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தி வந்தவர்களாவர்.

''ராஜாஜி போன்ற மூதறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் பிறந்த மாவட்டம் இது; சுப்பிரமணி சிவா போன்ற தியாகச் செம்மல்கள், தேசிய வாதிகள், சிறைக்கஞ்சாச் சிங்கங்கள் பல வாழ்ந்து மறைந்த மாவட்டம் இது. தமிழ், உருது, தெலுங்கு, கன்னடம், இந்தி எனப் பல மொழி பேசுவோரும்

# சரித்திரத்தில் தகடூர்

ஜெகதேவிராய என்ற விஜயநகரப் பேரரசின் சிற்றரசன் ஆட்சியாண்டான 17-ஆம் நூற்றாண்டில்தான், அதுவரை 'தகடூரா'க இருந்த இவ்வூர் 'தர்மபுரி' ஆயிற்று.

மூவேந்தர் காலத்திலும் அவர்களுக்கு இணையாக இருந்த அதியர் மரபு இப்பகுதியில் அரசாண்டது. இம் மரபினரில் நெடுமான் அஞ்சி தலைசிறந்த மன்னனாக விளங்கினான்; ஔவை மூதாட்டியின் அளவற்ற பாசத்திற்கு ஆளான மன்னன் இவன்.

சங்க காலத்திற்குப் பிறகு - கட்டி மரபினர், கங்கர், பாணர் போன்ற சிற்றரசர்கள் தகடூரை வென்று குறுநில அரசுகளை நிறுவினார்கள். இவர்கள் காலத்தில்தான், களச்சாவு கண்டோருக்கு நடுகல் நிறுவும் பழக்கம் ஏற்பட்டது; அவைகளில் பல, இம்மாவட்டத்தில் இன்றும் காணக் கிடைக்கின்றன.

5-ஆம் நூற்றாண்டில், களப்பிரரை வீழ்த்திப் பல்லவர் ஆட்சிக்குத் தகடூரும் உட்பட்டிருந்தது.

கி.பி.873-இல், இப்பகுதியில், நுளம்பர்கள் அரசாண்டனர். அப்போது இப்பகுதி 'நுளம்ப பாடி'.

முதலாம் இராசராச சோழன் காலத்தே இது அவன் ஆட்சிக்குட்பட்ட தனி மண்டலமாகியது; அதன் பெயர் அப்போது 'நிகரில் சோழ மண்டலம்'.

பிறகு, தன்னை அதியன் மரபினன் எனக் கூறிக்கொண்ட விடுகாதழகிய பெருமான் இப்பகுதியை அரசாண்டான். இவன் ஒரு குறுநில மன்னன்.

அவர்களுக்குப் பின்னர், போசளர் ஆட்சி ஏற்பட்டது.

அவர்களுடைய வீழ்ச்சிக்குப் பிறகு, தகடூர், விஜயநகரப் பேரரசின் ஒரு பகுதி ஆகியது. அவர்களுக்குப் பின்- தகடூர் நாடு பாளையக்காரர்கள் வசமாயிற்று. அதற்குப்பின், மைசூர் மன்னர்கள் தகடூரைக் கைப்பற்றினர்.

பிறகு ஐதர் அலியின் மேலாதிக்கத்திற்கு உரிய பகுதியாயிற்று இது. அவன் மகன் திப்பு சுல்தான் அடிக்கடி ஆங்கிலப் படையோடு மோதும் நிலை ஏற்பட்டது. முடிவாக, மூன்றாவது மைசூர்ப் போரில் (1790-92) திப்பு தோற்றான். ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொண்ட அவன் போர் நட்ட ஈட்டுத் தொகையோடு தனது நாட்டின் பெரும் பகுதியையும் கொடுக்க வேண்டியதாயிற்று.

'எம்மதமும் சம்மதமே' என்ற வகையில் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வோடு இணைந்து வாழும் மாவட்டம் எங்கள் தருமபுரி. தமிழ்நாட்டிலேயே மாவட்ட வளர்ச்சிக் கழகம் செயல்படுவது எங்கள் தருமபுரி மாவட்டத்தில்தான். கிருஷ்ணகிரி அணைக்கட்டு, பையூர் வேளாண் ஆராய்ச்சிப் பண்ணை, சென்னை நகர வளர்ச்சிக் குழுமம் போலத் தமிழகத்தில் ஓசூரில் மட்டுமே அமைக்கப் பட்டுள்ள ஓசூர் புதிய நகர விரிவாக்கக் குழுமம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இதுவரை மாவட்டத் தலைநகர்களில் மட்டுமே செயல்பட்டு வந்த குடிசைப்பகுதி மாற்று வாரியத் திட்டங்கள் இங் குள்ள சிற்றூரான பர்கூரிலும் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. மாவட்ட வளர்ச்சிப் பணி களை முழுமையாக நிறைவேற்றிய மாவட்டம் எங்கள் தருமபுரி மாவட்டம்தான். இப்படி எங்கள் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்...'

'ஆமாம், தருமபுரி என்ற பெயர் சூட்டப்படக் காரணம் என்னவாக இருக்கும் என்று உங்களுக் குத் தெரியுமா?'

'தமிழ்மூதாட்டி ஔவைப் பாட்டிக்கு இந்தத் தருமபுரியானது தகடூராக இருந்த பழங்காலத்தில், இப்பகுதியில் ஆட்சிபுரிந்த அதியமானுக்கும்தான் அது வெளிச்சம்.

நான் என்ன நினைக்கிறேனென்றால்... அரி தாகக் கிடைத்த கருநெல்லிக் கனியால் ஆயுள் விருத்தி உண்டென அறிந்தும், அதை ஔவைப் பாட்டிக்குத் தருமமாகக் கொடுத்தான் அதியமான்; தமிழகத்தில், காவிரியாறு எங்கள் தருமபுரி மாவட் டத்தில்தான் வலது காலை எடுத்து வைத்துப் புகுந்து நாடெங்கும் வலம் வருகிறது; ஆனால் அதன் மூலம் ஒரு ஏக்கர் நிலத்திற்குக்கூட இந்த மாவட்டத்தில் பயனில்லை! இப்படி எல்லா வகையிலும் தருமம் புரிகிற மாவட்டமாக இருப்ப தால்தானோ என்னவோ இம்மாவட்டம் தருமபுரி மாவட்டம் என்று அழைக்கப்படுகிறதோ என எண்ணுகிறேன் நான்!''

- மாவட்ட ஆட்சித் தலைவர் ஏக்கத்தோடு சொன்ன இதைக் கேட்டு, நாங்களும் அனுதாபத் தோடு சிரித்தோம்.

'வேறு ஏதாவது இந்த மாவட்டத்தில் குறிப் பிடத்தக்க செய்திகள்?...'

- என்று நாங்கள் கடைசியாக இழுத்தபோது,

''மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் போட்டியிட்ட பர்கூர் தொகுதி இருப்பதே எங்கள் மாவட்டத்தில்தான் சார்' என்று முகமலர்ச்சியோடும் தனி அழுத்தத்தோடும் தெரிவித்தார் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ. தசரதன் அவர்கள்.

- பி.எல். ராஜேந்திரன்.

NO.1 சேமிப்பு — சிறுசேமிப்பு

# வருமான வரிச் சலுகை பெற முத்தான மூன்று திட்டங்கள்

NSS '92

PPF

NSC VIII Issue

★ உறுதியான வருவாய்

★ மத்திய அரசின் முழுப்பாதுகாப்பு.

## இன்றே முதலீடு செய்வீர்

தேசிய சேமிப்புத் திட்டம் (NSS'92)

தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு (NSC)

15 ஆண்டு பொது சேமநல நிதிக் கணக்கு (PPF)

தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ. 500 - முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் பெற்று கவர்ச்சிகரமான 'மாருதி கார்' உட்பட 536 பரிசுகளை வெல்ல வாய்ப்பு



மாத ஊதியம் பெறுவோர் சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டம் மூலமாகவும் சேரலாம்.

மேலும் விபரங்களுக்கு

ஆணையர், சென்னை மாநகராட்சி (சி.சே. பிரிவு) சென்னை-3, தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம் 92, அண்ணா சாலை, சென்னை-2. தொலைபேசி: 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், அஞ்சல் அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்

பிரத்யேகமான உயர் ஊக்கத்தொகை

ஜனவரி 2½%

பிப்ரவரி 2¼%

மார்ச் 2%

வெளியீடு : இயக்குநர், சிறுசேமிப்புத் துறை, 621, அண்ணா சாலை, சென்னை-600 006. தொலைபேசி: 8251784, 8251685.

சிறு குடும்பம் செல்வக் குடும்பம்

**இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு**



16-1-93

# மாணவர்கள் தென்னை வளர்ப்பு

தமிழ்நாட்டில் உள்ள 22 மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் 10 மாவட்டங்களில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் மாணவர்கள் தென்னை வளர்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

அதன்படி, பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்திலும் இத்திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைத் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.தசரதன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் திருமதி சுலோச்சனா சம்பத் அவர்கள் தொடங்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி கோட்டம், காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, திம்மாபுரம் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 6-ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாகத் தென்னைக் கன்றுகளை வழங்கி இத்திட்டத்தைத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்துப் பேசியதாவது - இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இது ஒரு சிறப்புமிக்க திட்டம் என்றும் கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.தசரதன் அவர்கள் இத்திட்டத்தைப் பற்றிப் பாராட்டிப் பேசுகையில் தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 6-ஆம் வகுப்புப் படிக்கும் மாணவர்கள் 55,540 பேர் உள்ளனர். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 6-ஆம் வகுப்பு படிக்கும் 3,340 மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகத் தென்னைக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இலவச ஆய்வு, இலவசப் பட்டப் படிப்பு, சத்துணவு என்று பல்வேறு திட்டங்களை ஏழைகளின் நலன்களுக்காக வழங்கிய தமிழக அரசானது தற்பொழுது இலவசமாக மாணவர்களுக்குத் தென்னைக் கன்றுவழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.





மக்களின் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசானது பின்தங்கிய மக்களை முன்னேற்றவும், பொருளாதாரப் பற்றாக்குறையால் இளம் வயதிலேயே மாணவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் தவிக்கும் ஏழை மாணவர்களுக்கு இத்திட்டம் உதவியாக இருக்கும் என்றார்.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்**

1. சுற்றுப்புறச் சூழல் கெடாமல் பாதுகாப்பது.

2. எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவது.

3. மாணவர்களிடையே நன்றி உணர்வை ஊட்டுவது.

4. மழை வளம் பெறுவதற்கு வகை காண்பது.

5. பின்தங்கிய பகுதி மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்வது ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

பையூர் வேளாண்மை ஆராய்ச்சி மையமானது அல்லும் பகலும் செய்த ஆராய்ச்சியின் பயனாக நெட்டை குட்டை என்ற வீரிய தென்னைக் கன்றுகளை இத்திட்டத்திற்காக அர்ப்பணம் செய்துள்ளதாகக் கூறினார். நெட்டை குட்டை தென்னையின் சிறப்பு என்னவென்றால், நெட்டை என்ற பெண் பூவையும், குட்டை என்ற ஆண் பூவையும் ஒன்றாக இணைத்து வீரிய தென்னை உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இதனை 6-ஆம் வகுப்பில் படிக்கும் பொழுது பயிரிடத் தொடங்கினால் பள்ளி இறுதி ஆண்டு படிக்கும்பொழுது காய்க்கத் தொடங்கும் என்றும் சுமார் 150 காய்கள் வரை காய்க்கும் என்றும், இதன்மூலம் ரூ.450 முதல் ரூ.600 வரை பெற வாய்ப்புள்ளது என்றும் கூறினார்.

நல்ல தண்ணீர் வசதி உள்ள இடத்தில் பயிரிட வேண்டும். உரம் இட்டு, நன்கு பாதுகாப்புடன் வளர்த்து வந்தால் நல்ல பயனை அடைய முடியும் என்றும் சிறு மாணவர்களுக்கு அதிகப் பயனைத் தரும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து காவேரிப் பட்டனம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. முனுசாமி, பையூர் வேளாண்மை ஆராய்ச்சி மையப் பேராசிரியர் திரு. ராஜகோபால் வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சர்தார் மொஹைதீன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. வெங்கட்ராமன் ஆகியோர் இத்திட்டத்தினைப் பாராட்டி உரை ஆற்றினர்.

**திரு. இரா. பால்ராஜ்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தருமபுரி.**




★ பாராமகால் என்பது மைசூர் பீட பூமியை ஒட்டிய - இப்போதுள்ள தருமபுரி மாவட்டத்தின் பெரும்பகுதியைக் கொண்டிருந்த பிரதேசமாகும். இதில் 12 வருவாய்ப் பிரிவுகள் அடங்கியிருந்தன; ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு அரண்மனையை உள்ளடக்கிய கோட்டை இருந்தது. இதனால் தான் இப்பகுதிக்குப் 'பாரா மகால்' என்று பெயர். பாரசீக மொழியில் 'பாரா' என்றால் பன்னிரெண்டு; மகால் என்றால் அரண்மனை. இந்தப் பகுதியை உருவாக்கியவன், பெனுகொண்டாவிலிருந்து இப்பகுதிக்கு வந்த ஜெகதேவராயன் என்கிற பாளையக்காரனாவான்.

★ கிருஷ்ணகிரிக்கு வடமேற்கே, இப்போது சிதைந்து காணப்படும் 'தேவர் குந்தாணி' என்ற நகரத்தைத் தலைநகராகக் கொண்டு நாற்பதாண்டுக் காலம் ஆட்சி செய்தான், பேரரசன் வீரராமநாதன் என்பான்.

★ தருமபுரி மாவட்டத்தின் வட எல்லை ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த சித்தூர் மாவட்டம் ஆகும்; தெற்கெல்லை சேலம் மாவட்டம்; கிழக்கெல்லை வட ஆர்க்காடு-அம்பேத்கர், தென்னார்க்காடு மாவட்டங்கள்; மேற்கெல்லை கர்நாடகம்.

★ இம்மாவட்டத்தின் வழியாக இரண்டு தேசிய நெடுஞ்சாலைகள் செல்கின்றன. அவை: காசி-கன்னியாகுமரி சாலை, சென்னை- பெங்களூர் சாலை.

★ தருமபுரி மாவட்டத்தின் பாசனத்திற்கு உதவும் ஆறுகள் தென்பெண்ணை ஆறு, சின்னாறு, வாணியாறு, தொப்பையாறு, கல்லாறு, பாலாறு, வரட்டாறு, பாம்பாறு ஆகியவைகளாகும்.

★ இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உருவானதே கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம். 1954-இல் இதன் கட்டுமானப் பணிகள் தொடங்கின; 1957-இல் முடிவுற்றன. இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவான இந்த அணையின் நீளம் 3,290 அடி; உயரம் 76 அடி.

★ ஒசூர் மாவட்டத்தில் உள்ள தொரப்பள்ளி கிராமத்தில் 1878 டிசம்பர் 10-ஆம் நாள் தம் குடும்பத்தின் மூன்றாவது மகனாகப் பிறந்தார் மூதறிஞர் ராஜாஜி.

★ 'காலால் நடந்துவந்தா
காலங் கடக்குமின்னு
ராசா ஒன் மொகம்பார்க்க
காருவெச்சி ஓடிவந்தேன்
வாயார ஒருவார்த்தை
வந்தவளைக் கேக்காமெ
காரேறி வருமுன்னேநீ
தேரேறிப் போயிட்டியே!'
-தருமபுரி மாவட்டக்
கிராமியப் பாடல்.





# தமிழ் நலங் காத்த தகடூர்




க. தியாகசீலன்

அறஞ்செயவி ரும்பென்றாள் ஔவைப் பாட்டி
அவ்வழியில் தருமம்செய் என்னும் எம்மூர்
திறமான தமிழ்வளர்த்த அன்னாள், இந்தத்
திண்புவியில் நெடுங்காலம் வாழ்வதற்கே
நிறங்கறுத்த அருநெல்லிக் கனியைத் தந்தே
நெடியபுகழ் ஈட்டியவன் அதியன் என்று
புறங்கூறும்; அவன்மக்கள் நாங்கள் என்றும்
புறங்கூறோம் வாய்மைவழி வந்தோ ரன்றோ!

ஊர் திரண்டு வந்தாலும் உலையா நெஞ்சம்
உற்பவித்த சுப்ரமண்ய சிவாவின் ஆன்மா
பூர்த்தியற்ற இடத்தினிலே கோயில் கண்டு
பூசித்து வருவதுவும் எங்கள் ஊரே!
நீர் திரளும் நினைத்தாலே நெஞ்சம் வேகும்
நெக்குவிடா நெஞ்சோடு செக்கி ழுத்த
தீர்த்தகிரி முதலியார் என்னும் த்யாகத்
தீபத்தை ஏற்றியதும் எங்கள் மண்ணே!

மூதறிஞர் ராஜாஜி பிறந்த திங்கே
மூச்செல்லாம் பேச்செல்லாம் முருக னாக
ஓதிவரும் வாரியார் பெருமா னாரும்
ஒடிவிளை யாடிவளர்ந் திட்ட வூராம்
கோதிலரும் குலமாந்தர் குலவு கின்ற
குமரபுரி தகடூர்பால் உண்டு கண்டீர்!
வேதநெறி விளக்கவந்த விவேகா னந்தர்
வீற்றிருந்த மாளிகையும் இங்கே உண்டு.

பொன்னிநதிப் பெண்ணழகி பூரிப் போடு
புதுப்பாடல் இசைத்தபடி ஒகே னக்கல்
என்னுமிடத் தினிலாடும் எழிலைக் காண
இருவிழிகள் போதாவாம்; நீர்வீழ்ச் சிக்கண்
கன்னியரும் ஆடவரும் அருவி யாடக்
கட்டியுள்ள படித்துறையின் கவிதைப் பாடல்
பண்ணுதற்கு நான்கம்ப னில்லை; நேரில்
பார்த்தவரோ அதனழகில் சொக்கிப் போவார்!

உச்சிமலை மீதினிலே யாருங் காணா
உழையிருந்து வீழும்நீர் வீழ்ச்சி கண்டு
மெச்சிமலை வெய்தாரும் உண்டோ? தீர்த்த
மலைப்பெருமை யாராலே வகுத்தற் கேலும்?
வச்சிரத்தோள் வாய்ந்திட்ட அதிகை மன்னன்
வழிபட்ட பழங்கோயில் தானும் உண்ட
கைச்சரத்தால் சூர்ப்பணகை மூக்க றுத்த
கதைவழங்கும் மூர்க்கனூர் மலையிங்குண்டே!

கவிக்கடிமை யாயிருந்த நெடுமா னஞ்சி
கட்டிவைத்த கோட்டையுள்ள இடத்தி னின்று
புவிக்கடியில் பொற்காசு கிடைப்ப தாகப்
பொன்னேரைப் பூட்டுகின்ற உழவர் கூற்றாய்
செவிக்கடிக்க வருகின்ற செய்தி யுண்டு.
சீரழிந்த கோட்டையினைச் செப்பஞ் செய்யின்
துவைக்கடிக்கத் துணிவெண்மை யாதல் போல
தொன்மைமிகு தகடூரின் புகழ்து லங்கும்!

பழியறியாத் தமிழ்க்கிழவி வாழ்ந்த பூமி;
படிந்தாரின் துயர்களைந்தே பழக்கப்பட்ட
அழிவறியா அதிகையரின் தாய்நி லத்தை
ஆளற்ற பெண்ணைப்போல் ஆக்கி டாது
தொழிற்சாலை வளம்பெருக்கிக் காட்டி எல்லாத்
துறையினிலும் முன்னேற்றங் காணச் செய்து
எழிற்காடாய்த் தகடூரை இயங்கச் செய்வோர்
இணையடியை முடிசுமந்து இசைப்பேன்
வாழ்த்தே!



தந்தி: சென்கோபேங்க்
டெலக்ஸ்: 453-205

தொலைபேசி எண்: 6051
அஞ்சல்பெட்டி எண்: 3

# தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி (வரை)
## தருமபுரி-1

தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி டெபாசிட்டுகள் மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கு முன்னைவிட அதிக வட்டி வழங்குகிறது.

**1. குறித்த கால இட்டுவைப்பு**

| | |
|---|---|
| 46 நாட்கள் முதல் 270 நாட்கள் வரை | 12.50% |
| 271 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 12.25% |
| 1 வருடமும் அதற்கு மேலும் | 12.50% |

**2. சேமிப்புக் கணக்கு** **6.50%**

## வைப்புத் தொகைகளுக்கு இவ்வங்கி வழங்கும் சிறப்புச் சலுகைகள்

1. இட்டுவைப்புகளுக்கு ரூ.30,000/- வரை இன்சூரன்ஸ் பாதுகாப்பு உண்டு.
2. வர்த்தக வங்கிகளைவிட ½% கூடுதல் வட்டி
3. இட்டுவைப்புகளுக்கு உயர்ந்தபட்ச வட்டி 12.50%
4. 64 மாதங்களில் இருமடங்கு வழங்கும் 'லட்சுமி' டெபாசிட் திட்டம்

எங்கள் வங்கியின் பல்வேறு வகையான டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்து பெருந்தொகை பெற்றுப்பயனடையக்கேட்டுக் கொள்கிறோம். விவரங்களுக்கு எங்கள் தலைமை அலுவலகத்தையும் மற்றும் 26 கிளைகளையும் தொடர்பு கொள்க.

**(கி.ஆ. நடராசன்)**
இணைப்பதிவாளர்/தனி அலுவலர்
தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி

# தருமபுரி மாவட்ட காவல் துறை

தமிழ்நாட்டில், பரப்பில் ஒன்பதாவது மிகப்பெரிய மாவட்டமாக தருமபுரி மாவட்டம் திகழ்கிறது. இந்த மாவட்டத்தின் காவல்துறைப் பணிகள் குறித்து, காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கு.இராமானுஜம் அவர்களை நேரில் சந்தித்தோம். அப்போது அவர் கூறினார்-

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 1,200 காவல் நிலையங்கள் உள்ளன. இரண்டு உதவி ஆய்வாளர்கள் உட்பட 30 பெண் காவலர்கள் இம்மாவட்டத்தில் பணியாற்றுகிறார்கள். கோட்டப்பட்டி மற்றும் பாகலூர் ஆகிய இரு இடங்களில் அமைக்கப்பட்டிருந்த இரு புறக் காவற்படைகள் (Police Outpost) இவ்வாண்டு முதல் காவல் நிலையங்களாக உயர்த்தப்பட்டிருப்பதாக காவல்துறைக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

தருமபுரி, கிருஷ்ணகிரி, ஒசூர் ஆகிய இடங்களில் மூன்று பெண் காவலர்கள் பிரிவுகளும், போக்குவரத்துக் காவல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் நக்ஸலைட்டுகளின் பிரச்சினை குறித்து வினவிய போது, நாயக்கன்கொட்டாய் என்ற பகுதி ஒரு காலத்தில் நக்ஸலைட்டுகளின் பரம்பரைக் கோட்டையாகத் திகழ்ந்ததாகவும், 'நக்ஸலைட் சிறப்புப் பணிப் பிரிவு (Naxelite Special Duty Wing) என்ற தனிக் காவற்படை ஏற்படுத்தப்பட்டதன் மூலம் நக்ஸலைட் பிரச்சினை தற்போது கட்டுப் படுத்தப்பட்டிருப்பதாகவும் கண்காணிப்பாளர் தெரிவித்தார். இந்தச் சிறப்புக் காவற்படை கடந்த 10 ஆண்டுக் காலங்களாக இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது.

தருமபுரி மாவட்டத்தில் சுமார் 300 ஆயுதப்படைக் காவலர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களில் 138 காவலர்களுக்கு குடியிருப்புகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. 60 குடியிருப்புகள் தற்சமயம் கட்டப்பட்டு வருகின்றன.

மாவட்டக் காவல்துறையின் சாதனையைப் பற்றிக் கேட்டதற்கு, கள்ளத்தனமாக ஆயுதங்கள் தயாரித்த இரண்டு குழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதிலிருந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதோடு இரு நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், கள்ளச் சாராயம் காய்ச்சுவது கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகவும், அதிலும் குறிப்பாக பர்கூர் தொகுதியிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் கள்ளச்சாராயம் காய்ச்சுவதும் விற்பதும் அடியோடு நீக்கப்பட்டிருப்பதாகவும், காவல்துறை கண்



காவல்துறைக் கண்காணிப்பாளர்

## பர்கூர் காவலருக்கு பிரதமர் விருது

தருமபுரி மாவட்டம் மத்தூரில், 60 அடி கிணற்றில் தவறி விழுந்த பெண்ணைக் காப்பாற்றிய காவலர் திரு. நீலகண்டனுக்கு இந்தியப் பிரதமரின் உயிர்காப்பு விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் தற்போது பர்கூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வருகிறார்.

காவலர் திரு. நீலகண்டன் மத்தூர் காவல் நிலையத்தில் பணியாற்றியபோது கடந்த 26.1.'92 அன்று இரவு 11 மணிக்கு மத்தூரைச் சேர்ந்த பாரதி என்ற பெண் குடிநீர் எடுக்கச் சென்ற போது 60 அடி ஆழமுள்ள கிணற்றில் தவறி விழுந்துவிட்டார். இவரைக் காப்பாற்ற யாரும் முன்வரவில்லை. இந்த நிலையில் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் காவலர் திரு. நீலகண்டன் கிணற்றில் இறங்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணைக் காப்பாற்றி வெளியே கொண்டுவந்தார்.

இவரது தீரச்செயலைப் பாராட்டி இந்தியப் பிரதமரின் 1992-ஆம் ஆண்டுக்கான 'உயிர்காப்பு விருது' (Life Saving Medal) அண்மையில் இமாசலப் பிரதேசத்திலுள்ள சிம்லாவில் நடந்த விழாவில் இவருக்கு வழங்கப்பட்டது.

தீரச் செயல் புரிந்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் இந்திய அளவில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன இந்த ஆண்டு 11 பேர் இந்த விருதினைப் பெற்றுள்ளனர். இதில் தமிழ்நாட்டிலிருந்து தருமபுரி மாவட்டம் பர்கூர் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர் திரு. நீலகண்டன் ஒருவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தருமபுரி மாவட்டத்தில் இத்தகைய விருது பெறும் முதல் காவலரும் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும்.



# தருமபுரி மாவட்ட காவலர்களின் கரகாட்டம்

தருமபுரி மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரைச் சந்தித்தபோது அவர் தருமபுரிக் காவலர்களின் கரகாட்டம் பற்றிக் குறிப்பிடத் தவறவில்லை. மாநிலத்திலேயே சிறந்த கரகாட்டக் குழு எங்களுடையது என்றும், டில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின்போது கரகாட்டக் கலைநிகழ்ச்சி நடத்தும் வாய்ப்பு இந்தக் குழுவுக்குக் கிடைத்தது எனவும் கூறிப் பெருமை அடைந்தார்.

காவல்துறையில் பணிபுரிபவர்கள் இரவு பகல் எனக் கருதாமல் கடைமை உணர்வோடு பணியாற்றி, தங்களுக்கு கிடைத்த ஓய்வு நேரத்தை வீணாக்காமல் கலை நிகழ்ச்சி நடத்த ஆர்வம் கொண்டனர். அதன் பயனாகத் தோன்றியது தான் காவலர் கரகாட்டக் குழு.

*1981*-இல் தருமபுரியில் தொடங்கிய இந்தக் கரகாட்டக் குழுவில், சுமார் 15 உறுப்பினர்கள் உள்ளனர். இந்தக் குழு மாநில, மாவட்ட அளவில் பல கலை நிகழ்ச்சிகளை நடத்திப் பெருமை சேர்த்தது. இந்தக் கரகாட்டக்குழு வெளி மாநிலங்களிலும் கரகாட்டம் நடத்தி அனைவரின் பாராட்டையும் பெற்றது. மாநில, மாவட்ட அளவில் ஆடிக் கொண்டிருந்த இந்தக் கரகாட்டக் குழுவுக்கு டில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின்போது கலை நிகழ்ச்சி நடத்த வாய்ப்புக் கிடைத்தது. உலகின் பல பகுதியிலிருந்தும் வந்த மக்கள் இந்தக் காவலர் கரகாட்டத்தைக் கண்டு களித்தது நமது நாட்டுக்கே ஒரு பெருமையாக இருந்தது. நாடே போற்றிப் புகழும் இந்தக் கரகாட்டம் இன்று தருமபுரி மாவட்டத்தில் காவல்துறை உயர் அலுவலர்களின் பேராதரவில் சிறப்புற்று விளங்குவதாகவும் இந்தக் குழுவின் தலைவர் கூறினார்.

---

காணிப்பாளர் தெரிவித்தபோது நாம் பெருமை அடைந்தோம். (50 காவலர்களைக் கொண்ட 3 மதுவிலக்கு அமலபடுத்தும் பிரிவுகள் இம்மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன) கடந்த 3 மாதங்களில் கள்ளச் சாராயம் மற்றும் மது பானங்கள் கடத்தலில் ஈடுபட்ட 5 லாரிகள் மற்றும் 2 ஜீப்புகள் கைப்பற்றபட்டுள்ளன.

வத்தல் மலை மீது சுமார் 25 ஏக்கரில் பயிர் செய்யப்பட்டிருந்த கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தருமபுரி மாவட்டக் காடுகளின் எல்லைகளில் பல ஆண்டுகளாகக் கொள்ளையில் ஈடுபட்டுவந்த 'ஊட்டமலை முத்து' என்ற நபரின் கும்பலைச் சேர்ந்த இருவரும், வங்கிக் கடன் வாங்கித் தருவதாகக் கூறி மக்களை ஏமாற்றியும், பெண்களைக் கற்பழித்தும் வந்த மாராண்டஹள்ளி கிராமத்தைச் சேர்ந்த அன்வர் பாஷா என்ற நபரும் சமீபத்தில் கைது செய்யப்பட்டிருப்பது . காவல்துறையின் சாதனையே ஆகும். பொதுவாக, கடந்த ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு குற்றங்கள் குறைந்திருப்பதாகக் கண்காணிப்பாளர் கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்ட காவல் துறையின் 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' பற்றிக்குறிப்பிட்டுப் பேசுகையில், மாதத்தின் முதல் திங்கட்கிழமையில் தருமபுரியிலும், இரண்டாவது திங்கட்கிழமை அரூரிலும், மூன்றாவது திங்கட்கிழமை கிருஷ்ணகிரியிலும், நான்காவது திங்கட்கிழமை ஓசூரிலும் மக்கள் குறை தீர்க்கும் நாள் நடத்தப்பட்டு இதுவரை சுமார் 50 மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் காவல்துறைக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

இம்மாவட்டத்திலுள்ள தருமபுரி, ஓசூர், கிருஷ்ணகிரி, பாலக்கோடு, தேன்கனிக்கோட்டை, அரூர் மற்றும் கடந்தூர் ஆகிய இடங்களிலுள்ள 7 காவல் நிலையங்களுக்கு 7 புதிய ஜீப் வாகனங்களையும், இம்மாவட்டத்திற்கெனச் சில புதிய நவீன ஆயுதங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வாண்டு வழங்கியிருக்கிறார்.

தருமபுரி மாவட்டத்தில் பல மொழி, இன, மதத்தைச் சேர்ந்த மக்கள் வசித்தாலும் சமீபத்திய அயோத்தியா கலவரத்தின்போது இந்த மாவட்டத்தில் எந்தப் பகுதியிலும் எந்தவிதமான ஒரு சிறு அசம்பாவிதமும் நடைபெறவில்லை என மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் தெரிவித்தபோது, அதை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

பேட்டியின் முடிவில் ஏதேனும் சிறப்புச் செய்தி என்று கேட்டதற்கு, இந்த மாவட்டத்தில் நன்கு பராமரிக்கப்பட்ட காவல் நிலையமாக, பர்கூர் காவல்நிலையம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும், பர்கூர் காவல்நிலையத்தில் பணியாற்றும் திரு நீலகண்டன் என்ற காவலருக்கு இவ்வாண்டின் பாரதப் பிரதமரின் உயிர்காப்பு. விருது (Life Saving Medal) கிடைத்திருப்பதாகவும் கூறினார் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு இராமானுஜம்.

**பேட்டி — ஜே.சந்திரன்**



# பர்கூர் பயனாளிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தம்முடைய சட்டமன்றத் தொகுதி மக்கள் நலம் பெறுவதிலும் வளம் பெறுவதிலும் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளார். இத்தொகுதியில் அரசு நிதி ஆதாரத்தைக் கொண்டு ஆற்றிவரும் நற்பணிகள் தவிர, தமது சொந்த நிதியிலிருந்தும் அவர் புரிந்துவரும் பேருதவிகளும் இதை நமக்கு உணர்த்தும். இந்த வகையில் நலம்பெற்ற நலிவுற்றோர் சிலரை நாம் நேரில் சந்தித்துப் பேசியபோது அவர்கள் தெரிவித்த கருத்துகளின் தொகுப்புக் கட்டுரை இது-

## ஆட்டோ ஒட்டுநர் அபுபக்கர்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமது சொந்த நிதியிலிருந்து அளித்த உதவிபெற்ற இளைஞர் திரு. ஏ.அபுபக்கர். வேலையற்றிருந்த இவருக்கு ஒரு ஆட்டோரிக்ஷா வழங்கப்பட்டுள்ளது. அவரை அழைத்து விசாரித்த போது நன்றிப் பெருக்கோடு அவர் தெரிவித்ததாவது:

''பர்கூர், செஞ்சி செட்டித் தெருவுல இருக்கிற நான் பத்தாங் கிளாஸ் வரைக்கும்தான் படிச்சிருக்கேன்; மேல படிக்கிற அளவுக்கு வசதி இல்லீங்க. அதனால... ஏதாச்



## இவ்வளவு பெரிய ஆலமரமா!

அடையாறு ஆலமரமல்ல இது; அதன் வாரிசு போல ஒசூர் கால்நடைப் பண்ணைக்குள்ளே உயர வளர்ந்து கொடிபோலப் பரவி ஏராளமான விழுதுகளை விட்டிருக்கும் மிகப்பெரிய ஆலமரம். வயது 300 ஆண்டுகள்; இதன் பரப்பளவோ ஒன்றரை ஏக்கருக்கு மேல்!



சும் வேலைபார்த்து வயசான அப்பா அம்மாவைக் காப்பர்த்தறதுன்னு முடிவு செஞ்சேன்; எங்கெல்லாமோ தேடியும், எம் படிப்புக்கு எந்த வேலையும் நல்லபடியா கெடைக்கல்லே.

''உன்னோட குடும்ப நெலமை தெரிஞ்சா முதலமைச்சர் உதவி செய்வாங்க, எழுதிப்போடுன்னு என்னோட ஃபிரண்டெல்லாம் ஒரு பெட்டிஷன் ஆட்டோ ஓட்ட எடுத்த லைசென்ஸ் காப்பியோட எழுதிப் போட்டேன்க. நான் ஒண்ணும் அவங்க கட்சிக்காரன் இல்லே. அதனால, அதுல நம்பிக்கையில்லாமெதான் இருந்தேன்; ஆனா பாருங்க.. திடீர்னு ஒரு நாள் ஒரு அதிகாரி வந்து, உனக்கு சீஃப் மினிஸ்டர் ஆட்டோ கொடுக்கிறதா முடிவு பண்ணியிருக்காங்கன்னு சொன்னாரு.. திகைச்சுப் போயிட்டேன்; அவர் நேர்லயே என்னை அவங்ககிட்ட அழச்சிகிட்டுப் போனாரு; ஒரு புது ஆட்டோ.. அவங்களே எனக்குக் குடுத்தாங்க; கெட்டிக்காரத்தனமா வெச்சிகிட்டு நல்லபேரு எடுக்கணும்னாங்க.. 'சரிங்கம்மா'ன்னு தாங்கமுடியாத சந்தோஷத்தோட அவங்க கையாலயே ஆட்டோ சாவியை வாங்கிகிட்டு வந்தேன்; அவங்க தயாளகுணத்தெ இப்ப நெனைச்சாலும் எனக்கு ஒடம்பு சிலிர்த்துப் போவுது பாருங்க! இந்த உதவியைக் காலகாலத்துக்கும்.. நான் மட்டுமில்ல- என்னோட குடும்பமே மறக்காதுங்க!''



பெட்டிக்கடை சாரதாம்மாள்

திரு. கணபதி ஆச்சாரி என்பவரின் மனைவி திருமதி. சாரதாம்மாளும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம், பெட்டிக்கடை வைப்பதற்காக நிதியுதவி பெற்றுக் கொண்டவர் ஆவார். நேரில் கேட்டபோது, அவர் சொன்னது இது:

''எனக்கு ரெண்டு பெண்ணுங்க மட்டுந்தானுங்க; அவங்க ரெண்டு பேருக்கும் கண்ணாலம் பண்ணி வெச்சதோட அவர் போய்ச் சேர்ந்துட்டாரு. இட்லி, வடைன்னு வியாபாரம் பண்ணி கஷ்ட சீவனம் பண்ணிக்கிட்டிருந்தேனுங்க; முதலமைச்சர் அம்மாவுக்கு எளுதிப் போடு, ஒதவி பண்ணுவாங்கன்னு எல்லோரும் சொன்னாங்க. ஒரு புள்ளயாண்டான் மூலமா, உள்ளதெச் சொல்லி எளுதி வாங்கி அனுப்புச்சேனுங்க. அந்தப் புண்ணியவதி என்னெக் கூப்புட்டு இந்தா மூணாயிரம் ரூவா, எதுனா பொட்டிக்கடை வெச்சி கண்ணியமா பொழச்சிக்கோன்னாங்க.

''மொகந் தெரிஞ்ச வங்ககூட மூணு ரூவா குடுக்க யோசிக்கிற இந்தக் காலத்துல.. என்னெ யாருன்னே தெரியாத அந்த மவராசி இவ்வளவு பணம் கொடுத்து ஆதரிச்சதை நான் மட்டுமில்லைங்க... எங்க ஊரு ஜனங்க பூராவுமே பாராட்டுதுங்கையா!''- என்று கண்கலங்க, உணர்ச்சி மயமாகக் கூறி, தலைக்கு மேலே இரு கரங்களையும் குவித்தார், மாண்புமிகு முதல்வர் மீதான நன்றியோடு.

**'வாட்ச் ரிப்பேரர்' உஸ்மான்**

நலிவுற்றோருக்கு உதவத் தயங்க மாட்டார் நம் முதல்வர் என்ற நம்பிக்கையோடு- பர்கூரில் சிறியதோர் கடிகார ரிப்பேர் கடை வைத்திருக்கும் ஜ.உஸ்மான் என்ற



33-வது வாலிபர் மாண்புமிகு முதல்வரிடம் உதவிகோரி மனுச் செய்திருக்கிறார்.

அங்குள்ள கட்சி அலுவலகத்தில் தரப்பட்ட இந்த மனுவின்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; அதன்படி மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஐயாயிரம் ரூபாய் அவருக்கு நிதியுதவி செய்யப்பட்டிருக்கிறது.

''ஏற்கெனவே கடை வைத்திருக்கும் தங்களுக்கு ஏன் பணம்?'' என்று அவரை அழைத்து விசாரித்தோம் நாம்.

அதற்கு அவர் சொன்னார்:

''போதுமான ஸ்பேர்பார்ட்ஸ் வாங்கி வைக்க வசதியில்லீங்க; அப்பா அம்மாவோட மூணு தங்கைங்களெ நான் காப்பாத்தியாகணும்; சொந்த சொத்துபத்துன்னு எதுவும் இல்லே. சரியான முதல் போட முடியாததால தொழில் வேற மந்தமுங்க சார். எப்பாடு பட்டாலும் மாசாமாசம் வருமானம் நானூறு ரூபாயெத் தாண்டாது. இந்த நிலைமைல எப்படிங்க குடும்பம் நடத்த முடியும்?... அதான் முதலமைச்சர் அம்மாகிட்ட நிதியுதவி கேட்டெழுதினேன்!''

''உமக்குக் கல்யாணம் ஆயாச்சோ?'' என்று நாம் கேட்க அதைக் கேட்டுச் சிரிப்போடு அவர் சொன்னார்-'' இனிமேதான் ஆகணும்; ஏன் இப்படிக் கேட்கறீங்கன்னு எனக்குத் தெரியும்; எங்க குடும்பம் நல்லாயிருக்கணும்கிற நல்ல நினைப்போட அம்மா அவங்க குடுத்த அந்தப் பணத்துல.. அதுக்காக நான் பைசா தொடமாட்டேங்க. எங்க கடைக்கு வந்து பாருங்களேன், இப்ப ஸ்பேர் பார்ட்ஸ் ஏராளமா வாங்கி வெச்சி, தொழில் ஜாம் ஜாம்னு நடக்குது. நம்ப முதலமைச்சருக்கு ஆண்டவன் நீண்ட ஆயுளைக் குடுப்பாருங்க.''

## தருமபுரிக்கு அருகில் லண்டன்?

**தருமபுரி மாவட்டத்தில் உள்ளது லண்டன் என்றால் உங்களுக்கு வியப்பாக இருக்கும்!**

**கிருஷ்ணகிரி பேருந்தில் ஏறிய ஒருவர் கண்டக்டரிடம் பணத்தைக் கொடுத்து ''லண்டனுக்கு ஒரு டிக்கட்'' என்றார். அருகிலிருந்த வெளி மாவட்டவாசியொருவர் ''லண்டனுக்கா?'' என்றார் வியப்போடு!**

**''சார் வெளியூரா?'' என்று கேட்ட கண்டக்டர், ''லண்டன் பேட்டைன்னு இங்கே ஒரு ஊர் இருக்கு; அதான் சார் லண்டன்!'' என்றார்.**

# தமிழறிஞர் பார்வையில் தகடூர்



சில குறிப்புகள்: தகடூர் கொங்கு நாட்டிற்குட்பட்ட பகுதியே

'இன்று நாமக்கல் என்று வழங்கப்படும் ஆரைக்கல் பண்டு அதியமான் அரசர்களின் கீழ் இருந்தது. சங்ககால அதியன் வழி வந்தவர்களில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சோமன் என்னும் அதியேந்திரன் புகழ் மிக்கவன். இதுகாறும் நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுகளின்படி மிகவும் வலிமையுள்ளவனாக கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட சோமனாகிய அதியேந்திரனே நாமக்கல் குகைக் கோயிலைத் தோற்றுவித்தவன் ஆவான்.'

- 'கலை' என்ற கட்டுரை -
தொல்லியல் துறை இயக்குநர்
இரா. நாகசாமி, எம்.ஏ.,

'இன்று தர்மபுரி எனப் புகழ் பெற்ற பண்டைய தகடூரில் வரலாற்றுச் சிறப்புள்ள இரு கோயில்கள் உள்ளன. இவை இன்னும் வரலாற்று ஆசிரியர்களின் கவனத்தைக் கவரவில்லை. இவை இரண்டும் ஒரே திருச்சுற்றில் உள்ளன. நுளம்பர்கள் 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆண்டனர். அவர்களால் இவை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். மல்லிகார்சுனர் ஆலயச் சிறப்புக் கருவறை முன் உள்ள மண்டபமாகும். இம்மண்டபத் தூண்கள் ஒப்பற்ற சிற்பச் செழுமை வாய்ந்தவை. இவற்றின் மேலுள்ள விதானத்தில் நடனமாடும் பெருமானின் உருவம் எழில் வாய்ந்தது. இருப்பினும் இவை தமிழக மரபில் இல்லாமல் அனந்தப்பூருக்கு அருகில் ஹேமாவதியைத் தலைநகராகக் கொண்ட நுளம்பர் மரபில் உள்ளன. இவை கொங்கில் கண்டு மகிழத்தக்க ஒப்பற்ற கலைப்படைப் பாகும்.'

- மேற்படி கட்டுரை

'பண்டைக் காலத்தில் தகடூர் என்று புகழ் பெற்ற தர்மபுரியில் 9-10-ஆம் நூற்றாண்டுகளில் சமணம் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. நொளம்ப அரசன் மகேந்திரன் காலத்தில் இங்கு ஒரு சமணத் திருக்கோயிலை ஒரு வணிகரின் மக்கள் நிதியண்ணன், சண்டியண்ணன் என்பவர் கட்டினார். இக்கோயிலுக்கு அவர்கள் நிவந்தங்கள் அளித்தனர். கி.பி. 892-ஆம் ஆண்டு (மல்லிகார்சுனர் ஆலயத் தூண்) கல்வெட்டுப் பதிவு செய்துள்ளன.'

—கட்டுரை: சமணம் - கொங்கு
நாட்டு சமணத் தளங்கள்
- டாக்டர் அர. சம்பகலட்சுமி

'கொங்கு நாடு பழங்காலத்தில் தற்போதைய கோவை, சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களையும், மதுரையில் பழனி வட்டத்தையும், திருச்சியில் சில பகுதிகளையும் கொண்ட நாடாகத் திகழ்ந்தது.'

—கட்டுரை: 2000
ஆண்டுகளுக்கு முந்தைய
கொங்கு நாடு.
- சா. குருமூர்த்தி,
எம்.ஏ., எம்.லிட்.,

'ஆத்தூர், ஊத்தங்கரை, வட்டங்கள் ஒழிந்த இன்றைய சேலம் மாவட்டம், கோவை மாவட்டம், மதுரையில் பழனி வட்டம், திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டம் ஆகியவற்றை உட்கொண்ட நிலப்பகுதியே கொங்கு நாடென்று கல்வெட்டு, இலக்கியச் சான்றுகள் குறிப்பிடுகின்றன.'

கட்டுரை: நாட்டுப் பிரிவுகள்
ஒய். சுப்பராயலு,
எம்.ஏ., எம்.லிட்.,

'அதியமான் நெடுமானஞ்சியின் அத்தை மகளாகிய நாகையார் கொங்கு நாட்டில் நங்கை நல்லாரின் புலமைச் செறிவிற்குச் சான்றானவர்.'

—கட்டுரை: பொன்மலி
கொங்கின் புலமை நங்கை
- ஔவை. சு. நடராசன்,
எம்.ஏ.,எம்.லிட்.,

'கொங்கு நாட்டில் அரூர் வட்டத்திலுள்ள அச்சலவாடி, நவிலை, வேப்பாடி, செல்லம்பட்டி, கடத்தூர் நடுகல் சிற்பங்கள் கொங்கு நாட்டுப் புறப்பொருள் சிற்பக் காட்சிகள் சிலவேயாகும்.'

—கட்டுரை: புறப்பொருட்
சிற்பங்கள்
- கல்வெட்டாய்வாளர்,
புது. போ. வேங்கடராமன்

'கொங்கு நாட்டுள் குறும்பர், எயினர், வேடர் ஆகியோரின் ஆளுகை ஒரு புறமும், மழவர், கோசர், கொங்கர் ஆளுகை ஒரு புறமும் அமைந்து கிடைந்தன.'

—கட்டுரை: சங்க இலக்கியத்தில்
கொங்கு
- க.ப. அறவாணன்,
எம்.ஏ., பி.ஓ.எல்.,

**தொகுப்பு:**
**புலவர் கா.சி. கிருஷ்ணன்.**

★ தருமபுரி மாவட்டத்தில் - 'இவத்த' என்பதற்கு இங்கே என்று பொருள். அதேபோல 'எவத்த-' என்றால் எங்கே? - 'அவத்த' என்றால் அங்கே. யாராவது தூரநின்று அழைத்தால் 'ஏன்?' என்போரைவிட 'ஓய்!' என்போரே இங்கு அதிகம். 'எமுட்டு' என்றால் எவ்வளவு என்று பொருள். 'வீசி எறி' என்பதற்கு 'விசாட்டு', 'கடாசு' என்பர். 'கேழ்வரகை' இப்பகுதி மக்கள் 'ஆரியம்' எனக் குறிப்பிடுகிறார்கள்.

# தொட்டில்!

— தகதிரான்

''ஏணையில புள்ளய போட்டுனுகீறேன். செத்த வந்து ஆட்டிவுடு பாட்டி. களி ஒல கொதிக்குது மாவு போட்டு கெலாறணும்'' என்று பாப்பாத்தி கூப்பிட்டாள். எதிர் வீட்டுத் திண்ணையில் கால் நீட்டி உட்கார்ந்திருந்த காமாட்சிப் பாட்டி எழுந்து சென்றாள்.

''லொலொ லொலொ லொலோ-ஆயி! தூங்குடா கண்ணா'', என்று தாலாட்டுப் பாடினாள் பாட்டி.

அடுப்படியில் அமர்ந்திருந்த பாப்பாத்தி, ''சமாச்சாரம் தெரியுமா பாட்டி'' என்றாள்.

''என்றி சொல்ற...?''

''நம்ம செவத்தாம் பேத்திக்கு பொண்ணு பொறந்து செத்துப் போச்சின்னு போன வாரம் சொன்னாங்கில்ல...''

''ஆமா...''

''அது இல்லியாம், பொறந்தது பொட்டன்னு தெரிஞ்சதும் கூடைய கழுத்து சாவடிச்சிட்டாங்களாம். இப்பதான் ஒவ்வொன்னா வெளி வருது''.

''அட கசமாலம் புடிச்சவங்களே, நாசமா போவ... நா கூட சாவுக்கு போயிருந்தேன். புள்ள செக்கச் செவேல்னு இந்துச்சி. என்னுமோ அதுக்கு ஆயுசு அம்முட்டுதான்னு நெனச்சேன். இப்ப இப்படியா சேதி'',

''நீ எங்கியாச்சும் ஒலாரி வைக்காதே. அப்பாலித்துக்கும் லகலகன்னு புடிச்சுக்குவாங்க''

''நா வம்பு சண்டைக்கும் போறதில்ல. வந்த சண்டைய உட்றதுமில்ல. நம்முலுக்கு எதுக்குடி அந்த காச்சாரம். அத வுடு. நீ சட்டுபுட்டுனு வேலய கவனி. களிய பாத்து கெலாறு. கட்டி உலப் போவுது. உங்க ஊட்டுக்காரன் வந்தா லொள்லொள்ன்பான்'' என்று பெருமூச்சு விட்டாள் பாட்டி.

வீட்டுக்குள் சிம்மினி விளக்கு காற்றுக்கு அலை பாய்ந்தது. பாட்டியின் மனமும் அப்படித்தான்.

''படுபாவிப் பசங்க, இப்பல்லாம் பொண்ணு பொறந்தா என்னமோ குடி முலுவிப் போனாப்படி அங்கலாய்க்கறாங்க.

சாவடிக்க தயங்க மாட்டங்கறாங்களே. பாவம் புண்ணியம் பாத்த காலமெல்லாம் மல ஏறிப் போச்சு. மாரியாத்தா, படவட்டா அவங்களுக்கு ந தாண்டியம்மா கூலி கொடுக்கணும்'' என்று மனதில் நினைத்துக் கொண்டாள். மௌனமாக இருந்தாள்.

''ஆயா! என்னா கம்முனு ஒக்காந்திட்ட'' என்ற குரல் அவளை மீண்டும் நிலைக்குக் கொண்டு வந்தது.

''வாடா! இப்பத்தான் வந்தியா... எம் மனசே கலஞ்சி போச்சிடாப்பா... பாலா போன மனசு கல்லா இல்லலே... வருட்டா! அடியே! பாப்பாத்தி இவனுக்கு கிண்ணி எடுத்து வைடி''.

''என்ன பாட்டி சொல்ற?''

''ஒன்னுமில்லடா. நீ போய் சாப்புடு''

''நீயும் களி தின்னுட்டுப் போ''

''ராத்திரில சாப்ட்டா இப்பெல்லா வவுரு பிர்னு ஆவுது நா ஊட்டுக்குப் போறேன்'' என்று கூறியபடி நடந்தாள்.

திண்ணையில் விரித்திருந்த கம்பளியைச் சரி செய்தாள். உட்கார்ந்தாள்; சுவரில் சாய்ந்தாள். புகையிலைத் துண்டை வாயிலிட்டு மெள்ளத் தொடங்கினாள்.

''வரவர ஆம்பளப் பசங்க அக்குருமம் தாஸ்தியாப் போயிடுச்சு. அந்த காலத்தில பரிசம் போட்டு பொண்ண கட்டிப்பாங்க. இப்ப என்னடான்னா பொண்ண கட்டிக்கிறதுக்கு அத குடு இத குடுன்னு பிச்சி பேனு பாக்கறாங்க... அதுக்கோசரம் பொட்ட புள்ளயே பொறக்கக் கூடாதுங்கறதா. ஈவு எரக்கமே இல்லாமப் போச்சே. எங்க பாரு இதே கத...'' என்று நினைத்த பாட்டியின் மனதில் மற்றொரு காட்சி இரண்டு வாரங்களுக்கு முன் நடந்தது, வந்தது.

அன்று வெள்ளிக்கிழமை. காலையில் குளித்துவிட்டு ஊர்க் கோடியில் உள்ள மாரியம்மன் கோயிலுக்குச் சென்றாள். அப்பொழுது... கார் ஒன்று வந்து கோயிலருகே நின்றது. அதிலிருந்து நல்ல உடல் கட்டும் அழகும் கூடிய ஒரு ஜோடி இறங்கினர். கையில் பூமாலையுடன் அவன் நடந்து வர, பழத்தட்டை ஏந்தி பட்டுப்புடவை சரசரக்க அவள் தொடர்ந்து வந்தாள்.

''பெரியெடத்துப் புள்ளிங்களாட்டம் கீது'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டு தள்ளி நின்றாள். பாட்டி, சில பெண்களும் ஆண்களும் ''யார்ரா இது'' என்று முணுமுணுத்தபடி தூரத்தில் நின்று பார்க்கத் தொடங்கினர்.

வந்தவர்கள் எவரையும் கவனிக்கவில்லை. அம்மனுக்குப் பூஜை செய்தனர். நீண்டு விழுந்து அவன் வணங்க, மண்டியிட்டு அவள் வணங்கினாள். பிறகு இருவரும் பழத்தட்டில் வைத்திருந்த துணித் துண்டை எடுத்தனர். கோயில் பக்கமிருந்த மரத்தருகே சென்றனர். கிளையில் கட்டித் தொங்க விட்டுத் திரும்பினர்! அம்மனை மீண்டும் வளங்கினர்.

''ஓ! அப்படியா சமாசாரம். புள்ள வரம் கேக்க வந்தவங்களா அட பாவமே! மாரியாத்தா தங்கச் செலையாட்டம் கீறவங்களுக்கு இப்டி கொற வச்சிட்டியே, தாயே! கண்ணத் தொறந்து பாரம்மா'' என்று கண்களை மூடி மனதில் வேண்டிக் கொண்டாள் பாட்டி. மீண்டும் அவள் கண்ணைத் திறந்து



பொழுது அவளையே அவன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

''நீங்க... கீர வித்த காமாட்சியம்மா தானே'' - அவன் கேட்டான்.

''ஆமா சாமி ... இப்பெல்லாம் ஊர் சுத்த முடிறிதில்ல. நாலஞ்சி வருஷமா நிப்பாட்டிட்டேன். ஆமா, நீங்க யாரு சாமி?''

''நா சாமி இல்ல பாட்டி... நா உம் பேரன் மாதிரி, டவுன்ல ராஜா வீதில ராமசாமி இருக்காரே அவ ரோட மகன். நீங்க தானே எங்க வீட்டுக்கு ரெகுலரா கீரை கொடுப்பிங்க''.

''அப்டியாப்பா... ரொம்ப சந்தோஷம்பா! அம்மா நல்லா கீறாங்களா... ஒங்கம்மா தங்கம்னா தங்கந்தான்''.

''எல்லோரும் நல்லா இருக்கோம். இவ எஞ் சம்சாரம்''.

காமாட்சிப் பாட்டியை அவள் வணங்கினாள்.

''ஐயய்ய... என்ன போயி கும்படறயேம்மா. ராஜா ராணி மாதிரி கீறவங்களுக்கு என்ன கொறன்னு புரிஞ்சிகிட்டேன். சாமி கைவுடாதும்மா, நல்லா கும்புட்டுக்கோ...''

''எவ்ளவு இருந்து என்னம்மா, வாரிசில்லாத குறை பெரிய குறை. என்னால தாங்க முடியும். இவளாலே...''

''பொம்பளைக்கு புள்ள பெத்து எடுத்து கொஞ்சற சுகம் பெரிய சுகம்பா.''

''ஆமாம்மா... இன்னைக்கு டாக்டர பார்க்க வேலூர் புறப்படறம். இந்த அம்ம வேண்டிக்கச் சொன்னாங்க. அதுக்குத்தான் வந்தோம்.''

''நா சொல்றேன், சாமி நல்ல வழி காட்டும். ஏதோ... ஒரு வழிய காட்டும் சந்தோஷமா போய்ட்டு வாங்க, சாமி''.

அவர்கள் மகிழ்ச்சி சிரிப்பைக் காட்டியபடி வெற்றிலைப் பாக்கு பழம் பூ கொடுத்தார்கள். பாட்டி மடியேந்தி வாங்கிக் கொண்டாள்.

''டவுனுக்கு வந்தா வீட்டுப்பக்கம் வாம்மா. உங்க வாக்குப்படி நடந்தா நானே வருவேன்'' என்று கூறியபடி

'மானே மருக்கொழுந்தே
ஆவாரம் பூக்கொழுந்தே
தேனேஎன் தினைக்கருதே
ஆசைக் கண்ணாட்டி - நம்ம
தேடித்தான் சோளக்கொல்லை
ஏங்குது கைகாட்டி!'

- தருமபுரி மாவட்டக்
கிராமியப் பாடல்

அவன் நடக்க, அவளும் நடந்தாள். பாட்டி பார்த்தபடி நின்றாள்.

இந்தக் காட்சி மறைந்தது. காமாட்சிப் பாட்டி புகையிலை எச்சிலை 'பிசுக்'கென்று உமிழ்ந்தாள். புகையிலையைக் காரித் துப்பினாள். நீண்டு படுத்தாள்.

''புள்ள பொறந்தா பொட்டைன்னு பொதார்ல போட்டி நாதாரியும் கீறான். புள்ள இல்லையேன்னு சாமிய கும்டற மவராசனும் கீறான்.'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். ''மாரியாத்தா ஒன்ன கும்முட்டுட்டு போனவங்களுக்கு என்னா வழி காட்டட்ஙயோ?'' என்று நினைத்தவள் நினைவில் தொட்டில் ஒன்று ஆடத் தொடங்கியது. ''ஆராரோ ஆரிரோ'' என்று தாலாட்டுப் பாடுவதாகவும் உணர்ந்தாள்.

இது நடந்து இரண்டு நாள் ஆயிருக்கும்.

விடியற்காலை காமாட்சிப் பாட்டி கண் விழித்தபோது பாப்பாத்தியின் கணவன் வாந்தி எடுத்துக் கொண்டிருந்தான்.

''என்னடா ஒக்காளம் வருதா'' என்றெழுந்தாள்; வந்தாள்.

''ஒன்னுமில்ல பாட்டி - நீ போய் படு''

''தூக்கம் எங்க வரப் போவுது. அடியே பாப்பாத்தி - நீ என்னடி பண்ற உள்ள...'' பாட்டி அழைத்தாள்.

பாப்பாத்தி வெளியே வந்தாள். ''அடியே! பாட்டிய உள்ள இழுத்துனு வா, என்னுமோ ஏதோன்னு ஊரக் கூட்டிப்புடும்'' என்று அவள் காதருகே கூறினான். பாப்பாத்தியின் கணவன் உள்ளே நடந்தான்.

''என்னடி அவனுக்கு...?'' என்ற பாட்டியை, 'உஸ்... உள்ளவா' என்று அழைத்துச் சென்றாள்.

''ஒண்ணுமில்ல பாட்டி, ஒரு காரியமாயி போச்சி. காலும் ஓடுல கையும் ஓடுல'' என்றான்:

''என்னடா பண்ணிபுட்ட...''

''ஒண்ணும் தப்பு பண்ணல பாட்டி. எங்கியும் ஒலறிபுடாதே. ராத்திரி கோம்பைக்கு சாராயம் காய்ச்சறவங்களுக்கு வெல்ல மூட்டத் தூக்கினு வந்தோம். கூட வந்தவங்க பிரிஞ்சிட்ட பின்னாடி நா வந்துனேந்தேன். நம்ம ஊருக்கு கொஞ்ச தூரத்துல 'கியாங்கியாங்'னு கொளந்த சத்தம். சுத்தி முத்தி பாத்தேன். செடி பக்கத்துல துணி மூட்ட; தொட்டுப் பார்த்தேன். பச்ச கொளந்த என்ன பண்றது?'' ஒன்னும் ஓடுல. சட்டுனு ஆஸ்பத்திரி தொட்டில் ஞாபகம். அத தூக்கினு பரக்க பரக்க போயி தொட்டில்ல வச்சனா யார்ராதுன்னு யாரோ கூப்டாங்க. அம்முட்டுதான். அங்க புடிச்ச ஓட்டம். சந்து பொந்துல பூந்து ஓடியாந்து ஊட்லே புகுந்துகினேன் கொலப்பம் - ஒரே கொலப்பம் - கொமட்டல்...''

''ஒரு உசுர காப்பாத்திட்டடா'' என்று பெருமையாக அவனைத் தட்டிக் கொடுத்தாள். பாட்டி.

பகல் 11 மணியிருக்கும் ராமசாமியின் மகன் காரில் வந்திறங்கினான் காமாட்சிப் பாட்டியைப் பார்த்தான். ''வீட்டுக்கு அழைச்சிட்டுப் போக வந்திருக்கேம்மா. சாமி வழி காட்டும்னு சொன்னிங்க. வழி காட்டிச்சு. நாங்க வேலூர் போனம். எங்க ரண்டு பேருக்கும் குழந்தை பாக்யமில்லன்னு சொல்லிட்டாங்க. டாக்டர் சொன்னதிற்குப் பிறகு யோசிச்சோம். அரசு அறிவித்துள்ள தொட்டில் திட்டம் நினைவு வந்தது. நம்ம மருத்துவமனையில் சொல்லி வைத்தோம். இன்றுதான் வழி பிறந்தது; ஒரு பெண் குழந்தெ கிடைச்சிது'' என்றான்.

காமாட்சி பாட்டி காதில் ஆராரோ ஒலிக்க, மனதில் ஒரு தொட்டில் ஆடத் தொடங்கியது; அவர்கள் வந்த காரைப் பார்த்தாள்; அதற்குள் ஒரு சின்ன அரும்பு சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தது.

''பெண்களுக்குச் சம உரிமை பெண் சிசுக்களுக்குப் பாதுகாப்பு'' என்று பேச்சளவோடு நில்லாமல் அதைச் செய்துகாட்டி வரும் அரசின் திட்டத்தைக் காமாட்சிப் பாட்டியின் உள்மனம் பாராட்டியது.

# தர்மபுரி மாவட்ட கோயில்கள்



புடைப்புச் சிற்பத்தில் இராமாயணம்

தி. சுப்பிரமணியன்

சங்க காலத்தில் கோயில்கள் மண், மரம், செங்கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கட்டப்பட்டன. இவை காலத்தால் அழியக்கூடிய பொருட்களாக இருந்த காரணத்தால்தான் சங்க காலத்தில் எடுக்கப்பட்ட கோயில்கள் அழிந்துவிட்டன. இத்தகைய நிலையை மாற்றவே பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் மண், சுதை, செங்கல், மரம் ஆகிய பொருட்களை உபயோகிக்காமல் கல்லால் கோயில் எடுத்தேன் என்று கல்வெட்டு மூலம் கூறியுள்ளான்.

தருமபுரி பகுதியில் பல்லவர் காலம் தொட்டுக் கோயில்கள் எடுக்கப்பட்டுள்ளன. மலைசூழ்ந்த இம்மாவட்டத்தில், குன்றம் தோறும் சிறுசிறு கோயில்கள் காணப்படுகின்றன; அவற்றுள் சில புகழ்பெற்றவை.

## தீர்த்தமலை

குகைக் கோயில்களை வடித்த பல்லவ மன்னர்கள் அருகுக்கு அருகிலுள்ள தீர்த்தமலையில் கொற்றவை புடைப்புச் சிற்பம் ஒன்றைச் செதுக்கியுள்ளனர். இதில் ''ஸ்ரீ பகவதி குறுச்சூலி'' என்று வட்டெழுத்தில் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கொற்றவை எட்டுக் கரங்களுடனும், பல்லவர் காலச் சிற்பச் சாயலிலும் காணப்படுகின்றாள்.

இங்குள்ள சிவன் கோயில் தீர்த்தகிரி ஈஸ்வரர் என்று பெயர் பெற்றுள்ளது. இங்கு கி.பி. 1012 முதல் கல்வெட்டுக்கள் உள்ளன. இங்கு கருவறை, அர்த்த மண்டபம், முகமண்டபம், பலிபீடம், துவஜஸ்தம்பம், சோபுரம், திருசுற்று ஆகியன அழகாக அமைந்துள்ளன. விமானத்தில் சுதை உருவங்கள் பிற்காலத்தில்

## விவேகானந்தர் அறக்கட்டளை



தருமபுரிக்கு, சுவாமி விவேகானந்தர் வந்து சென்றதன் நினைவாக 'ஸ்ரீ விவேகானந்தர் கொடை மற்றும் அறக்கட்டளை' என்கிற அமைப்பு நிறுவப்பட்டிருக்கிறது.

அவ்வமைப்பின் மூலம்- சுவாமி சித்பவானந்தர் தொகுத்த கீதையின் சுருக்கம் (ஆங்கிலம்), அருள்மிகு தருமபுரி காமாட்சியம்மன் பதிகம் போன்ற பல சிறந்த நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாறான வெளியீடுகளில் 'தீர்த்தகிரி புராணமும்' ஒன்றாகும்.

சைவ எல்லப்ப நாவலர் எழுதிய 'தீர்த்தகிரி புராணம்', புரசை சபாபதி முதலியாரின் பொழிப்புரையுடன் கூடியதாகும்.

இப்புராணத்தில்-'ஓர் அரசமரம், 5 ஆலமரம், 3 தென்னைமரம், 10 வில்வமரம், 20 புளிய மரங்களை வளர்த்தவர்களுக்கு நரகமே இல்லை' என்று கூறப்பட்டிருக்கிறது- இது சரியோ தவறோ நமக்குத் தெரியாது; ஆனால் 'மரம் நடுவோம்' என்கிற அரசுக் கொள்கையை வலியுறுத்துகிறதல்லவா? இப்படிப் பல அரிய செய்திகள் இதில் உள்ளன.

தருமபுரி மாவட்டத்தில் உள்ள தீர்த்தமலை மீதிருக்கும் அருள்மிகு தீர்த்தகிரியார் கோயில் பற்றிய தலபுராணமே இந்நூல்.

செய்யப்பட்டவை. முதல் இராசேந்திரன் இக்கோயிலில் சேத்திரப்பாலர், சண்டிகேஸ்வரர் ஆகிய தெய்வங்களுக்கு தனிதனி கோயில்கள் எடுத்துள்ளார். மண்டபத்திலுள்ள தூண்கள், கபோதம் போன்றவை பிற்காலத்தில் எடுக்கப்பட்டவை.

## தருமபுரிகோட்டைக் கோயில்:

கி.பி. 8-ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இந்து, சமண சமயங்கள் தருமபுரி பகுதியில் இருந்தன. இங்கு சமண சமயக் கோயில் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அருள்மிகு மல்லிகார்சுனர் கோயில், காமாட்சி அம்மன் கோயில் ஆகிய இரு கோயில்கள் கோட்டைக் கோயில்களாகக் காணப்படுகின்றன.

காமாட்சியம்மன் கோயிலில் உள்ள ஒரு தூண் 'தொங்கும் தூண்' எனப்படுகிறது. கீழே எவ்விதப் பிடிமானமும் இல்லாதிருப்பதே இதற்குக் காரணம்.



தொங்கும் தூண்

இக்கோயிலிலுள்ள ஆறு தூண்கள் கலை அழகு வாய்ந்தவை. தூண்களின் அடிப்பாகம் சதுரமாகவும், அதைத் தொடர்ந்து எண்பட்டை, தாமம், குடம், போதிகை ஆகியன கட்டடக் கலைக்குழு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. தூண்களில் கஜசம்ஹாரமூர்த்தி, அடிமுடி காணா அண்ணல், பூவராகமூர்த்தியாக திருமால், இசைக் கலைஞர்கள், நடனமாதர்கள் போன்ற காட்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மண்டபத்தின்மேல் விதானத்திலுள்ள திக்குபாலர்கள் வாகனங்களின்மேல் அமர்ந்த நிலையில் காட்டப்பட்டுள்ளனர். இவை நுளம்பர் கால கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக உள்ளன.



சந்திரசூடேஸ்வரர் கோயில்

காமாட்சியம்மன் கோயிலின் அதிட்டானத்தில் இராமாயணப் புடைப்புச் சிற்பங்கள் கோயிலைச் சுற்றிலும் செதுக்கப்பட்டுள்ளன. இவை உயிரோட்டம் உள்ளவை. இதில் நுளம்பர்களின் கலையுடன் சோழர், விஜய நகர மன்னர்களின் கலையழகும் காணப்படுகின்றது.



அதியமான் கோட்டை கோயில்

ஈஸ்வரன் சந்நிதி கோபுரத்தைவிட, அம்மன் சந்நிதிக் கோபுரம் உயரமாகக் காணப்படுகிறது.

## அதியமான் கோட்டைக் கோயில்

அதியமான் கோட்டை என்றதும், ஏதோ கோட்டை இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டாம்; முன்பு கோட்டை இருந்ததற்கான தடயம் உள்ளது. அதியமான் கோட்டையிலுள்ள சென்னராயசாமி கோயில் விஜய நகர மன்னர்களால் கட்டப்பட்டது. இக்கோயிலுள்ள ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன. இதில் இராமாயண காட்சிகள் தெலுங்கு விளக்கங்களுடன் தீட்டப்பட்டுள்ளன. மையப்பகுதியில் திருமாலின் விஸ்வரூபம் காணப்படுகின்றது. மேலும் நடனமாதர்கள், சண்டைக் காட்சிகள் போன்ற ஓவியங்கள் தத்ரூபமாகக் காணப்படுகின்றன.



காமாட்சியம்மன் கோயில் மேல்விதானம்

கோயிலின் கருவறையில் விஷ்ணு தன் தேவியர்களுடன் காட்சியளிக்கின்றார். கருவறையின் விமானம், கோபுரம், திருச்சுற்று போன்றவை பிற்காலத்தில் எடுக்கப்பட்டவை.

பெண்ணேஸ்வர மடம் கோயில், கம்பை நல்லூர் கோயில் ஆகியன வரலாற்றுச் சிறப்புடையன.

● உண்மையில்- கடவுள் எனப்படுவது, அகிலமாம் அன்பாம். அஃது, உலகில் உள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும் சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலைநிறுத்துகின்றது.

—இராமலிங்க அடிகளார்



## தளி ஒன்றியத்தில்

# ஒரு முன்னோடித் திட்டம்

**எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப.,**
சார் ஆட்சியர் மற்றும் திட்ட அலுவலர்

ஒரு குறிப்பிட்ட மக்களுக்காக திட்டம் உருவாக்கப்பட்டு அது முனைப்புடன் செயல்படுத்தப்பட்டால் அங்குள்ள மக்கள் வறுமைக் கோட்டிலிருந்து வெளிவந்து, வாழ்க்கைத் தரம் உயர்ந்து, கூடுதல் வருவாயுடன் சிறப்பாக வாழ்வார்கள் என்பதற்கு ஒரு சான்று தளி ஊராட்சி ஒன்றிய மக்கள்.

தருமபுரி மாவட்டத்திலுள்ள தளி வட்டாரத்தில் பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (International Labour Organisation) மூலமாக ஒரு 'சிறப்புப் பொதுப் பணித் திட்டம்' செயல்பட்டு வருகிறது. இந்தியாவில், த்மிழ்நாட்டில், தளி வட்டாரம் மற்றும் மேற்கு வங்காளத்தில் பந்துவான் வட்டாரம் ஆகிய இரு இடங்களில் மட்டுமே இச்சிறப்புத் திட்டம் செயல்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தருமபுரி மாவட்டத்தில் ஒரு பின்தங்கிய பகுதியாகும் தளி ஒன்றியம். ஏனைய கிராம வளர்ச்சித் திட்டங்களைப் போன்று இத்திட்டத்தின் மூலம் சாலை வசதி, ஏரிகள் பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, காடு வளர்ப்பு சமுதாயக் கிணறுகள் அமைத்தல் போன்ற வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டாலும், இதர திட்டங்களில் இத்திட்டம் சற்று மாறுபட்டுள்ளது.

பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு, இத்திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாகவும், (Pilot Project) இத்திட்டத்தின் அனுபவம், வழி முறைகள் முதலானவைகளைக் கொண்டு இதர வட்டாரப் பணிகளுக்கு விரிவுபடுத்தவும், கிராம வளர்ச்சி திட்டமிடுதலில் ஒரு புதிய யுக்தியைக் கையாள்வதற்கும், முயன்று வருகிறது.

முதலில், பணிகளைத் தேர்ந்து எடுத்து அப்பணிகளை மேற்கொள்வதற்கு அந்தந்தக் கிராம மக்களையே உட்படுத்துவதும், தேர்ந்தெடுத்த வேலைத் திட்டங்கள் இதர அரசு மற்றும் அரசு சார்பில்லா இதரத் திட்டங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படச் செய்வதும் இம் முன்னோடித் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். பின்னர் உள்ளூர் ஏழை மக்களைக் கொண்டே செயல்படுத்தப்படும் இப்பணிகளில், தொழிலாளர் நலன், அவர்களின் உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கத் தக்க வகையில் செயல்படுவது இதன் சிறப்பு அம்சமாகும். இந்தச் சிறப்பு முன்னோடித் திட்டத்தின் திட்ட அலுவலராக ஒரு சார் ஆட்சியர் நியமிக்கப்பட்டுள்ளார். டேனிடா (DANIDA) நிறுவனத்தின் மூலம் நன்கொடை பெற்று அதனைத் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்திற்கு, பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் அளிக்கிறது. மாவட்ட வளர்ச்சிக் கழகம் இந்த நிதியை, சார் ஆட்சியர் மற்றும் திட்ட அலுவலருக்குத் தருகிறது. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பைச் சேர்ந்த தேசிய நிபுணர் இத்திட்டத்தை மேற்பார்வையிடுகிறார்.

### ஹள்ளி - பள்ளி

தருமபுரி மாவட்டத்தில் உள்ள பல ஊர்களின் பெயர்கள் 'ஹள்ளி' அல்லது 'பள்ளி' என்றே முடிகின்றன.

இதற்குக் காரணம் தருமபுரி மாவட்டத்தின் இரு எல்லைகளாகக் கர்னாடகமும், ஆந்திராவும் இருப்பதுதான்.

'ஹள்ளி' என்பது கன்னடம்; 'பள்ளி' என்பது தெலுங்கு. இந்த இரண்டுக்குமே கிராமம் என்பதுதான் பொருள். உ.ம். - நல்லம்பள்ளி, போச்சம்பள்ளி, மாரண்டஹள்ளி. தென்தமிழ்நாட்டில் இதையே 'பட்டி' என்று அழைப்பது குறிப்பிடத்தக்கது.

தளி வட்டாரத்தில் இச்சிறப்புத் திட்டம் 1.1.1989-இல் தொடங்கி மூன்று ஆண்டுகள் செயல்பட அனுமதி வழங்கப்பட்டு ரூ.15,240 இலட்சம், முதலில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 30.6.'93 வரை இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன் கிராமங்களுக்கு நிலையான சொத்துக்கள் உண்டாக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாடு (Watershed development) திட்டத்தின்கீழ் 24 பணிகளும், சாலை மேம்பாட்டிற்காக முக்கிய 4 சாலைகளும், நீர்ப்பாசன மேம்பாட்டின் கீழ் 10 ஏரிகளில் பாசனக் கால்வாய் சீர்திருத்தப் பணியும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மண்வளப் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் அச்சுபாலு, மல்லிகார்ஜீனாதுர்கம், தளி ஆகிய 3 நீர்ப்பிடிப்பு மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.16.49 இலட்சம் செலவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1992-'93-இல் 4 கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் ஒரு தடுப்பு அணை கட்ட ரூ.11.37 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தளி வட்டாரம் மரங்கள் வளருவதற்கு உரிய தட்பவெப்ப சூழ்நிலையைச் சாதகமாகக் கொண்டிருப்பதால், சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் வருமான இன மரங்கள் (economic trees) நடப்பட்டுள்ளன. அத்துடன் ஏழை விவசாயிகள் பட்டு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் முதல் மூன்று ஆண்டுகளில் 774 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 580 ஏக்கர் நிலப்பரப்பில் பட்டு மர நாற்றங்கால் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 700 விவசாயிகளுக்குப் பட்டு வளர்ப்பு சம்பந்தமாகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நார் மூலம் கயிறு திரித்தல், மூங்கில் கூடை முடைதல், ஊதுபத்தி தயாரித்தல், தேனீ வளர்த்தல், குழந்தைகள் பராமரிப்புப் போன்ற பணிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

இதைத்தவிர, இத்திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப்பட்ட பணிகளை 'கிராம மக்களே பராமரிக்க வேண்டும்' என்ற கோட்பாட்டினை வலியுறுத்த, கிராம மக்களிடையே விழிப்புணர்ச்சி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. பாசனத் திட்டங்களைப் பராமரிக்க ''நீர்ப்பாசனக் குழுக்கள்'' அமைக்கப்பட்டு, நிர்வாகத் திறமையை மேம்படுத்த போதிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.





இந்தச் சிறப்பு முன்னோடித் திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் மூன்று இலட்ச மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 51 சதவிகிதம் பெண்களின் உழைப்பு நாட்களாகும். சுமார் 140 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டம் திட்டம் மேலும் 18 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டு, அதற்குக் கூடுதலாக சுமார் 70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனம் இதுவரை இந்த முன்னோடித் திட்டத்துக்கு ரூ.186 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ரூ.141.88 இலட்சம் 30.11.'92 வரை பல்வேறு திட்டப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிகளைத்தவிர,



இந்தச் சிறப்பு முன்னோடித் திட்டத்தின்கீழ், தளியில் ஒரு தேசிய திட்ட அலுவலகமும், ஒரு கிடங்கும் கட்டப்பட்டுள்ளன. இந்தச் சிறப்புப் பொதுப்பணித் திட்டத்தின் மூலம் பாசனம், நீர் மற்றும் மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, சாலை அமைத்தல், பட்டு வளர்ப்பு போன்ற துறைகளில் நிலையான சொத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இதன் விளைவாக நிலையான வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன் வாழ்க்கைத் தரமும் பன்மடங்கு உயர்ந்துள்ளது.

மிகவும் பின்தங்கிய, வளர்ச்சி பெறாத பகுதியாகக் கருதப்பட்ட தளி ஒன்றியம், இச்சிறப்புப் பணிகள் திட்டத்தின்கீழ் புதிய பொலிவு பெற்றுள்ளது.

இந்த முன்னோடித் திட்டம் பற்றி பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் தேசிய வல்லுநர் திரு. கே.கே.தீர் அவர்கள் கூறுகையில், ‘இது ஒரு சிறந்த திட்டம் இதை மற்ற இடங்களிலும் செயல்படுத்துவது சிறந்தது. அதன் பயனாக அங்குள்ள மக்களுக்கு நீண்டகாலப் பயன்கள் கிடைக்கும். எனவே, இந்தத் திட்டத்தைத் தருமபுரி மாவட்டத்தில் மேலும் 6 அல்லது 7 ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தும் கருத்து பரிசீலனையில் உள்ளது. இன்னும் ஆறு மாதங்களில் முடிவு தெரியும்’ என்று கூறினார்.

இவ்வாறு இந்தச் சிறப்புத் திட்டம் விரிவுபடுத்தப்படும்போது தருமபுரி மாவட்டத்திலுள்ள சூளகிரி, கெலமங்கலம், தருமபுரி, மத்தூர், பெண்ணாகரம், அரூர் ஆகிய 6 ஒன்றியங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரி

**இது தருமபுரி மாவட்டத்தின் இரண்டாவது மிகப்பெரிய நகரமும் சரித்திரப் புகழ்மிக்க இடமுமாகும். இங்கு ‘சையத் பாஷா மலைக்கோட்டை’ என்ற பழமைவாய்ந்த கோட்டை காணப்படுகிறது. கிருஷ்ணகிரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இந்தப் புகழ்மிக்க கோட்டைக்குச் செல்லாமல் போவதில்லை. இங்குள்ள கிருஷ்ணகிரி அணை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாகும்.**



## இரயில் போக்குவரத்து

**தருமபுரி மாவட்டத்தின் தெற்குப்பகுதி சேலம்-பெங்களூர் மீட்டர் இரயில்பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. இந்தக் குறுகிய இரயில் பாதையின் மூலம் தருமபுரி மாவட்டத்தின் வடக்குப்பகுதி பெங்களூர் நகரத்துடனும் தெற்குப்பகுதி சேலம் நகரத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்தினூடே மொத்தம் 228 கி.மீ. தூரத்துக்கு இரயில் பாதைகள் போடப்பட்டுள்ளன. இதில் 57 கி.மீ தூரம் அகல இரயில் பாதை. மீதமுள்ள 171 கி.மீ. தூரம் குறுகிய இரயில் பாதையாகும். திருப்பத்தூரிலிருந்து பர்கூர் வழியாகக் கிருஷ்ணகிரி வரை 1941 வரை இரயில் பயணம் இருந்ததாக இம் மாவட்டத்தின் விவரச்சுவடி (Gazetter) கூறுகிறது.**

# வளமான வாழ்வுக்கு

## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி,
வளமான வாழ்வு இவைகளே
எங்களது நோக்கம்.
நாங்கள் விஜய் உரங்கள்,
நுண்ணுயிர் உரங்களைத்
தயார் செய்கிறோம்.
உரங்களைத் தயாரித்து
விற்பனை செய்வது மட்டுமே
எங்கள் குறிக்கோள் இல்லை!
"முறையான
பயிர்பாதுகாப்பு,
சத்துக்களை ஒருங்கிணைத்து
அளித்தல், முதலியவற்றை
வலியுறுத்தி விவசாயிகளை
ஊக்குவித்து புதிய சாகுபடி
முறைகளைக் கடைப்பிடிக்கச்
செய்கிறோம்".
ஒருங்கிணைந்த ஊரக
வளர்ச்சித்திட்டம், நீண்ட
கால வேளாண்மை
மேம்பாட்டுத் திட்டம்,
மலைவாழ் மக்கள்
முன்னேற்றத் திட்டம்
மூலமாக நவீன சாகுபடிக்
கருத்துக்களை வலியுறுத்தி
விவசாயிகள்
முன்னேற்றத்திற்கு
செயல்படுகிறோம்.

**விஜய் என்றாலே வெற்றி!**




VIJAY

**மதராஸ்
பெர்ட்டிலைசர்ஸ்
லிமிடெட்**

மணலி, சென்னை 600068

HTA 8240

# தீர்த்தமலை

**த**ருமபுரி மாவட்டத்தில் இருக்கும் தீர்த்தமலை அரூர் வட்டத்தில் அமைந்துள்ளது. தீர்த்தமலை நகரிலும் மலையின் மேல் இடைப்பகுதியிலும் ஆலயங்கள் உள்ளன. நகர்ப் பகுதியில் உள்ள ஆலயம் கீழ்க் கோயில் என்றழைக்கப் பெறுகிறது. இது புற மதில் அக மதில் என இரு மதில் சுவர்களை உடையதாகும். நந்திதேவர், சைவசமயக் குரவர் நால்வரின் படிமங்கள், செல்வ கணபதி, மயில் மீதமர்ந்த முருகன், மாடக் கோயிலில் வல்லப கணபதி, காசி விசுவநாதர், பால முருகன் காட்சியளிக்க அம்மையின் சந்நிதியின் இரு பக்கமும் கணபதியும் முருகனும் காட்சியளிப்பது சிறப்பு.

தீர்த்தமலையே லிங்க அமைப்புக் காட்சியாகும். தக்கன் செய்த யாகத்தை அழித்த பின்னர் தவம் புரிய இம் மலைக்கோலம் கொண்டான் என்கின்றனர். பாறைகளினிடையே ஊற்றாக என்றும் குறையாத் ஐந்து தீர்த்தங்கள் குறிப்பிடத் தக்கவைகளாகும். நோய்த் தீர்க்கும் திறமுடையவைகள் என்பது சிறப்பு.

இவற்றின் நீர், சுவையில் வேறுபட்டுக் காண்கின்றன. அவை: 1. அகத்தியரின் குன்ம நோயை நீக்கிய அகத்தியத் தீர்த்தம், 2. அக்னி தேவனின் பாவத்தை நீக்கிய அக்னி தீர்த்தம், 3. இராமனின் பிர்மகத்தியை நீக்கிய இராம தீர்த்தம், 4. குமரக் கடவுளின் குறை தீர்த்த குமாரத் தீர்த்தம், 5. அன்னை கௌரி தவமிருந்து பெற்ற கௌரித் தீர்த்தம் என்பவைகளாகும். இவை ஆலயத்தினுள் அமைந்தவை.

ஆலயத்திற்கு மேல் - மலையின் மேல் வசிஷ்டர் குகை, வசிஷ்டர் தீர்த்தம் சீலநாய்க்கன்கோட்டை, உச்சிப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளன. இது காட்டுப் பகுதியாகும்.

கி.பி. 1041-இல் முதலாம் இராசேந்திர சோழனால் இவ்வாலயத்தின் முன் மண்டபம் புதுப்பிக்கப்பட்டதாம்.



அனுமன் தீர்த்தம்: இது தென் பெண்ணை ஆற்றங்கரையில், அரூர் திருப்பத்தூர் சாலையில் அமைந்திருப்பது. பெண்ணை நதிக்கரையில் நீரூற்றாகக் காணும் இதனை ஆள் உயரச் சுற்றுச் சுவர் அமைத்து நீரினை விழச் செய்துள்ளனர். இது செம்புச் சத்து கலந்த நீர் என்பதால் நோய் நீக்கும் குணமுடையதென்பர். பெண்ணையாற்றில் இத்தீர்த்தம் அமைந்திருப்பினும் இதன் சுவை ஆற்று நீரிலிருந்து மாறுபட்டுள்ளது.

புனித நீராட வருவோர் தீர்த்த மலைக்குச் செல்லும் முன் இங்கு நீராடிச் செல்லும் வழக்கம் இருந்து வந்தது. இவ்விரண்டைப் பற்றிய புராணக் கதைகளாகப் பல கூறப் படுகின்றன.

சிட்டிலிங்: சிட்டிலிங் என்கிற மலையானது அரூரிலிருந்து 30 மைல் தொலைவுடையது. பசுமை நிறைந்து கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பமளிப்பது. சேலம் மாவட்டத் திலுள்ள கொல்லி மலைக்கு ஈடாக இதனைக் குறிக்கலாம். இதன் இயற்கையழகும் சூழலும் தட்பவெப்ப நிலையும் உணர்ந்தவர்கள் இதனைக் 'கோடை வாழிடமாக்க'த் தகுதியுடையது என்பர்.

*- சின்ன கிருட்டிணன்.*

## அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்

**பாரதிபுரம், சேலம் சாலை, தலைமை அலுவலகம்,**
**தர்மபுரி - 636 705**

*சேவையே*
*எங்கள்*
*நோக்கம்*

**அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி**
**செய்வதே தமிழக அரசின் குறிக்கோள்**

**அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்**
**தருமபுரி**

# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் -

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 1989-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ அறிவியல் பிரிவினையும், மீன் வள அறிவியல் பிரிவினையும், அடிப்படை அறிவியல் பிரிவினையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பல்கலைக்கழகம், மூன்று கல்லூரிகளையும், ஐந்து கால்நடை மற்றும் கோழியின ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்களையும், மேலும் 19 கால்நடை அறிவியல் மற்றும மீன்வள அறிவியலைச் சார்ந்த மையங்களை கொண்டு இயங்கி வருகிறது.

இப்பல்கலைக் கழகத்தில் தற்பொழுது கல்வி பயிலும் மொத்த மாணாக்கர்களின் எண்ணிக்கை 1,642. 1991-92-ஆம் கல்வி ஆண்டு முதல், அரையாண்டுக் (Semester) கல்வி முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பல்கலைக் கழகத்தில் மொத்தம் 375 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இப்பல்கலைக் கழகத்தின் வருடாந்தர வரவு செலவு 1,312 இலட்ச ரூபாயாகும்.

இப்பல்கலைக் கழகத்தின் இரண்டாம் பட்டமளிப்பு விழா, 12.12.92 அன்று எழும்பூர், ராணி மெய்யம்மை மண்டபத்தில் நடைபெற்றது. மேதகு ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர், திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் இப்பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமையேற்றார். இந்திய வேளாண்மைக் கழகத் தலைமை இயக்குநர் டாக்டர் வி.எல். சோப்ரா அவர்கள் பட்டமளிப்பு விழாச்சிறப்புரை நிகழ்த்தினார். மாண்புமிகு வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. கு.ப. கிருஷ்ணன் அவர்கள், விழாவில் கலந்துகொண்டு பேசுகையில், பல்கலைக்கழகப் பரிசுகள் வழங்குவதற்காக ஆளுநர் பெயரில் ரூ.25 ஆயிரம் நிதியில் ஒரு அறக்கட்டளையும், கல்வியில் சிறந்து விளங்கும் பெண்களுக்குப் பல்கலைக் கழகப் பரிசுகள் வழங்கவும் அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்தவும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயரில் ரூ.1.08 இலட்சம் மற்றும் ரூ.50 ஆயிரம் நிதியில் இரண்டு அறக்கட்டளைகள் நிறுவப்படுவதாகவும் அறிவித்தார்.

இப்பட்டமளிப்பு விழாவினையொட்டி, ஆட்சி, கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய பிரிவுகளில் இப்பல்கலைக் கழகம் அடைந்த சிறப்புகளைப் பற்றி ஒரு கண்காட்சி நடத்தப்பட்டது.

இப்புதிய பல்கலைக்கழகம், ஆட்சி, கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பிரிவுகளில் அடைந்த சிறப்புகள் பற்றிய முக்கியக் குறிப்புகள் கீழ் வருமாறு. இப்பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ள எதிர்காலச் செயல் நோக்கங்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

### ஆட்சி

இப்பல்கலைக்கழகம் நிறுவிய முன்றாண்டுகளுக்குள்ளாக இப்பிரிவில் சில சிறப்புகளை அடைந்துள்ளது, குறிப்பாக,

அ. இப்பல்கலைக் கழகத்திற்கான சட்ட திட்டங்களைச் சிறப்பாக வடிவமைத்தது.

ஆ. இப்பல்கலைக் கழகத்திற்காக ஐந்து ஆட்சிப் பிரிவுகளை அமைத்தது.

இ. மத்திய மானியக் குழுவிடமிருந்து, இப்பல்கலைக் கழகத்திற்கான அங்கீகாரம் பெற்றது.

ஈ. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து முன்னேற்ற மானியம் பெறுவதற்கான அங்கீகாரம் பெறப்பட்டது.

### கல்வி

அ. கல்வி கற்பிக்கும் முறையில் அரையாண்டு (Semester) கல்வி முறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. பட்ட மேற்படிப்பிற்காக, கால்நடை உயிர்-தொழில் நுட்பவியலில் (Animal Biotechnology) ஒரு பட்ட மேற்படிப்பு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இ. இளங்கலை பட்ட பாடத்திட்டத்தில், வன விலங்குகளைப் பராமரித்தலும் மற்றும் இனப்பெருக்கம் பற்றிய பாடங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன.

இவ்வறிக்கை காலத்தில் ஒரு அகில உலகக் கருத்தரங்கமும், 8 தேசிய கருத்தரங்கமும் மற்றும் செயல் கருத்தரங்கமும், இரண்டு கோடைப் பயிற்சி திட்டங்களும் நடத்தப்பட்டன.

இப்பல்கலைக் கழகத்தின் மூத்த ஆசிரியர்களுக்கு, பல்வேறு அங்கீகாரம் பெறப்பட்ட மத்திய நிறு



வனங்களில் ஆட்சித் திறனுக்காக பயிற்சி பயிற்றுவிக்கப்பட்டது.

**ஆராய்ச்சி**

இப்பல்கலைக்கழகம், பண்ணை யாளர்களின் உணர்ந்த தேவை களையும், காலத் தேவைகளையும், நடப்புப் பிரச்சினைகளையும் முழு வதும் உணர்ந்துள்ளது. இவற்றின் முக்கியத்தினை உணர்ந்து, இப் பல்கலைக்கழகம், தன்னுடைய முக் கிய மையங்களிலும், விரிவாக்க மையங்களிலும், செயல் அறிவிய லில், ஒரு வலுமிக்க அடிப்படை யினை நிறுவியுள்ளது. இப்பல் கலைக் கழகத்தில் கண்டறியப்பட்ட ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து பண்ணைக் குப் பரப்புவதற்காக, இரு மாதங் களுக்கு ஒரு முறை, 'செய்ரான்' எனப்படும் ஆராய்ச்சி இதழ் வெளி யிடப்படுகிறது.

மேற்கூறிய கருத்தினைக் கவனத் தில் கொண்டு, தேசிய மற்றும் அகில உலக ஆராய்ச்சி நிறு வனங்கள், குறிப்பாக இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மையம், அயல்நாட்டு முன்னேற்ற நிறுவனம் (Overseas Development Agency) மத்திய மானியக் குழு மற்றும் பல் வேறு தனி நிறுவனங்கள், இப் பல்கலைக் கழகத்தில் வடிவமைக்கப் பட்ட 36 புதிய, பயனுள்ள ஆராய்ச்சிச்செயல் திட்டங்களுக்காக ஓராண்டிற்கு இரண்டு கோடி ரூபாய் மானியமாக அளித்துள்ளன.

இப்பல்கலைக் கழகத்தின் குறிப் பிடத்தக்க ஆராய்ச்சிக்கண்டுபிடிப்பு களாவன

**கால்நடை மருத்துவ அறிவியல்**

★கருமாற்றல் முறை பண்ணையில் செயல்படுத்துவதற்காக செம்மைப் படுத்தப்பட்டுள்ளது.

★செம்மறியாட்டின் உயிரினங்கள், பாதுகாப்பதன் பொருட்டு, செம்மறி யாட்டுக் கிடாவின் விந்துவினை உறைவித்தல்.

★இறைச்சியில் கலப்படம் உள்ளதா எனக் கண்டறிய 'எலிசா' எனப் படம் பரிசோதனை முறை கண்டறி யப்பட்டது.

★இறைச்சிக் கூடங்களில் சுகாதாரத் தினை அதிகரிக்க, மிகக் குறைந்த செலவினில் ஒரு முறையினைச் செயல்படுத்தியது.

★நெல்-வைக்கோலினைச் சிறந்த தீவனப் பொருளாக்க ஒரு தகுந்த முறையினைக் கண்டறிந்தது.

★வெக்கை நோய் போன்றே காணப் படும் ஆனால் மாறுபட்ட, ஆடுகள் மற்றும் அசைபோடும் சிறு பிராணி களைத் தாக்கும் பி.பி.ஆர். எனப்படும் நோய் இந்தியாவிலேயே முதன் முதலாகக்கண்டறியப்பட்டு இதனைத் தடுக்கத் தக்க நடவடிக்கை மேற் கொள்ளபபட்டுள்ளது.

★கால்நடையைத் தாக்கும் மிகக் கொடிய வெக்கை நோய், நாய் களைத் தாக்கும் 'பார்வோ' நோய் போன்ற தொற்று நோய்களைப் பண்ணையிலேயே உடனுக்குடன் கண்டறிய எளிதில் எடுத்துச் சென்று, இயக்கப்படும் உபகரணங்களைக் கண்டறிந்தது.

★முன் இரைப்பையிலிருந்து திரவத் தினை வெளிக்கொணர ஒரு திரவம் வெளிக்கொணரும் விசைக் கருவி, முன் இரைப்பையில் ஏற்படும் சப்தங்களைக் கண்டறிய வடிவமைக் கப்பட்ட ஒரு சப்த வரைவி ஆகிய கருவிகள், இப்பல்கலைக் கழகத்தில் வடிவமைக்கப்பட்டு அசைபோடும் பிராணிகளின் நோய்த் தீர்ப்புப் பிரிவுகளில் வெகுவாகப் பயன் படுத்தப்படுகின்றன.

★தடுப்பு மருந்து அளிக்கப்பட்ட கோழிகளில் நோய் எதிர்ப்புத் தன்மை உண்டாகியுள்ளதா எனக் கண்டறிய, உறிஞ்சும் காகிதம் மூலமாக இரத்தம் சேகரித்தல் ஒரு எளிய சிறப்பு முறையாக உருவாக் கப்பட்டுள்ளது.

★இப்பல்கலைக்கழகம், மாடுகளில் ஏற்படும் காச நோயினைப் பற்றிச் செய்து வரும் ஆராய்ச்சியினை இங்கிலாந்து அரசின், தட்ப வெட்ப கால்நடை நோய் ஆராய்ச்சி மையம் அங்கீகாரம் செய்து, இப்பல்கலைக் கழகத்தின் மையத்துடன் மேலும் தொடர்பு ஆராய்ச்சி செய்ய இசைந் துள்ளது.

பட்டமளிப்பு விழாவில் 195 நபர்களுக்கு நேரிலும் 50 நபர் களுக்கு தபால் மூலமாகவும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

**- நிகழ்ச்சித் தொகுப்பு ஜே. சந்திரன்.**

**துறைமுகம்**

**• ஆந்திரப் பிரதேசத்தில் கோதாவரி டெல்டா பகுதியில் உள்ள காக்கி நாடா துறைமுகம் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கப்பல் கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறது.**

**கடந்த 30 ஆண்டுகளில் இத் துறைமுகம் பல்வேறு அளவுள்ள இரண்டாயிரம் கப்பல்களைக் கட்டி யுள்ளது. ஆந்திரப் பிரதேச அரசு 1959-ஆம் ஆண்டு காக்கிநாடா கப்பல் கட்டும் துறைமுகத்தை நிறு வியது. இத்துறைமுகம் 1985-ஆம் ஆண்டிலிருந்து பிளாஸ்டிக் படகு களை உற்பத்தி செய்து வருகிறது.**

**இந்தியக் கடற்படைக்குத் தேவை யான அதிவேகப் படகுகளையும் இத்துறைமுகம் உற்பத்தி செய்கிறது. உலக வங்கித்திட்டத்தின் கீழ் 23 மீட்டர் நீளமுள்ள மரத்தினால் செய்யப்பட்ட மீன்பிடிப் படகு களைக் கட்டுவதற்கு இத்துறைமுகம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.**

**சுமார் 500 படகுகளை இத் துறைமுகம் உற்பத்தி செய்து பயன் படுத்துவோர்க்கு அளித்துள்ளது. இத்துறைமுகம் ஆண்டொன்றுக்கு 160 பிளாஸ்டிக் படகுகளை உற் பத்தி செய்யும் திறன் கொண்டது.**

## சாலைகள்

**• நாட்டில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 20,37,000 கிலோ மீட்டர்கள் ஆகும்.**

**• இதில் தேசிய நெடுஞ்சாலை களின் நீளம் 33,689 கி.மீ.**

**• தேசிய நெடுஞ்சாலைகளில் 7,171 கிலோ மீட்டர் நீளம் ஒற்றைத் தடம் கொண்டவை. 26,160 கிலோ மீட்டர் இருதடப் பாதை. 358 கிலோ மீட்டர் நான்கு வழித் தடங்களைக் கொண்டவை.**

**• 2,500 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலையை இரு தடப் பாதையாக மாற்ற வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சுமார் 600 கிலோ மீட்டர் நீளமுள்ள இரு தடப்பாதை நான்கு தடச்சாலையாக மாற்றப்பட்டு வருகிறது.**

**• சென்ற ஆண்டின் நிலவரப்படி நாட்டில் உள்ள மொத்த வாகனங் களின் எண்ணிக்கை 213.1 இலட்சமாகும்.**

# கிராமப்புறத் தொழில்களுக்குக் கைகொடுக்கும் வங்கி!

- பி.எஸ்.கே. கோஷ்முகமது சாகுல் அமீது,
தனி அலுவலர்,
தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை விரைவாக நல்ல முறையில் வளர்க்கவும், அதன் மூலம் நிறைந்த விரைவான வேலை வாய்ப்புகளைக் கிராமப் பகுதிகளிலும், பின்தங்கிய நகர்ப் பகுதிகளிலும் உருவாக்கவும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களின் மாநில நிர்வாகப் பொறுப்பு இதற்கென உருவாக்கப்பட்ட தொழில் மற்றும் வணிகத்துறைக்கு 1956-ஆம் ஆண்டு மாற்றப்பட்டது.

இந்திய அரசினால் உருவாக்கப்பட்ட பணிக்குழுவானது தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதனுடைய கடன் உதவி தேவைகளைப் பூர்த்தி செய்யத் தனியான ஒரு நிதி உதவி அமைப்பை ஏற்படுத்தி, மாநில அரசுகளின் சுமையைக் குறைக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்தது. இதன் அடிப்படையில் தொழிற் கூட்டுறவு வங்கிகள் அமைக்கவும், தொழிற் கூட்டுறவு வங்கிகளின் அந்தந்த மாநிலங்கள் ஒரு பங்குதாரராக இருக்கவும் தொழிற் கூட்டுறவு வங்கி அமைக்கப்பட்டு இன்றைய அளவில் 'தாய்கோ வங்கி' எனச் சுருக்கமாக அழைக்கப்பட்டு, மாநில அளவில் புகழுடன விளங்கி வருகிறது. தாய்கோ வங்கியானது 13.9.1961-இல் பதிவு செய்யப்பட்டு, நவம்பர் 1962 முதல் தனது வங்கிப் பணிகளைத் தொடங்கி நடைமுறைக்கு வந்தது.

**வங்கியின் அமைப்பு**

தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியின் அடிப்படைக் கொள்கையானது பரந்து விரிந்து ஈடு இணை சொல்ல முடியாதது ஆகும். தேசிய கிராமப்புற விவசாய வளர்ச்சி வங்கியானது தொழில்களை இனவாரியாகப் பிரித்தது. அதன்படி கிராமப்புறச் சிறு தொழில்கள் என, கீழ்க்கண்டவாறு இனம் பிரித்துக் காட்டியது.

1. சிறு தொழில் நிறுவனங்கள்
2. கயிறு தொழிற்சாலைகள்
3. கைவினைப் பொருள் தயாரிக்கும் நிறுவனங்கள்.

மேற்கண்ட தொழில் பிரிவுகளுக்குத் தொழிற் கூட்டுறவு வங்கிகள் நிதி உதவி அளிக்கலாம் என இனம் பிரித்துக் காட்டியது. இதனையே தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியும் அடிப்படையாகக் கொண்டு இவ்வகைத் தொழில்கள் மேம்பாடு அடையவும் அதனால் கிராமப்புற வேலைவாய்ப்புகள் பெருகவும் தன் உதவிக் கரத்தைத் தாராளமாக நீட்டியது.

**நிர்வாக அமைப்பு**

தொழில் வணிக இயக்குநரால் வங்கியின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டு, வங்கியின் நிர்வாகம் திறம்படச் செயல்பட்டு வந்தது. இந்த ஏற்பாடு 12.6.76 வரை அமலில் இருந்து வந்தது. இதற்கு பிறகு வங்கியின் நிர்வாகம் தமிழக அரசுக் கொள்கை அளவில் எடுக்கப்பட்ட அவசரச் சட்டத்தின்படி மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தனி அலுவலர் நியமனம் செய்ய கோரியபடி, இவ்வங்கியும் தனி அலுவலரின் நேரடிப் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. இதுநாள் வரை இவ்வங்கியானது தனி அலுவலரின் பொறுப்பிலேயே ஓங்கி வளர்ந்து கொண்டு வருகிறது.

**கிராமப்புறத் தொழில்களை ஊக்குவித்தல், கைவினைப் பொருள்களுக்கு உதவுதல், வேலைவாய்ப்புகளை வழங்குதல் முதலான பணிகளைச் செவ்வனே ஆற்றி வருகின்றது, தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி. இதன் சிறப்புப் பணிகளை விளக்குகிறது இக்கட்டுரை.**

**வங்கிக் கிளைகள்**

சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் இவ்வங்கியானது கீழ்க்கண்ட இடங்களில் 11 கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

குன்னூர், கோவில்பட்டி, சாத்தனூர், மதுரை, திருச்சி, சேலம், விரிவாக்கக் கிளை, சேப்பாக்கம், சென்னை-5., வேலூர், நாகர் கோவில், கோயம்புத்தூர், தஞ்சாவூர்.

**வங்கியின் வளர்ச்சி**

**இவ்வங்கி தொடங்கியபோது இதனுடைய பணிகள் சிறியதாக இருந்தாலும், படிப்படியாக வளர்ந்து இன்று மற்ற வங்கிகளைப் போல் எல்லா விதமான பணிகளையும் செய்து இந்த 30 ஆண்டுக் கால வரலாற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையும் பெற்று மற்ற கூட்டுறவு வங்கிகளைப் போல் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.**

**மேலும், இவ்வங்கியானது தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் காலக் கடன் மற்றும் நடைமுறை மூலதனக் கடன் அளிப்பது மட்டுமல்லாமல், இம்மாநிலத்தில் உள்ள கிராமச் சிறு தொழில்களுக்குத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தாராளமாகக் கடன் உதவித் திட்டத்தின்**



மூலம் உதவி செய்து, அவைகளின் முன்னேற்றத்தில் இவ்வங்கியும் ஒரு குறிப்பிடத்தக்க அளவு பங்கு பெறுகிறது.

**வங்கியின் செயல்பாடுகள்**

வங்கியானது கீழ்க்கண்ட வகையான கடன்களைத் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளித்து வருகிறது. காசுக்கடன் பெற்று வளர்ச்சி பெறும் சங்கங்களில் சில குறிப்பிடத்தக்கவை.

**தீப்பெட்டி சிறு தொழிற் கூட்டுறவுச் சேவைச் சங்கங்கள்**

தங்கள் உறுப்பினர்களுக்குத் தீப்பெட்டி செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்களான அட்டைக்கட்டு, தீக்குச்சி, மற்றும் பொட்டாசியம் முதலியவற்றை வங்கியில் பெற்ற, கடன் மூலம் வாங்கி வழங்குகிறது. பிறகு முடிந்த பொருள்களுக்குச் சங்கம் முன் பணமும் அளிக்கிறது. விற்பனைக்கும் வகை செய்கிறது. இவை யாவற்றிற்கும் வங்கியின் கடன் உதவியே காரணமாகும். தற்போது ஏறத்தாழ 21 சேவை தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நடந்து வருகின்றன.

**தேயிலை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

உறுப்பினர்களுக்கு, தேயிலைக் கன்றுகள் வாங்குவதற்கும் அவற்றைப் பயிர் செய்யவும் மேலும் அவற்றிற்குத் தேவையான இரசாயன உரம் மற்றும் பூச்சி மருந்துகள் வாங்கவும் மற்றும் பராமரிப்புக்கும் முன் பணம் அளிக்கிறது. மேலும் உறுப்பினர்களிடமிருந்து தேயிலை இலையைப் பச்சையாக வாங்கிக் கொண்டு, இதற்கும் அங்கத்தினர்களுக்கு முன் பணம் அளிக்கிறது. ப்ச்சைத் தேயிலையைப் பதப்படுத்த, தேயிலையாக உருவாக்க, தேயிலைத் தொழிற்கூடம் உருவாக்க இயந்திரங்கள் வாங்க இந்த வங்கி கடன் வழங்குகிறது. தற்போது 15 தேயிலைக் கூட்டுறவுத் தொழிற்கூடங்கள் நடந்து வருகின்றன.

**பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

மூலப் பொருட்கள் இவ்வங்கியின் நிதி உதவி மூலம் வாங்க வங்கி கடன் அளிக்கிறது. இச்சங்கங்கள், தொழிற்கூடம் அமைத்து இய்ந்திரங்களை நிறுவனம் செய்து, கச்சாப் பொருளிலிருந்து பாலீதீன் பைகள் தயாரித்து, அரசு சார்புடைய துறைகளுக்குக் குறிப்பாக வனத்துறை, பால் வழங்கும் துறை, ஆகியவைகளுக்கு விற்பனை செய்கிறது. தொழிற்கூடம் கட்டவும், இயந்திரங்கள் வாங்கவும் இவ்வங்கி கடன் வழங்குகிறது. பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரை சென்னைக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இவர்களுக்குக் கணிசமான கூலியும் வழங்குகிறது. இந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களினால் தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும் இவை நல்ல துணை புரிகின்றன. தற்போது 15 பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இவ்வங்கியின் மூலம் கடன் உதவி பெற்று சிறப்புடன் இயங்குகின்றன.

மேலும், இவ்வங்கி கயிறு தயாரிப்போர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், அச்சுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், ஜவ்வரிசி தயாரிப்பாளர் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், பித்தளைப் பாத்திரம் தயாரிப்போர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தொழிற் கூட்டுறவுப் பேட்டைகள் மற்றும் பொட்டாசியம் குளோரேட் தொழிற் கூட்டுறவு ஆலைக்கும் ஏனைய இதரக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆக ஏறத்தாழ 170 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்கிச் சிறப்புற இயங்கி வருகிறது.

**பிணையற்ற காசுக் கடன்**

புதிதாக ஆரம்பிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எவ்விதப் பிணையமும் இன்றி முதல் ஓராண்டு வரை இவ்வகையான சுத்தக் காசுக்

கடனை அதனுடைய நடைமுறை மூலதனத்திற்கு அளித்து அதன் மூலம் அந்தச் சங்கம் மூலப் பொருட்களை வாங்கவும் உறுப்பினர்களுக்கு அவைகளை விநியோகிக்கவும், உறுப்பினர்களுக்கு முன் பணம் அளிக்கவும், அதன் மூலம் வேலைவாய்ப்பை, பெருக்கவும் தாராளமான கடன் உதவிக் கொள்கை மூலம் உதவி புரிகிறது.

**காசுக் கடன்**

இவ்வகையான கடன்கள் சங்கங்களின் நடைமுறை மூலதனத்திற்கு அதனுடைய சரக்கு இருப்பின்மீது 60 சதவிகிதக் கடன் அளிக்கிறது. இதன் மூலம் உறுப்பினர்களுக்கு முன் பணம் அளிக்கவும் அவர்களுக்கு முடிந்த பொருட்களைக் கொள்முதல் செய்யவும் இவ்வகையான கடன் உதவி புரிகிறது.

இதைத் தவிர, இவ்வங்கி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கீழ்க் கண்ட உதவிகளையும் செய்து வருகிறது.

**உண்டியல் தள்ளுபடி**

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் முடிந்த பொருள்களை ரயில் மூலம் இதர மாநிலங்களில் உள்ள வியாபாரிகளுக்கு அனுப்பும்போது உண்டியலை இவ்வங்கி மூலம் அனுப்பும் போது சங்கங்களுக்கு அந்த உண்டியல் தொகையில் 90 சதவிகிதம் கடன் அளித்து சங்க உறுப்பினர்கள் உடனடியாகப் பயன் பெற இக்கடன் உதவி வசதி அளிக்கிறது. இந்த கடன் உதவியைப் பெரும்பாலும் தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களே முழுமையாகப் பயன்படுத்தி சங்க உறுப்பினர்கள் உடனடியாகப் பயன்பெற உதவி புரிகிறது.

**இடைக்காலக் கடன்**

இக்கடன் பெரும்பாலும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள், தேசிய கிராம வளர்ச்சி வங்கி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு ஆதி திராவிடர் நல முன்னேற்றக் கழகம் மூலம் கடன் பெற முயற்சி செய்து கடன் விண்ணப்பம் கொடுக்கப்பட்டு, அதில் காலதாமதம் ஏற்படும்போது அந்தக் காலத் தாமதத்தைத் தவிர்க்கவும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதன் உறுப்பினர்களுக்கும் உடனடியாகப் பயன் பெறவும் இவ்வங்கியானது இடைக் காலக் கடனாக இவ்வகைக் கடன்களை அளிக்கின்றது.

**சாவிக் கடன்**

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தங்களுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் சந்தையில் தாராளமாகக் கிடைக்கும்போது வாங்கி இருப்பு செய்து உறுப்பினர்களுக்கு விநியோகித்து அவர்கள் லாபத்தை ஈட்டவும் செய்ய வேண்டும். ஆனால் நிதிப் பற்றாக்குறையினால் இது முடியாதபோது, இவ்வங்கியானது தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுடன் சேர்ந்து மூலப் பொருட்களை வாங்கி கிடங்கில் இருப்பு வைத்து இரட்டைச் சாவி மூலம் பொறுப்பேற்கும். தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தனக்கு எப்போது எவ்வளவு மூலப்பொருள் தேவையோ அந்த அளவுக்குப் பணத்தை வங்கியில் செலுத்தி மூலப்பொருள்களை பெறும். இதனால் உறுப்பினர்கள் மிகுந்த பயனும் லாபமும் அடைய வழி செய்கிறது.

**காலக் கடன்**

இவ்வகைக் கடன்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்கள் வாங்கவும் தொழிற் கூடங்கள் கட்ட நிலம் வாங்கவும், தொழிற்கூடங்கள் கட்டவும், டாக்ஸி மற்றும் ஆட்டோரிக்ஷா தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்காக ஆட்டோ ரிக்ஷா வாங்கவும் அளிக்கப்படுகிறது.

**வங்கிக் காப்புறுதி**

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு நிறுவனங்களிடம் இருக்கும் தங்களுக்குத் தேவையான பொருட்களை விநியோகம் செய்ய ஆணைகள் கிடைக்கும் போது, அந்த மொத்த தேவைப் பொருள்களுக்கான மதிப்பை அந்நிறுவனத்திடம் சங்கங்கள் வங்கியின் மூலம் காப்புறுதி அளிக்க வேண்டும். இவ்வங்கியானது இவ்வகையான காப்புறுதிகளை அந்தச் சங்கங்களுக்காக அந்நிறுவனங்களுக்கு அளித்து தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னேறவும், அதன் உறுப்பினர்கள் பயன் அடையவும் உதவி புரிந்து வருகிறது.

**மாநிலத்தில்**
**முதல் நடமாடும் கூட்டுறவு**

1980-ஆம் ஆண்டு மே மாதம் முதல் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி தனது நடமாடும் கிளையை இயக்கி வருகிறது. தமிழ்நாட்டில் வங்கி வரலாற்றிலேயே புதுமையான திட்டமாக நடமாடும் கிளை ஒன்றை சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி துவக்கியுள்ளது. இது வாடிக்கையாளர்களுக்கு அளிக்கப்படும் மாறுபட்ட புதிய சேவையாகும். இந்தியாவிலேயே மூன்றாவதாக இங்குதான் நடமாடும் கிளை உள்ளது. இந்த நடமாடும் கிளை எல்லாவிதமான வங்கிப் பணி வசதிகளை இட்டு வைப்பாளர்களுக்கு வழங்குவது மட்டுமன்றி சிறு சேமிப்பு இட்டு வைப்பு சேகரிப்பதில் முழு கவனத்தையும் ஒருங்கே செலுத்தி வருகின்றது.

**தமிழக அரசின் நிதி உதவி**

தமிழ்நாடு அரசானது கீழ்க் கண்ட வகைகளில் தன் நிதி உதவியை இவ்வங்கிக்கு அளித்து வங்கி வளர்ச்சி பெறவும் அதன் மூலம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சி பெறவும் உதவி செய்கிறது.

★தமிழக அரசு, இந்த வங்கியில் எடுத்த பங்குத் தொகை ரூ.233.30 இலட்சம்.

★இவ்வங்கி, வாடிக்கையாளர்களிடமிருந்து திரட்டு வைப்புத் தொகைகளுக்கு ரூ.500 இலட்சம் வரை தமிழக அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

★இவ்வகையில் தமிழக அரசு தன்னுடைய நேசக்கரத்தை நீட்டி, பாரத மாநில வங்கியில் பிணையற்ற காசுக் கடன் ரூ.20 இலட்சம் பெற வழி வகை செய்ய தமிழக அரசு உத்தர வாதம் அளித்துள்ளது.

★இவ்வங்கி, மேலும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து இவ்வகையில்

மூலதனமாக ரூ.75 இலட்சம் பெற்று வருகிறது.

இவ்வகையில் தமிழக அரசு தன்னுடைய நேசக்கரத்தை நீட்டி, வங்கி வளர்ச்சி பெற உதவி செய்து வருகிறது.

**தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி இந்தியத் தலைமை வங்கி (R.B.I.) அங்கீகரித்தல்**

இவ்வங்கியை, இந்தியத் தலைமை வங்கி அங்கீகரிக்கவும், தேசீய கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறு நிதி உதவியைப் பெறவும் 1971 முதல் பல்வேறு வகையான முயற்சிகள் எடுக்கப்பட்டு மிகவும் போராடி, கடைசியில் 1987 அக்டோபர் மாதம் இந்தியத் தலைமை வங்கியானது தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியை அங்கீகரித்து, தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறு நிதி உதவியைப் பெறவும் வழி வகையேற்பட்டுள்ளது.

இவ்வங்கியானது கீழ்க்கண்ட 8 மாவட்டங்களில் உள்ள தன் உறுப்பினர்களுக்குத் தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியின் மறு நிதி உதவி பெற்றுக் கடன் வழங்கலாம் எனவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1. சென்னை மாவட்டம்.
2. திருச்சிராப்பள்ளி மாவட்டம்
3. இராமநாதபுரம் மாவட்டம்
4. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்
5. காமராசர் மாவட்டம்
6. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்
7. சிதம்பரனார் மாவட்டம்
8. நீலகிரி மாவட்டம்

இவ்வங்கியானது இதுவரை தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியில் மறு நிதி உதவி பெற்று ரூ.38.18 இலட்சம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்கியுள்ளது.

மேலும், தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் விரிவாக்கத் திட்டத்திற்காக ரூ.50 இலட்சத்திற்கு விண்ணப்பங்கள் தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியிடம் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வங்கியானது தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர் அனைவரும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினராகவோ அல்லது பிற்படுத்தப்பட்ட சமூகத்தினராகவோ இருப்பின் அவர்கள் சம்பந்தப்பட்ட தமிழ்நாடு அரசு முன்னேற்றக் கழகத்திலிருந்தும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திலிருந்தும் விளிம்புத் தொகை (Margin money) மற்றும் மானியத் தொகை (Subsidy) பெறவும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இக்கழகங்களிடம் பரிந்துரை செய்கிறது. இதுவல்லாமல் இவ்உதவிகள் பெறுவதற்குத் தடையின்மைச் சான்றிதழ் (N.O.C.) வழங்குவது போன்ற சேவைகளையும் செய்து வருகிறது.

அதுவல்லாமல் இவ்வங்கியின் தனி அலுவலர் அவர்கள் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் கூட்டும் செயற்குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு, மேன்மையான ஆலோசனைகள் வழங்கி மேன்மேலும் நிதி உதவிகளைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க ஆவன செய்து வருகின்றார்.

இவ்வங்கியானது, சொந்தமாக எழும்பூரில் தாளமுத்து- நடராசன் மாளிகை கீழ்த்தளத்தில் ரூ.47.70 இலட்சம் மதிப்பில் அமைந்துள்ள கட்டடத்தை வாங்கி வங்கிப் பணிகள் இயங்கி வருகின்றன. மேலும், வங்கிக்குச் சொந்தமாக ஒரு பல மாடி மாளிகையை சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நகைக் கடன்**

இவ்வங்கியானது ஏழை எளியவர்கள் தங்களிடம் இருக்கும் ஒரு சில நகைகளை தனியாரிடம் தந்து வட்டிக்கு வைத்து நகைகளை இழக்கும் அவலத்தைத் தடுக்கவும், அவர்களது நகைகளைப் பாதுகாப்புடன் காக்கவும் குறைந்த வட்டியில் நகைக் கடன் கொடுக்கவும் நகைக்கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தி உள்ளது. பெட்டக வசதியும் செய்ய உள்ளது.

இவ்வங்கியானது, தொழிற் கூட்டுறவுத் துறையில் இப்போது முக்கிய பங்கு ஆற்றி வருகிறது. தன்னுடைய அமைதியான ஆரவார மற்ற நிலையில், ஆனால் தன்னுடைய அடிப்படையான கொள்கையான கிராமப்புறச் சிறு தொழில்களை ஊக்குவிப்பது, கைவினைத் தொழில்களுக்குக் கை கொடுப்பது, கயிறு தொழிலுக்கு முறுக்கேற்றுவது மற்றும் கிராமத் தொழில்களுக்கு விடிவெள்ளியாக இருப்பது ஆகியவைதான் இவ்வங்கியின் நிலையான நிலைத்த கொள்கையாகும்.

அந்த வகையில் இது இன்று பீடு நடைபோட்டு வருகிறது. அதற்குத் தேசிய கிராமப்புற வளர்ச்சி வங்கியும் ஆலோசனைகளையும் மறு நிதி உதவி வசதிகளையும் அளித்து வருகிறது.





# தொகுதி மக்களுக்கு முதல்வர் உதவிகள்



பருகூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், 21.8.1991-இல்தான் முதன் முதலாகப் பருகூரில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அப்போது- தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தொழில் வளாகம், குடிநீர்த் திட்டங்கள், குடியிருப்புகள், பாலங்கள் நீர்ப் பாசனத்திட்டங்கள், புதுமருத்துவமனை, பேருந்து நிலையம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டினார். புதிய பேருந்து வழித்தடங்களையும், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டப் பணிகளையும் தொடங்கி வைத்தார்.

பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் ஆகியவற்றையும் வழங்கினார். கிணற்றில் தவறி விழுந்தவர்களைக் காப்பாற்றிய அத்தொகுதியில் உள்ள கூத்தானைப் பட்டி சம்பத்குமார், கொத்தூர் வேடியப்பன் ஆகியோருக்கு அரசு சார்பில் தலா ரூ.4 ஆயிரம், தம் சொந்தப் பொறுப்பில் ரூ.5 ஆயிரமும் வழங்கிப் பாராட்டினார்.



அன்றைய நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்டமும் பருகூர் தொகுதியும் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்ட எல்லாத் திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ.33 கோடியே 97 இலட்சம் ஆகும்.

பருகூர் தொகுதியிலிருந்து, தமது குறைநீக்கக் கோரி மனுக் கொடுத்திருந்த பலரில்- நியாயமான 454 பேர்களின் மனுக்கள் ஏற்கப்பட்டது; அந்த மனுதாரர்களை 10.8.92 அன்று சென்னைக்கு அழைத்து வரச்செய்த மாண்புமிகு முதல்வர்



புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்- ரூ.1 கோடியே 24 இலட்சத்து 21 ஆயிரத்து 524 ரூபாய் பெறுமானமுள்ள அரசு நலத்திட்ட உதவிகளை அவர்களுக்கு வழங்கினார்.

19.8.1992 அன்று, தம்முடைய பருகூர் தொகுதி நலிவுற்ற மக்கள் 92 பேரைச் சென்னைக்கு அழைத்து வரச்செய்து, நலத்திட்ட உதவிகளைத் தம் சொந்தச் செலவில் செய்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்; அவர்களுடை" போக்கு வரத்துச் செலவையும் அவரே ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தருமபுரியில் 18.7.1992 முதல் 26.7.1992 வரையில் தமிழ்நாடு அரசின். நலத்திட்டப் பணிகள் விளக்க முகாம் சிறப்புற நடைபெற்றது.

11.4.1992 அன்றும், 18.4.92 அன்றும், 20.6.92 அன்றும், 7.12.92 அன்றும் பர்கூர் தொகுதி நலிவுற்ற மக்கள் ஏராளமானோர் சென்னையிலுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இல்லத் திற்கு அழைத்து வரப்பட்டனர். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அம்மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுத் தொழிற் கருவிகளும், வண்டி மாடுகளும், வேறுபல நலத்திட்ட உதவி களும், நிதியுதவியும் வழங்கினார். அம்மக்களின் போக்குவரத்துச் செலவையும் முதல்வரே ஏற்றார்.

கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் (1993), பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழைகள், ஏழை விவசாயிகள் 60 இலட்சம் பேருக்கு வேட்டியும், 60 இலட்சம் பேருக்குச் சேலைகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

## நாடக உலகு நலம் பெற...

அருகிவரும் மேடை நாடகக் கலைக்குப் புத்துயிர் ஊட்டும் வகையில், தமிழ் நாட்டின் பண்புகளை, மாண்பினைச் சித்திரிக்கும் புதிய நாடகங்களை உருவாக்கும் பத்து நாடகக் குழுக் களுக்கு நிதியுதவி செய்யும் பொருட்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ரூ.2 இலட்சம் தொகையை மானியமாக வழங்கி ஆணையிட்டுள்ளார்.



மேலும், மறைந்து வரும் குருகுல முறைக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் வழுவூர், கலா சேத்ரா, பந்தநல்லூர், தஞ்சாவூர் மற்றும் காட்டு மன்னார் கோவில் முத்துகுமாரப்பிள்ளை பாணி யில் நட்டுவாங்கக் கலையைக் கற்றுத்தர ஐந்து பரத நாட்டிய ஆசிரியர்களுக்கும், இக்கலையினைப் பயில ஆர்வம் உள்ள பதினைந்து மாணவ மாண வியருக்கும் உதவித் தொகையாக மொத்தம் ரூ.1 இலட்சம் தொகையினை மானியமாக வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

கிராமியக் கலைஞர்கள் மற்றும் கிராமிய கலைக் குழுவினர்களின் கலைப் பணியை மேலும் ஊக்குவிக்கவும், உதவி வழங்கவும், ஆடை, ஆபரணங்கள், இசைக் கருவிகள், மேடைப் பொருட்கள் வாங்குவதற்காகவும், மேலும், கிராமியக் கலைகளின் மதுவிலக்குக் கொள்கை யினை மக்களிடையே பரப்புவதற்காகவும் புதி தாகப் படைக்கப்படும் கிராமியக் கலை நிகழ்ச்சி களுக்காகவும் ரூ.2 இலட்சம் தொகையை மானிய மாக வழங்கி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.



# பையூரில் பசுமைப் புரட்சிக்கு ஓர் ஆராய்ச்சி நிலையம்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், வேளாண்மைச் சூழ்நிலைக்கேற்ப மாறுபடும் தமிழகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் பொருட்டு, தமிழகத்தை ஏழு மண்டலங்களாகப் பிரித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதில் வடமேற்கு மண்டலமாக அமைந்துள்ள சேலம், தருமபுரி மாவட்டங்கள் அடங்கிய பகுதிகளில் வேளாண் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், புதிய கண்டுபிடிப்புகளின் மூலம் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடனும் 1973-ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டம் பையூரில் மண்டல ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையம் தருமபுரி-கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் தருமபுரியிலிருந்து 35-வது கிலோ மீட்டரில் அமைந்துள்ளது. இந்த மண்டலத்தில் 10.15 இலட்சம் எக்டேர் பரப்பில் முக்கியப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. குறிப்பாக, மானாவாரிப் பயிர்கள் 70 சதவிகிதத்திற்கு மேல் சாகுபடி செய்யப்படுகின்றன. இந்த மண்டலத்தில் ஆண்டிற்குச் சராசரியாக (மலைப் பிரதேசங்கள் நீங்கலாக) சுமார் 700 முதல் 900 மி.மீ. மழை அளவு இருக்கும். மொத்த நிலப்பரப்பில் 80 சதவிகிதத்துக்கும் அதிகமாகச் செம்மண் வகைப் பூமியாக அமைந்துள்ளது. பெய்யும் மழை அளவு, மண்வகை, மற்றும் கடல் மட்டத்திலிருந்து உயரம் ஆகியவற்றின் அடிப்படையில் 13 வேளாண்மை உட்பிரிவுகள் கண்டறியப்பட்டு, அதன் அடிப்படையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் கண்டுபிடிப்புகள் இந்த மண்டலத்தின் வேளாண் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படுத்தப்படுகின்றன. தற்சமயம் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் 77 ஆராய்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஆராய்ச்சியின் நோக்கங்கள்**

★ மானாவாரிக்கேற்ற சோளம், கேழ்வரகு, சாமை மற்றும் சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் வறட்சியைத் தாங்கவல்ல புதிய இரகங்களை உருவாக்குதல்.

★ மண்வளம் குறைவான ஈரத் தன்மையைத் தாங்கும் திறனற்ற செம்மண் நிலங்களில் மானாவாரிக்கு உகந்த செய்முறைகளை உருவாக்குதல்.

★ அதிக இலாபம் தரக்கூடிய பயிர்த் திட்டங்களையும், அதற்கேற்றவாறு இறவை மானாவாரிப் பயிர்களில் சாகுபடி நுணுக்கங்களையும் உருவாக்குதல்.

★ இப்பகுதிகேற்ற ஒருங்கிணைந்த பயிர் நோய், பூச்சிகள் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்.

★ இந்நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய வேளாண் நுணுக்கங்களை விரைவாகப் பண்ணைகளுக்கு எடுத்துக் கூறுதல்.

**ஆராய்ச்சித் திட்டங்கள்**

மேற்கூறியுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகக் கீழ் காணும் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

★ மண்டல ஆய்வு நிலையம் (இப்பகுதியிலிருக்கும் முக்கிய பயிர்களின் ஆராய்ச்சி)

★ மண் மற்றும் நீர்ப் பரிசோதனை நிலையம்.

★ நடுத்தர இழைப்பருத்தி ஆராய்ச்சித் திட்டம்.

★ ஒட்டுண்ணிகள் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்.

★ நடைமுறைப் பயிர்த் திட்டங்களில் அதிகப் பயன் கிடைக்கும் பயிர்த் திட்டங்கள்.

★ திராட்சையில் அதிக மகசூல் பெற தருமபுரி மாவட்டத்திற்கு ஏற்ற புதிய நுணுக்கங்கள்.



★ தீவனப் பயிர்களில் மேம்பாட்டு முறைகள்.

★ சோயா மொச்சையை இப்பகுதியில் அறிமுகப்படுத்துவது.

★ உயிர் உரங்கள் உற்பத்தி மற்றும் விநியோகம்.

★ உயிர் உரங்கள் பற்றிய ஆராய்ச்சி.

★ மரப் பயிர்களுக்கு வேண்டிய உயிர் உரங்கள்.

★ உழவர்களுக்குக் காளான் வளர்ப்புக்கான தாய் வித்தை உற்பத்தி செய்தலும் அதைப்பற்றிப் பயிற்சியளித்தலும்.

★ ஆய்வுக் கூடத்தில் கண்டறியப்பட்ட புதிய நுணுக்கங்களை உழவர் நிலங்களில் சோதனை செய்து காட்டல்.

★ உழவர்கள் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிப்பதில் உள்ள பிரச்சினையைப் பற்றிய ஆய்வு.

★ விரிவாக்கப் பணியாளர்களுக்கும் உழவர்களுக்கும் தேவைப்படும் நுட்பங்களைத் தெரிவித்தல்.

ஆராய்ச்சிக்குத் தேவையான கூடுதல் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து தருமபுரி, சேலம் பகுதிகளில் உள்ள மிக முக்கியமான பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு காண ஆராய்ச்சிகள் மேற்கொள்ள தேசீய வேளாண்மை ஆராய்ச்சித் திட்டம் 1981-ஆம் ஆண்டு முதல் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டு வருகின்றது.

**நிலையத்தின் சில முக்கிய சாதனைகள்:**

**நெல்**

முன் சம்பாப் பருவத்தில் (ஆனி-ஆடிப்பட்டத்தில்) 140 நாட்களில் சராசரியாக எக்டேருக்கு 5 டன் மகசூல் தரக்கூடிய சன்ன ரகமான பையூர்.1 நெல் உருவாக்கப்பட்டு சாகுபடிக்காக 1982-இல் வெளியிடப்பட்டது.

பின் சம்பாப் பருவத்தில் (ஆவணி-புரட்டாசி) பயிரிடுவதற்கு ஏற்ற குளிர் தாங்கக்கூடிய வளர்ப்புகள் 10525, 4595 என்ற புதிய இரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த இரகங்கள் ஒரு எக்டேருக்கு 5 டன் மகசூல் கொடுத்துள்ளன.

வேப்பம் பிண்ணாக்குடன் கலந்த யூரியாவை மூன்று தடவை (பாதியளவு அடி உரமாகவும், கால் பங்கு நட்ட 25-ஆம் நாளும், மீதியை 50-ஆம் நாளும்) பிரித்து இடுதல். இது சாதாரண யூரியாவை மூன்று முறை பிரித்து இடுவதை விட 515 கிலோ கூடுதல் மகசூல் கொடுக்கவல்லது.




கிருஷ்ணகிரிப் பகுதியில் சாம்பல் சத்தை (50 கி./எக்டேர்) அடி உரமாக இடுவதை விட தூர்கட்டும் பருவத்தில் மேலுரமாக இடுவது, எக்டேருக்கு 590 கிலோ அதிக மகசூல் தருவது கண்டறியப் பட்டுள்ளது.

**கேழ்வரகு**

சேலம், தருமபுரி பகுதிகளில் உள்ள மானாவாரி நிலங்களுக்கு ஏற்ற பையூர்.1 கேழ்வரகு 1984-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு உள்ளது. இதன் வயது 120 நாட்கள். விரிந்த கதிர்களும் நீண்ட விரல்களும் உடைய இந்த ரகமானது மானாவாரியில் எக்டேருக்குச் சராசரியாக 1.8 டன் தானியமும், 4 டன் தாளும் கொடுக்க வல்லது.

கேழ்வரகு விதையைக் கைகோசில் 5 பி.பி.எம். ஹார்மோனில் 16 மணி நேரம் ஊறவைத்து, பின்னர் நிழலில் காயவைத்து விதைத்தால் மானாவாரியில் வறட்சி தாங்கும் தன்மையை அதிகப் படுத்தி பையூர்.1 ரகத்தில் 12 சதம் அதிக மகசூல் பெறலாம்.

மானாவாரியில் நாற்றுவிட்டு நடுவது இப்பகுதியில் சில இடங்களில் நடைமுறையில் இருக்கிறது. 21 நாளான நாற்றுகளை நட்டால் அது நேரடி விதைப்பைக் காட்டிலும் 32 சதவிகிதம் அதிக மகசூல் கொடுக்கிறது. குத்துக்கு மூன்று நாற்றுகளுக்கு மேல் நடவு செய்வதால் மகசூல் குறைகிறது. குத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாற்றுக்கள் மட்டும் நடுதல் அவசியம். மானாவாரி ராசிக்கு எக்டேருக்கு 40 கிலோ தழைச்சத்து போதுமானது.

இருபத்தியொரு நாட்களுக்கு மேலான வயதுடைய நாற்றுக்கள் நட நேர்ந்தால் குத்துக்கு 3 நாற்றுக்கள் வீதம் நடவு செய்வதோடு எக்டேருக்குச் சிபாரிசு செய்யப்படும் தழைச்சத்து அளவை விட 10 கிலோ கூடுதலாக இடுவதன் மூலம் மகசூல் இழப்பைத் தவிர்க்கலாம். 20 கிலோ தழைச்சத்து உரத்துடன் அசோஸ் பைரில்லம் உயிர் உரத்தை (விதையுடனும், தொழு உரத்துடனும்) ஒருங்கிணைப்பதன் மூலம், எந்த உரமும் இடாத பயிரைவிட 258 கிலோ தானியம் கூடுதலாகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

மானாவாரியில் கேழ்வரகில் பச்சைப் பயிரை ஊடுபயிராக 4:1 என்ற விகிதத்தில் சாகுபடி செய்யும்பொழுது தனிப் பயிராகச் சாகுபடி செய்வதைக் காட்டிலும் 73 சதம் வருமானம் பெறலாம். இராசியில் தோன்றும் குலை நோயைக் கட்டுப்படுத்த கிட்டாசின் (0.1 சதம்) மூன்று முறை (தூர்கட்டும் பருவத்தில் ஒரு முறையும் கதிர்ப் பருவத்தில் ஒரு முறையும்) தெளிக்கலாம்.

**சோளம்**

பையூர் - 1 என்ற புதிய தலை விரிச்சான் சோள இரகம் நடப்பு ஆண்டில் சேலம், தருமபுரி மற்றும் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டங்களுக்கு மானாவாரி சாகுபடிக்குப் பிரத்யேகமாக வெளியிடப்பட்டுள்ளது. இது வறட்சியைத் தாங்குவதாகவும், மானாவாரிக்கு ஏற்றதாகவும் உள்ளது. அடிச்சாம்பல் நோயை ஓரளவு தாங்கவல்லது. இது தற்போதுள்ள கோ.19 இரகத்தைவிட 15 சதவிகிதம் அதிக தானிய மகசூல் (970 கி./எக்.) கொடுப்பதுடன், சன்னமாக, சுவையான தட்டுக்கள்ளக் கொடுக்க வல்லது.

மானாவாரி நிலங்களில் (செம்மண்) சோளத்தில் தழைச்சத்தை இடுவது

மகசூலை அதிகரிக்கவல்லது என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த உரத்தை (40 கி/எக்.) அடியுரமாகவோ, அல்லது மேலுரமாகவோ இடலாம், மானாவாரி நிலங்களில் 5 செ.மீ. ஆழத்தில் விதைப்பது மேன்மையானது என்பது ஆராய்ச்சி மூலம் தெரியவந்துள்ளது.

மிதல்டெமாடான் அல்லது பாஸாலின் அல்லது குளோர்பைரி பாஸ் அல்லது மானோகுரோட்டோபாஸ் இதில் ஏதாவது ஒன்றில் ஒரு கிலோ சோளத்திற்கு 4 மில்லி என்ற விகிதத்தில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கும் பொழுது சோளத்தில் குருத்து ஈயினைக் கட்டுப்படுத்தலாம்.

**சாமை**

நடுத்தர வயதுடைய (110 நாள்) பையூர்.1 சாமை 1987-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த இரகம் எக்டேருக்கு 870 கிலோ தானிய மகசூல் கொடுக்கவல்லது. இது வறட்சி தாங்கும் தன்மை உடையது.

**காராமணி**

85 நாளில் மானாவாரியில் சராசரியாக எக்டேருக்கு 760 கிலோ மகசூல் தரவல்ல பையூர்.1 காராமணி 1984-இல் வெளியிடப்பட்டது. இது சி.152-ஐ விட14 சதம் அதிக மகசூல் தரவல்லது. இந்த இரகத்தின் இலைகள் தானியம் முற்றும் வரையில் பசுமையாக இருப்பதால் தீவனத்திற்கும் சிறந்ததாக உள்ளது.

**கொள்ளு**

பையூர்.1 என்ற கொள்ளு இரகம் 1987-இல் வெளியிடப்பட்டது. இந்த இரகம் 105 நாட்களில் எக்டேருக்கு 674 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. கோ.1-ஐக் காட்டிலும் இந்த ரகம் 19 சதம் அதிக மகசூல் தரவல்லது. மணிச்சத்து 20 கிலோ/எக்டேருக்கு இடுவதால் உரமிடாததைக் காட்டிலும் அதிக மகசூல் பெறலாம். ரைசோபியம் உயிர் உரத்துடன் விதை நேர்த்தி செய்து பயிர் செய்வதால் விதை நேர்த்தி செய்யாததை விட 12 சதவிகிதம் அதிக மகசூல் கிடைக்கிறது.

**பச்சைப்பயிறு**

பையூர்.1 பாசிப்பயிறு 1985-ஆண்டு வெளியிடப்பட்டது. இது 90 நாட்களில் சராசரியாக எக்டேருக்கு 1060 கிலோ மகசூல் தரவல்லது. இது கோ, 4-ஐ விட 12 சதவிகிதம் அதிகமாகும்.

**மொச்சை**

டி.பி.ஐ. 1281 என்னும் கல்வர்



குறுகிய காலத்தில் (75 நாள்) அதிக மகசூல் தரவல்லது. இது ஒரு எக்டேருக்கு 950 கிலோ விதை கொடுக்கிறது.

மானாவாரி மொச்சையில் பூக்கும் தருணத்திலும் அதற்கு அடுத்த 10-வது நாளும் கார்பரில் 10 சதவிகிதத் தூளை எக்டேருக்கு 25 கிலோ வீதம் தூவினால் காய்ப்புழுவினைக் கட்டுப்படுத்தி, அதிக மகசூல் பெற முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

**எள்:**

பையூர்-1 எள் என்னும் உயர் விளைச்சல் இரகம் 1990-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த இரகம் 90 நாட்களில் எக்டேருக்கு 650 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. கோடை இறவைச் சாகுபடிக்கு ஏற்றது.

**பருத்தி:**

அதிக விளைச்சலுடன் 'வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய பையூர்- 1 என்ற புதிய மத்திய இழைப் பருத்தி இரகம் இவ்வாண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இது எக்டேருக்கு 1,173 கிலோ மகசூல் கொடுக்கவல்லது. இதன் வயது 135 நாட்கள். மானாவாரியாகப் புரட்டாசிப் பட்டத்திற்கு மிகவும் ஏற்றது. அதிக அறவைத் திறனும் கொண்டது. கருங்கிளை நோய்க்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.

**மா**

1992-ஆம் ஆண்டு பையூர்-1 இரக 'மா' விவசாயிகளின் சாகுபடிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

**தக்காளி**

தக்காளியில் நடந்த இனப்பெருக்க ஆராய்ச்சியில் பையூர்-1 என்ற இரகம் மானாவாரிச் சாகுபடிக்கு 1988-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இது எக்டேருக்கு 36 டன் மகசூல் கொடுக்கவல்லது.

**மண் மற்றும் நீர் நிர்வாகம்**

மானாவாரி நிலங்களில் 'கோவை விதைக் கருவி'யின் மூலம் நிலக்கடலை விதைத்ததில் 15 சதவிகிதம் அதிக மகசூல் கிடைத்துள்ளது. மேலும், பயிர்களின் எண்ணிக்கையைச் சரியாகப் பராமரிக்க இக்கருவி உதவுகிறது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்தில் உள்ள களர், உவர் நிலங்களுக்கு ஜிப்சம் மற்றும் பசுந்தாள் உரமிட்டு வடிகால் வசதி செய்ததன் மூலம் களர் தன்மையைக் குறைத்து நெல்லின் மகசூல் 25 சதவிகிதம் அதிகரிக்க முடியும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், இந்நிலையத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 7 டன் அளவு பையூர்-1 விதை நெல் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மற்றும் வெளியிடப்பட்ட 8 இரகங்களும் கருவிதை விதைப் பெருக்கத்திற்குத் தொடர்ந்து வினியோகம் செய்யப்படுகின்றது. களர் உவர் நிலங்களைச் சீர்திருத்தும் முறைகளும், மரவள்ளிக் கிழங்கில் பயிர் வெளுப் பேற்படுத்தும் 'குளோரோசிசை' போக்கும் வழி முறையும், பருத்தியில் மழை நீரைத் தக்க வைப்பதற்கு இரட்டை வரிசை விதைப்பு முறையும் மற்றும் புதிய இரகங்களின் சாகுபடி முறைகளும் விவசாயிகளின் நிலங்களில் வயல் வெளிப் பரிசோதனைகளாக நடத்தப்பட்டு வருகின்றன.

பல்வேறு பயிர்த் திட்டச் சூழ்நிலைகளில் அதிக இலாபம் தரக்கூடிய பயிர்த் திட்டங்கள் விவசாயிகளின் வயல்களில் நிரூபணம் செய்து காட்டப்பட்டன.

உற்பத்தியினைப் பெருக்குவதற்கு ஏற்ற புதிய வழிமுறைகள் இந்நிலைய ஆராய்ச்சியாளர்கள் மூலம் 1989-90, 1990-91-ஆம் ஆண்டுகளில்தேசிய நீர்ப்பிடிப்பு மானாவாரித் திட்டத்தின் கீழ் பருகூர் மத்தூர், கெலமங்கலம் ஆகிய கிராமங்களில் அனுசரணை ஆராய்ச்சி செய்து காட்டப்பட்டன.

**விரிவாக்க மக்கள் தொடர்புப் பணிகள்**

வடமேற்கு மண்டலத்தின் முக்கிய நிலையமாகப் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம் விளங்குவதால் சேலம், தருமபுரி மாவட்டங்களின் அரசு வேளாண்மைத் துறையுடன் இணைந்து செயலாற்றுகிறது.

மாதந்தோறும் நடைபெறும் சேலம், தருமபுரி மாவட்டங்களில் மாதாந்திரத் தொழில் நுட்பப் பணி மனைகளில் விஞ்ஞானிகள் கலந்துகொண்டு, தொழில் நுட்பங்கள் கடைப்பிடிப்பதில் உள்ள பிரச்சினைகளை விவாதித்து ஆலோசனை வழங்குகின்றனர்.

மாவட்டத் தொழில் நுட்பக் குழுக் கூட்டங்களை ஆண்டுக்கு இரு முறை நடத்தி வேளாண் பிரச்சினைகளை விவாதித்து ஆலோசனைகளை வழங்குகிறது. ஆண்டிற்கு இரு முறை மண்டல ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க ஆலோசனைக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து, புதிய ஆராய்ச்சித் திட்டங்களை வகுக்கவும், விவசாயிகளின் பிரச்சினைகளை அறிந்து தீர்வு காணவும் வழிவகை செய்கிறது.

மாதந்தோறும் ஏழாம் தேதி விவசாயிகள் விவசாயப் பெண்மணிகள் மற்றும் கிராமப்புற இளைஞர்கள் பயன் பெறும் வண்ணம் காளான் பயிற்சி நடத்தப்படுகிறது. இதுவரை 400-க்கும் மேற்பட்டோர் இப்பயிற்சியின் மூலம் பயன் பெற்றுள்ளனர். தருமபுரி மாவட்டத்தின் முக்கிய பணப் பயிரான மா சாகுபடியின் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு விளக்கிக் கூற பயிற்சிகள், கருத்தரங்குகள், கருத்துக் காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மையில் பெண்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்ட ஆண்டுதோறும் டிசம்பர் 4-ஆம் நாள் வேளாண்மையில் பெண்கள் நாள் நடத்தப்பட்டு பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பின் முக்கிய அம்சங்களை விவசாயிகளுக்கு எடுத்துக் கூற சிறப்புப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகிறது. தானிய சேமிப்பு, உயிரியல் முறையில் பூச்சி நோய்க் கட்டுப்பாடு, எலி ஒழிப்பு முறைகள், நுண்ணுயிர் உரங்கள், ஊட்டமேற்றிய தொழு உரம், தென்னை நார்க்கழிவில் உரம் போன்ற மானாவாரித் தொழில் நுட்பங்களில் விவசாயிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் விரிவாக்கப் பணியாளர்களுக்கு மானாவாரி பயிர்ச் சாகுபடித் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இராகி, பருத்தி, சோளம், நெல், மற்றும் பல முக்கிய பயிர்களின் சாகுபடி முறைகளை விளக்கும் தொழில் நுட்பக் கருத்தரங்குகளை வேளாண் துறையுடன் இணைந்து நடத்துகிறது.

ஆண்டுதோறும் உழவர் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பண்ணைக் கருவிகள் பற்றிய பயிற்சியும் நடத்தப்பட்டு வருகிறது. மரப் பயிர்களுக்கு நுண்ணுயிர் உரங்கள் இடும் தொழில் நுட்பங்களை விளக்கும் பயிற்சிகள் சமூக நலக் காடுகள் திட்டத்தில் பணிபுரியும் வனச்சரக அலுவலர்களுக்கு அளிக்கப்படுகிறது.

திராட்சைச் சாகுபடியில் விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ள பயிற்சிகள் கிராமங்களில் நேரடியாக அளிக்கப்படுகிறது. புதிய வேளாண் மற்றும் தோட்டக்கலைத் தொழில் நுட்பங்களை விளக்கும் பல்வேறுபட்ட செயல் விளக்கங்களை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், விரிவாக்கப் பணியாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் அவ்வப்பொழுது செய்து காண்பித்து வருகிறார்கள்.

வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் புதிய கருத்துக்களும், செயல்பாடுகளும் விளக்கிக் கூறப்படுகிறது. இதற்காக பையூர் ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானிகள் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்து அளிக்கிறார்கள்.

புதிய தொழில் நுட்பங்களையும், அவ்வப்பொழுது ஏற்படும் பிரச்சினைக்குரிய தீர்வுகளையும் நாளிதழ்கள் மூலம் வெளியிட்டு விவசாயிகளுக்குத் தெரிவித்து வருகிறார்கள். வீடியோ படக்காட்சி மூலம் காளான் வளர்ப்பு, தென்னையில் பூச்சித் தடுப்பு முறைகள், வேம்பின் பயன்கள், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள், போன்ற சிறந்த தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லி வருகின்றனர்.

வேளாண்மை மற்றும் தோட்டக் கலைத் தொழில் நுட்பங்களை விளக்கும் வெளியீடுகள் அவ்வப்பொழுது வெளியிடப்பட்டு வருகின்றன. அவ்வப்பொழுது காணப்படும் வயல் வெளிப் பிரச்சினைகளுக்கு நேரிலேயே சென்று தீர்வு காண, நிலைய விஞ்ஞானிகள் குழுவாக வயல்களுக்குச் சென்று விவசாயிகளின் பிரச்சினைகளை நேரிலேயே கண்டறிந்து ஆலோசனை வழங்குகிறார்கள்.

காரிப் மற்றும் ரபி பருவத்திற்குக் கடைப்பிடிக்க வேண்டிய சாகுபடி முறைகளை முன் கூட்டியே திட்டமிட்டுச் செயலாற்ற, தருமபுரி, சேலம் மாவட்டங்களில் நடத்தப்படும் முன் பருவப் பயிற்சி முகாம்களில் கலந்துகொண்டு தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

கிராமங்கள்தோறும் கருத்துக்

## நன்றியுள்ள பிராணிகளுக்காக...



இந்தப் படத்தில் உள்ளவைகளெல்லாம் மைல் கற்களின் அணிவகுப்புப் போலத் தெரிகிறதல்லவா? ஆனால், அவையல்ல இவை! தமது நாய்களுக்காக வெள்ளையர்கள் அமைத்துள்ள கல்லறை அல்லது நடுகற்களே மேலே காணப்படுபவை.

ஒதூர் கால்நடைப் பண்ணைக்குள்ளே இவை காணப்படுகின்றன. ஜாக், விக்டர், பில், விட், சல்லி, பஞ்ச், பிட்டி, நான்ஸி, ராணி என ஒவ்வொரு கல்லின் மீதும் அதன்கீழ் புதைக்கப்பட்டுள்ள நாயின் பெயரும், அதன் பிறப்பு-இறப்பு விவரமும் செதுக்கப்பட்டுள்ளது.

கடைசியாக உள்ள ராணி என்ற ஒன்றைத் தவிர, மற்றவை யாவும் ஆங்கிலேயர்களால் மிகுந்த அன்போடு வளர்க்கப்பட்டவை. 'இவற்றில் இயற்கையாக இறந்தவைகளும் உண்டு; இந்தியாவை விட்டுச் செல்லும்போது, மற்றவர்களிடம் விட்டுப்போக மனமில்லாமல் ஆங்கிலேயர்களால் சுட்டுக் கொல்லப்பட்டவைகளும் உண்டு' என்று கூறப்படுகிறது.

காட்சிகள், முகாம்கள், கிராமக் கூட்டங்கள், செயல் விளக்கங்கள் போன்றவை அவ்வப்பொழுது நடத்தப்பட்டு வருகின்றன. பிளஸ்-2 படிக்கும் மாணவர்கள், விவசாயம் டிப்ளமா படிக்கும் மாணவர்கள் மற்றும் பல கல்வி நிலையங்களிலிருந்தும் நாள்தோறும் பண்ணைக்கு வருகை தரும் மாணவர்களும், பயிற்சியாளர்களுக்கும், அவரவர்களின் தேவைக்கேற்பச் சிறப்புப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்று வரும் பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு, தமிழ்நாடு அரசு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம், மத்திய பட்டு ஆராய்ச்சி வாரியம், சமூக நலக்காடுகள் நிறுவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து ஆண்டுக்குச் சுமார் 38 இலட்சம் ரூபாய் நிதி உதவி கிடைத்து வருகிறது.

தமிழ்நாட்டில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஜெ.ஜெ. நெல் ரகம் தருமபுரி மாவட்டத்தில் 6 இடங்களில் பயிரிடத் திட்டமிடப்பட்டிருப்பதாக இந்த ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானி டாக்டர் ஆர். ராஜகோபாலன் கூறுகிறார். இந்த நெல் 110 நாளில் வளரக் கூடியதாகும்.

இதைத்தவிர பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் ஆண்டொன்றுக்கு 200 கிராம் எடையுள்ள 60 ஆயிரம் உயிர் உரப் பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு ஒரு பொட்டல உரம் மூன்று ரூபாய் வீதம் விற்பனை செய்யப்படுகிறது.

களை எடுக்கும் கருவியும், கரும்புக்கு மருந்து தெளிப்பான் கருவியும் புதிதாக இந்த மையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் உழவடிக்க, பார்பிடிக்க தேவையான பண்ணைக் கருவிகளும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறைந்த செலவில் கிராமங்களிலேயே இவற்றைத் தயாரிக்க முடியும்.

30 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மண்டல ஆராய்ச்சிக் கவுன்சில் 6 மாதங்களுக்கு ஒருமுறை கூடி விவாதிப்பதாகவும், அதன் அடிப்படையில்தான் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார் டாக்டர் ராஜகோபாலன்.

இந்த ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது 24 விஞ்ஞானிகள் பணிபுரிகிறார்கள். இந்த நிலையத்தின் ஆராய்ச்சி மற்றும் அரும்பணியின் மூலம் சேலம், தருமபுரி மாவட்டங்களிலிருந்து விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கதும் பெருமைப்படக் கூடியதுமாகும்.



**பயந்துவிடாதீர்கள்!**

இந்தப் படம், பார்க்கவே அச்சமாக இருக்கிறதல்லவா? இதைப் போல தருமபுரி மாவட்டத்தின் கோயில்களில் மட்டுமல்ல; கிராமங்களிலும், சாலையோரங்களிலும்கூட ஏராளமான முனீசுவரன், முரசன் போன்றோரின் முறுக்கு மீசை உருவங்கள் நம்மை அச்சுறுத்தக் காணலாம். இந்தப் படத்தில் காட்சி தருபவர் தருமபுரி- ஒகனேக்கல் சாலையில் உள்ள 'அக்ரகாரம் முனியப்பன் சுவாமி'.

## முதல் பக்க அட்டை:

டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாளையொட்டி (ஜனவரி 17-ஆம் நாள்) அவருடைய திருவுருவப் படம் அலங்கரிக்கிறது.

## கடைசிப் பக்க அட்டை

தென்பெண்ணையாற்றில் ரூ.2 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது கிருஷ்ணகிரி அணை. இதன்மூலம் தருமபுரி மாவட்டத்தில் 10,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கிறது இப்போது!

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits**
**(Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



# காலத்தை வென்ற காவிய நாயகன்



காலத்தை வென்றிருக்கும்
சங்கப் பாட்டே!
காவியத்தின் கருப்பொருளே!
கவிதை நெஞ்சே!
ஞாலத்தில் மனிதாபி
மானம் என்னும்
நல்லுணர்வின் நடமாடும்
வடிவே! அன்புக்
கோலத்தில் வருகின்ற
தேவன் நீதான்!
கொடையினிலே உனக்குநிகர்
நீயே! வெற்றி
வேழத்தின் நடைகொண்ட
வேந்தே! எங்கள்
விழிபருகும் எழில்வடிவே
வாழ்க நீடு!

கவிஞர் இளந்தேவன்



பொங்கல் வாழ்த்துக்கள்!

**ஐடியல்**
**ஸ்பின்னிங் மில்**
பட்டுகேனாம்பட்டி

எங்கள் மனமுவந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

**ஸ்ரீ பழனியப்பா**
**சேகோ பேக்டரி**
செம்பியானூர்



எங்கள் இதயங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

**திருவாளர்கள்,**
**சதர்ன் டைல்ஸ் (பி)**
**லிமிடெட்**

கோம்பர்



**விளம்பர எண்: 1/93**

தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளை ஆட்சிப் பணியில் தொகுதி I-B-இல் அடங்கிய உதவி ஆணையர் (Assistant Commissioner) பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 8.2.1993 அன்று மாலை 5.45 வரை வரவேற்கப்படுகின்றன.

**இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்**

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000.

**காலியிட எண்ணிக்கை:** 11

| | |
|---|---|
| ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | 2 |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | 2 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப் பட்டுள்ளது) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | 3 |
| பகிரங்கப் போட்டி | 4 (ஒரு காலியிடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது) |

**குறிப்புகள்:** (i) தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அக்காலியிடங்கள் ஆண் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

(ii) இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களை விட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 32 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம. மற்றும் பி.வ.-க்கு வயது வரம்பு இல்லை.
(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன).

**தகுதி:** (15.12.1992 அன்றுள்ளபடி): கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

i) a. A degree in Arts, Science and Commerce or a degree of B.O.L. of Annamalai University or B.B.A. of Madurai Kamaraj University or B.Litt. of University of Madras or B.B.M. or B.Litt. of Bharathiyar University; and

b. A degree in Law;

and

ii) Must be actually practising as an Adcovate or as a Pieader in a Court of Civil or Criminal Jurisdiction for a period of not less than three years.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'-களில் தரப்பட்டுள்ளன. ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., பி.வ., தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை'-களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.1.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.1.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் '26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/20/MS/93

**TNPSC** விளம்பர எண். 2/93

தமிழ்நாடு மருத்துவப் பணியில் அரசு மருத்துவமனைகளில் உணவு முறையாளர் (Diatitian) பதவிக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 8.2.1993 அன்று மாலை 5.45 வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1600-50-2300-60-2660.

**காலியிட எண்ணிக்கை:** 1 (பகிரங்கப் போட்டி)

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள் அவர்களைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்ப வர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 40 வயதிற்குக் குறைவாக. (சலுகைகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன)

Qualification as on 29.12.1992 (The following or its equivalent)

i) B.A. or B.Sc., degree with Chemistry or Physiology as one of the subject or a degree in Domestic Science;

and

A diploma in Dietitics of the All Indian Institute of Hygiene and Public Health, Calcutta or any other Institution or body recognised by the Government of Tamil Nadu or the University Grants Commission for the purpose of its grant.

or

ii) A degree in Home Science

or

iii) B.Sc., degree in Nutrition and Dietitics of the Madras University.

or

iv A Post Graduate Diploma in Applied Nutrition and Public Health of the Madurai-Kamaraj University, Madurai.

Provided that, other things being equal preference shall be given to candidates conversant with the Dietitics and culinary habits of the people of the State and to persons who have rendered Social Service.

Provided further that, other things being equal, preference will be given to the released Emergency Commissioned Officers, released Short Service Commission Officers and other Ex-Service men.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், போன்றவர்களுக்கு அளிக்கப்படும் வயது மற்றும்/அல்லது தகுதி மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ **பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண்** ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.1.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.1.1993 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியின் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/21/MS/93

## தருமபுரி மாவட்டக் கோயில்கள்



தென்கரைக்கோட்டை



தேன்கனிக்கோட்டை



எலத்தகிரி

**தாய்ப்பாலுக்கு நிகர் வேறில்லை!**
**ஆவின் பாலுக்கும் நிகர் வேறில்லை!!**

---

தருமபுரி மாவட்டத்தில் 1.65 இலட்சம் பால் உற்பத்தியாளர்களின் நம்பிக்கை நட்சத்திரம் தருமபுரி பால் பண்ணை. 50,000-க்கும் அதிகமான பால் நுகர் வோருக்குத் தரமான பால் வழங்கும் அட்சயப்பாத்திரம் தருமபுரி பால்பண்ணை.

1000-க்கும் அதிகமான கிராமிய பால் உற்பத்தியாளர்களையும், பால் நுகர் வோர் நிறைந்த நகரங்களையும் இணைக்கும் நல்லதோர் இணைப்புப் பாலம்.

ஐ.எஸ்.ஐ. முத்திரை கொண்ட தரமான பால்பவுடர்.

அக்மார்க் தர முத்திரை கொண்ட மிகச் சிறந்த ஆவின் நெய்.

வெண்ணெய், பால்கோவா, நறுமணப்பால் என அகில இந்தியப் பால் நுகர் வோரின் தேவையைப் பூர்த்தி செய்யும் 'அணில்' சேவை.

பால் உற்பத்தியில் தமிழகத்தில் நான்காவது இடம் பெறும் தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் முதல் இடம் நோக்கி முன்னேறத் துடிக்கும் செயல்முறைத் திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன.

உறுப்பினர்கள் விழிப்புணர்விற்கும், சங்கங்கள் மேம்பாட்டிற்கும் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்கள் செயல்பாடு.

1.65 இலட்சம் உறுப்பினர்கள் 550-க்கும் அதிகமான பால் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கமாகிச் செயல்படும் நல்லதோர் கூட்டுக் குடும்பம் 'தருமபுரி மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியமாகும்.

---

தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்,
கிருட்டிணகிரி - 635 002.

---

# ஒன்றே போதும்!

ஆம், இந்தியாவில் ஒவ்வொரு நிமிடத்திற்கும் 49 குழந்தைகள் பிறக்கின்றன! இதனால் ஆண்டுக்கு 1.70 கோடி வீதம் மக்கள் தொகை கூடிக்கொண்டே போகிறது. உலகின் மொத்த நிலப் பரப்பில் 2.4 சதவிகிதமே உள்ள நமது நாட்டின்



மக்கள் தொகையோ உலக மக்கள் தொகையில் 16 சதவிகிதமாகும்!

## அடுத்த இதழிலும்...

தருமபுரி மாவட்டம் தொடர்பான கட்டுரைகள், சுவையான செய்திகள் முதலியன அடுத்த இதழிலும் தொடர்கின்றன!



# தருமபுரி மாம்பழமே!

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஜீனூரில், அரசு தோட்டக்கலைப் பண்ணை 122.38 எக்டேர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, திம்மாபுரத்திலும் வேறோர் பண்ணை உண்டு.

ஜீனூர் தோட்டக் கலைப் பண்ணையில் மா, கொய்யா, சப்போட்டா, நாவல், எலுமிச்சை, சீதா ஆகிய கனிதரும் மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. இந்தப் பண்ணையைப் பொருத்தமட்டில், மா இன ஒட்டுச்செடி வளர்ப்பே முக்கியமானதாகும்; பெங்களூரா, காளப்பாடு, மல்கோவா, காதரி, பீதர், செந்தூரா, நீலம் ஆகிய ஒட்டு மாங்கன்றுகள் இந்த மண்ணில் நல்ல வளர்ச்சி காண்கின்றன.

''சேலத்து மாம்பழமே'' என்று பாடியதெல்லாம் அந்தக் காலம்; தருமபுரி பிரிந்த பிறகு, அப்பெருமையைச் சேலம் இழந்து விட்டது என்றே கூறலாம். அண்மையில்- அகில இந்திய மாம்பழக் கண்காட்சி ஒரு வார காலம் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது அல்லவா? அதில்- அதிக மாங்கனி காய்ப்பிலும், அதிகச் சுவையுள்ள மாங்கனி உற்பத்தியிலும் தருமபுரி மாவட்டமே முதல் பரிசைப் பெற்றது.

வறட்சியைத் தாங்கும் சக்தி மாவுக்கு மட்டுமே உண்டு; இதனால்தானோ என்னவோ ஜீனூர் பண்ணையில் தண்ணீர்த் தட்டுப்பாடிருந்தும்கூட ஒட்டு மாங்கன்றுகள் செழித்து வளர்ந்திருக்கின்றன.

இந்த நேரத்தில் நாம் இன்னொன்றை முக்கியமாகச் சொல்லியாக வேண்டும். இந்தியாவிலேயே அதிக மாங்கனி தரும் மாநிலம் தமிழ்நாடுதான். தமிழ்நாட்டிலேயே அதிக மாங்கனி தருகின்ற மாவட்டம் தருமபுரிதான். தருமபுரியிலேயே அதிக மாங்கனி காய்க்கின்ற வட்டம் கிருஷ்ணகிரிதான். கிருஷ்ணகிரி வட்டத்திலேயே அதிகமாக மா பயிரிடும் ஊராட்சி ஒன்றியம், பருகூர்தான்!

# பொங்கல் பொங்குக!

—பி.வி. கிரி

உழைப்பின் அருமை
உலகம் உணர்ந்திட
உழுது வாழ்வோர்
உள்ளம் மகிழ்ந்திட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

பாடு பட்டவர்
பலனைப் பெற்றிட
நாடும் நகரமும்
நலமாய் விளங்கிட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

பெண்ணின் பெருமை
பேணி வளர்த்திட
விண்ணிலும் மண்ணிலும்
விஞ்ஞானம் வளர்ந்திட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

இந்திய ஒற்றுமை
இமைபோல் காத்திட
செந்தமிழ் எங்கணும்
செழித்து வளர்ந்திட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

மதுவின் அடிமை
மயக்கம் தெளிந்திட
பொதுமைப் பூங்கா
பூத்துக் குலுங்கிட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!

எங்கும் அமைதி
இனிதே நிறைந்திட
பொங்கல் எங்கணும்
பொங்கி வழிந்திட
பொழுது புலர்ந்தது
புதுமை மலர்ந்தது!



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழ

